

எழுத்தாளர்களும் இணையப் பாவனையும் 04



அஷ்ஷெய்க் எம்.எம். நயீமுத்தீன் (நளீமி) 05

நவீன தேவைகளுக்கேற்ற இஸ்லாமிய ஆளுமைகளை உருவாக்குவதே இன்றைய தேவையாகும்



மொரோக்கோ: 11


# மீள்பார்வை

இலங்கை முஸ்லிம்களின் தனித்துவக் குரல்

15 வருடங்களையும் தாண்டி...

இதழ் - 225 ★ 01 ஜூலை 2011 ★ வெள்ளிக்கிழமை ★ ஷஃபான் 1432 ★ விலை 30.00



AJ

Dealers In Textiles & Specialist For Abaya Materials

அபாயா தைப்பதற்கான துணி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

J.B SUPER MARKET
196E, Keyzer Street, Colombo - 11.
T.P. 2446696





# கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை



மில்லியனர்களின் (கோடீஸ்வரர்களின்) எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வரும் 10 ஆசிய நாடுகளில் இலங்கை 6 ஆவது இடத்தில் உள்ளது.

ஹொங்கொங், வியட்னாம் ஆகியன இதில் முதலிடத்தில் உள்ளன. அந்நாடுகளில் 33 சதவீத வருடாந்த அதிகரிப்பு காணப்படுவதாக அமெரிக்க வங்கியின் செல்வ வள முகாமைத்துவப் பிரிவான 'மெரில் லின்ச்' அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

ஹொங்கொங், வியட்னாமுக்கு அடுத்ததாக இந்தோனேஷியா, சிங்கப்பூர், இந்தியா ஆகியன உள்ளன. இவற்றுக்கு அடுத்த இடத் தில் இலங்கை உள்ளது. (பக்.19)




Knowledge Box ஊடக நிறுவனத்தின் அங்குரார்ப்பண வைபவம் சென்ற 19-06-2011 ஞாயிறன்று கொள்ளுப்பிட்டி சுற்றுலாத்துறை அதிகார சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவரான அஷ்ஷெய் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) இதனை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். வைபவத்தில் கலந்துகொண்ட நிறுவனப் பணிப்பாளர்களுள் ஒருவரான யூஸுப் முப்தி, முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், ஜாமிஆ நளீமிய்யா பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, ஜம்இய்யதுல் உலமா பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் முபாரக் மதனி, புரவலர் ஹாஷிம் உமர், ஊடக நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்கர் கான் ஆகியோரை இடமிருந்து வலமாகக் காணலாம். கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரும் காணப்படுகின்றனர்.

## வறுமைக் கோட்டின் கீழ் வடக்கு மக்களில் அரைவாசிப் பேர்: ஐ.நா. அறிக்கை

வடக்கிலுள்ள தமிழ் மக்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே வாழ்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. சபையின் விரைவான மீட்சியுடன் இணைந்த மனிதாபிமான அறிக்கையிலேயே ஐ.நா. இதனைத் தெரிவித்துள்ளது.

இன்னும் மீளக் குடியமர்த்தப்படாது இருக்கும் மக்களில் 46 வீதமானோரும் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே உள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது. மே மாதம் 31 ஆம் திகதி வரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில், யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் மீளக் குடியமர்ந்த மக்களில் 50 சத வீதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே வாழ்கிறார்கள்.

## நடேசனின் மின்னஞ்சல் உடைக்கப்பட்டது!



விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் பா. நடேசனின் மின்னஞ்சலில் ஊடறுப்பு நடத்தப்பட்டு அது உடைக்கப்பட்டுள்ளதாக சிங்கள நாளேடொன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்களில் ஒன்றாக அன்று செயற்பட்ட அனைத்துலக செயலகத்தில் ஊடகங்களுக்கான இணைப்பாளராக விளங்கிய நந்து என்று அழைக்கப்படுகின்ற நந்தகோபன் என்ற நபர் ஊடாகவே இந்த மின்னஞ்சல் உடைப்பை அரசாங்க புலனாய்வுத் துறை மேற்கொண்டுள்ளதாக அந்த சிங்கள நாளேட்டின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பக்.02)


கொலஸ்ட்ரோல் உகந்தது.

500g - 210.00
400g - 150.00

ALL CEYLON JAMIYYATHUL ULAMA
Halaal - Sri Lanka




P.M. MOHAMED ALI & CO.
No. 187, Prince Street, Colombo 11.
Tel: 0112 430499, 0112 446573 Fax: 0112 439477

Safety & Security

Lemen Brand
(Brass and Stainless Steel Padlocks)

Lemen

Guaranteed

Importers and Manufacture
Tel: 0773435700, 0112431356 Fax: 0112321361
Dealers Islandwide

FAIZ BRASS
IMPORTED FB BRAND BRASS DOOR FITTINGS
Pad Locks and Gate Locks






மீள்பார்வையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட குறுஞ்செய்தி மூலமாக வாசகரின் கருத்தைப் பெறும் முயற்சிக்கு நீங்கள் அளித்துவரும் ஆதரவுக்கு ஜஸாகுமுல்லாஹ். எனினும், வெறுமனே மீள்பார்வையை வாழ்த்துவதோடு மட்டும் நின்றுவிடாது வெளிவரும் செய்திகள், ஆக்கங்கள் தொடர்பான உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (ஆ-ர்)

முஸ்லிம்கள் மஹிந்த அரசை ஆதரிப்பது அவசியம் என்கிறார் அமைச்சர் ஹக்கீம். அமைச்சராகுமுன்பு மஹிந்த முஸ்லிம்களுக்கு ஆபத்து என்றார். அமைச்சரானதும் நல்லது என்கிறார். ஹக்கீமுக்கு நல்லதா? முஸ்லிம்களுக்கு நல்லதா? முஸ்லிம்களின் நல்லது கெட்டதை அமைச்சு தீர்மானிப்பது நல்லதா? இன்னும் எத்தனை காலத்திற்கு இந்தக் கேவலம் தொடரப் போகிறதோ? **-உஸ்மான், மூதூர்.**

தஃவாப் பார்வை தொடர்ந்தும் வருவதையிட்டு மகிழ்வடைகிறேன். தஃவாவின் முதற்படி பற்றி கூறியதற்கு ஜஸாகுமுல்லாஹ் கைரன். **-ஸல்மா பின் ஸப்னா, வடுபிடிய.**

கடந்த இதழில் ஆலிப் அலியினால் எழுதப்பட்ட ஆக்கம் சிறப்பாக இருந்தது. தேடல் பகுதியில் இடம்பெற்ற ஹதீஸ் பலவீனமானது என்று இஸ்லாமிய அறிஞர்களால் குறிப்பிடப்படுகின்றது. இது குறித்தும் கவனிக்கவும். **-மீள்பார்வை வாசகன்.**

மீள்பார்வை இதழ் 224, 12ம் பக்கத்தில் 'யார் இவர்கள்' எனும் ஆக்கம் விமர்சிக்கத்தக்கது. தற்போது பல்கலைக்கழகம் அனாச்சாரக் கழகமாக உள்ளது. அதை விமர்சிப்பது காலத்தின் தேவையாகும்.
**-ஏ. ரஹ்மான், அக்கரைப்பற்று.**

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி என்ற தலைப்பில் வெளிவந்த ஆக்கம் சிறப்பாக இருந்தது. அதுபோல கல்வியியல் கல்லூரிகள் மற்றும் தமிழ், முஸ்லிம், சிங்களப் பாடசாலைகளிலும் மாற்றம் ஏற்பட முயற்சி செய்யக்கூடியவர்கள் யாரும் இல்லையா? **-எம்.வை.எம். பஷீர், அம்பலாந்தோட்டை.**

இலங்கையில் முஸ்லிம்களின் குடியிருப்பு, கலாசாரம், கல்வி மற்றும் ஏனைய துறைகளுக்காக உழைத்த முஸ்லிம் தலைவர்களுக்கென மீள்பார்வையில் ஒரு பக்கத்தை ஒதுக்கி அவர்களின் வாழ்க்கை வரலாறுகள் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டால் மிகவும் சிறப்பாக இருக்கும். **-எம்.என். அன்வர் ஸதாத், வாழைச்சேனை-05.**

மீள்பார்வையில் மீண்டும் பத்வா பகுதி பிரசுரிக்கப்படுமா?
**-அபூபக்கர் நளீம், இறக்காமம்.**

தேசப்பற்றும் நம்மை அடையாளப்படுத்தலும் (கருத்து மாற்றுக் கருத்துப் பகுதி) ஆரோக்கியமான விவாதங்களாக அமையவில்லை. எனவே, தயவு செய்து பக்கங்களை வீணடிக்க வேண்டாம்.
**-அன்பஸ், கெலிஓய.**

மீள்பார்வையின் பல வாசகர்களின் வேண்டுகோளான கேள்வி - பதில் பக்கத்தை இன்னும் காணவில்லையே? கடந்த இதழில் 6ம் பக்கத்தில் 'பொலிஸ் நிலையங்களது...' எனும் தலைப்பிலான செய்தியில் பெண் பொலிஸாரின் புகைப்படத்தை போடாமல் இருந்திருக்கலாமே. **-பதீலா, கம்பளை.**

# பெண்களுக்கான தனித்துவ சிகிச்சை நிலையம்

கடந்த மீள்பார்வை இதழிலே 'பெண்களுக்கான தனித்துவ சிகிச்சை நிலையம்' என்ற கட்டுரை என் மனதைக் கவர்ந்தது. எனது நீண்டகால மனக்குமுறலை வெளிப்படுத்துகின்ற சந்தர்ப்பமாகவும் அது அமைந்தது.

இலங்கையில் சுகாதார சேவையில் பல முன்னேற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றன. ஆனாலும் அண்மையில் பரவியிருக்கின்ற டெங்குக் காய்ச்சல், மலேரியா, மஞ்சல் காய்ச்சல் என்பவற்றையும் பயங்கர நோய்களையும் குழந்தை மரணங்களையும் பார்க்கின்றபோது அதனை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். இது பொதுமக்களின் உதவி ஒத்தாசையுடன் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.


இந்நிலையிலே எமது முஸ்லிம் சமூகத்தின் பங்களிப்பு என்னவென்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். விஷேடமாக முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு இதில் மிக அதிகமாகக் காணப்பட வேண்டும். உதாரணமாக டெங்குச் காய்ச்சலை எடுத்தால் டெங்கு நுளம்பின் பரவலை தடுப்பது பற்றிய முழு அறிவையும் வீட்டுத் தலைவியான ஒரு பெண் பெற்றிருக்க வேண்டும். நாங்கள் அதனை ஒழிப்பதற்கு வீட்டை மற்றும் வீட்டு வளவை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

அவ்வாறே இஸ்லாமிய அமைப்புக்கள், மாதர் சங்கங்கள், பாடசாலை அபவிருத்தி சங்கங்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் என்பவற்றை நடாத்த வேண்டும்.

இவ்வாறு செயற்படும்போது தூய்மையான நிய்யத்துடன் அல்லாஹ்வுக்காக செயற்படல் வேண்டும். இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களை பேணிய பெண்களாக இப்பணியில் ஈடுபடுவது மிக அவசியம். நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமை என்ற இறைவாக்கிற்கேற்ப இதுவும் ஓர் உயர்ந்த தஃவாவாகும்.

**உம்மு முனீப், கொழும்பு-12.**

# கையடக்கத் தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் குறைவடையும்



கையடக்கத் தொலைபேசிக்கான ஆகக் குறைந்த' கட்டணத்தை மேலும் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் அனூஷ பெல்பிட்ட குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி தற்போதுள்ள கையடக்கத் தொலைபேசிக்காக தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் குறைந்தபட்ச கட்டணமானது 2 ரூபாவை எதிர்வரும் மாதம் முதல் நிமிடம் ஒன்றுக்கு ஒரு ரூபா 50 சதம் (1.50) வரை குறைக்க நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிரந்தர தொலைபேசி இணைப்புக்களுக்கு சமாந்திரமாக கையடக்க தொலைபேசி இணைப்புக்களிலும் பாரிய வளர்ச்சியொன்றைக் காணக்கூடியதாக உள்ளது எனவும் நாட்டில் தற்போது தொலைபேசி பாவனையானது 20 மில்லியனுக்கும் 17 மில்லியனுக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் காணப்படுவதுடன் அதில் அதிகமானவை கையடக்கத் தொலைபேசி பாவனை என பணிப்பாளர் நாய கம் அனூஷ பெல்பிட்ட மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நடேசனின்...

(01ம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் மேற்கொண்டிருந்த இராஜ தந்திர தொடர்புகள் மற்றும் பிற தொடர்பாடல்கள் தொடர்புடையவர்கள் என அனைத்து தகவல்களையும் அரச புலனாய்வுத்துறை இதனூடாக திரட்டியுள்ளது.

குறிப்பாக புலிகளோடு தொடர்புடைய இராஜதந்திரிகளை மட்டுமல்ல, அரசியல் துறையோடு தொடர்புடைய புலம்பெயர் விடுதலைப் புலி செயற்பாட்டாளர்களையும் இலக்கு வைத்துள்ளது.

பிரான்சில் இருந்து ஈழ முரசு லீக்ஸ் எனும் பெயரில் வெளிவரும் பத்திரிகைத் தொடரானது பா. நாடேசன் அவர்களுடைய மின்னஞ்சல் பரிமாற்றங்களை அடிப்படையாக கொண்டே எழுதப்பட்டு வருவதாக அந்த சிங்கள நாளேடு குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உடனடியாக தொழில்வாய்ப்பை பெற்றுத்தரும் அல்லது சுயமாக தொழிலொன்றை செய்வதற்கு உங்களை தயார்படுத்தும் 100% செயல்முறைகளுடன் கூடிய குறுகியகால பாடநெறிகள்



DIPLOMA IN
AIR CONDITIONING & REFRIGERATION
தமிழ் மொழி மூலம்
Learn with a highly qualified & Experienced Lecturer in a 100% Practical environment
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிறந்த வருமானத்தை ஈட்டித்தரும் தொழில்வாய்ப்பொன்றை பெற்றுக் கொள்வதற்கேற்றவாறான
100% செயல்முறைகளுடன் கூடிய பாடநெறி
FOR MORE INFORMATION & REGISTRATION - CONTACT 0716 606 755
Duration: 03 Months
(Weekdays/Weekends)
Course Fee: 17,500/=
STUDY FREE: HOUSE WIRING



குறுகிய காலத்தில்
HARDWARE ENGINEER
ஆவதற்கு ஓர் அரிய வாய்ப்பு
Diploma in
HARDWARE ENGINEERING with NETWORKING
Duration: 06 Days
Course Fee: 7,000/=
(உணவு தங்குமிட வசதி அடங்கலாக)
அனுமதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

Diploma in
Hardware & Software Solution
MOBILE PHONE REPAIRING
Free: DIAGRAM BOOK & CDs
Hardware, Software
என்பவற்றுக்கு வெவ்வேறான விரிவுரையாளர்கள்
Duration: 12 Days (Full/Part Time)
Course Fee: 12,000/=
அதிக வருமானத்தை ஈட்டித் தரும் தொழில்சார் பாடநெறி



Diploma in
Auto CAD
Computer Aided Designing & Drafting
2D & 3D 2007/08/2009
Duration: Full Time: 30 Days | Part Time: 3 to 4 Months
Fees: 14,500/= | Adjustable Time Table
Free : Saudi, Qatar, Dubai Drawings and CD
Special Training for House Planning & Drafting
Individual & Night Classes available
Free Study Pack with CDs
தூர பிரதேச மாணவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு

Golden College Learning for Success
GOLDEN COLLEGE
23, Suduhumpola Raod, Kandy. Tel: 0812 20 55 44
0777 912 597
0718 032 967

Guest Column

அதிதி பக்கம்



# இஸ்லாமும் சமூக மாற்றமும்

கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி
பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா

சமகால உலகும் அதன் சமூக அமைப்பும் மிகப் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்நோக்கு கின்றது என்ற உண்மையும், அது ஒரு மாற்றத்தை வேண்டி நிற்கின்றது என்பதும் இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படும் ஒரு யதார்த்தமாகும்.

20ம் நூற்றாண்டின் முன்னணி வரலாற்று அறிஞர் கள், சமூக சிந்தனையாளர்கள் எனக் கருதப்படும் ஒஸ்வெல்ட் ஸ்பெங்லர் அவரது The Decline and the West எனும் நூலிலும் ஆர்னல்ட் டொய்ன்பீ அவரது A Study of History என்ற நூலிலும் ஸொகராகின் அவரது The Crisis of our age எனும் நூலிலும் மேற்கின் சடவாத, லோகாயத நாகரிகமானது -அது எத்தனை அரசியல் பலத்தையும் பொருளாதார வளங்களையும் பெற்றிருந்தபோதிலும்- பிரச்சினைகள் நிறைந்ததொரு சோதனைமிக்க காலகட்டத்தில் உள்ளது என்ற உண்மையை மிகத் தத்ரூபமாக விளக்கியுள்ளனர்.

இந்த வரலாற்று, சமூகவியல் ஆய்வாளர்கள் முன்னறிவிப்புச் செய்த காலகட்டத்தை விட 21ம் நூற்றாண்டின் இந்த ஆரம்பப் பகுதியில் இந்நிலை மிகவும் தீவிரமடைந்துள்ளது.

போர்கள், இனமோதல்கள், இயற்கை அழிவுகள், சுற்றாடல் மாசடைதல், குடும்பக் கட்டுக் கோப்பின் சீர்குலைவு, பெருகி வரும் தற்கொலைகள், அதிகரித்து வரும் போதைப் பாவனை, பாலியல் வன்முறை கள் எனப் பல பிரச்சினைகள் மனித இனத்தின் அமைதியும் நிம்மதியும் நிறைந்த எதிர்காலத்தை கேள்விக்குறிக்கு ஆளாக்கியுள்ளது.

இந்நிலையில் சமூக மாற்றம், மாற்றீடு பற்றி அதிகம் பேசப்படுகின்றது. சமூக மாற்றத்திற்கான சித்தாந்தங்கள், கோட்பாடுகள் வகுக்கப்படு கின்றன. சமூக மாற்றம், அதற்கான வழிமுறைகள், அது தொடர்பான சமூக நியதிகள் அனைத்தும் மேற்கத்திய நோக்கிலேயே விளக்கப்படு கின்றன. சமூக மாற்றத்தை இஸ்லாம் எந்த வகையில் நோக்குகின்றது. இது எந்த வகையில் மேற்கத்திய சடவாத நோக்கிலிருந்து வித்தியாசப்படு கின்றது என்பது பற்றிய சில முக்கிய அடிப்படைகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமூக மாற்றம் பற்றிய மேற்கத்திய நோக்கு முற்றிலும் சடவாத கண்ணோட்டத்திலும் லோகாயத அணுகுமுறையிலும் அமைந்தது. வாழ்வின் ஒழுக்க, ஆன்மீக பரிமாணங்களை அது புறக்கணிக்கின்றது. சமூகத்தில் புற ரீதியான சில மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமும் சமூக நிறுவனங்களை புனர்நிர்மாணம் செய்வதன் மூலமும் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதே மேற்கத்திய அணுகுமுறை யாகும்.

புவி பிரகடனப்படுத்திய புத்துலக அமைப்பு (New World order) பிரான்ஸிஸ் புகோயாமாவின் The End of History and the last man (1992) ஸமுவேல் ஹன்டிங்டெனின் The Clash of Civilization (1996) போன்ற நூல்கள் அனைத்தும் நவீன மேற்குலகம் கனவு காணும் சமூக மாற்றத்தின் முக்கிய பரிமாணங்களை விளக்குகின்றது. மனிதனை மையமாகக் கொள்ளாத சமூகக் கட்டுக்கோப்பை, மாற்றத்தின் மையமாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரத்தில் மனிதனை வெறுமனே நுகர்வுப் பிராணியாகக் கருதுகின்ற அணுகுமுறையை இது கொண்டுள்ளது.



இஸ்லாத்தின் சமூக மாற்றம் பற்றிய கோட்பாடு இதற்கு முற்றிலும் முரணானது. அது உலகில் அல்லாஹ்வின் பரதிநிதியான மனிதனை உடல், உள்ளம், ஆத்மா ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய முழுமை நோக்கில் அணுகி, அவனை மையமாக வைத்து குடும்பம், சமூகம், சர்வதேசிய அமைப்பு என்ற படிமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்த விழைகின்றது. சமூகத்தின் கட்டுக்கோப்பு, நிறுவனங்களில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் யதார்த்தமான, உறுதியான, நிலையான சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பது இஸ்லாத்தின் கருத்தாகும்.

சமூக மாற்றத்திற்கு மனித னைப் பற்றிய முழுமைத்துவப் பார்வை அடிப்படையாகும். இந்த முழுமைத்துவப் பார்வையின் அடிப்படையில் உருவான தனிமனிதர்களே மக்காவில் உருவாகிய சமூக மாற்றத்திற்கும், மதீனாவில் தோன்றிய ஆரம்ப கால இஸ்லாமிய சமூகம், ஆட்சியின் தோற்றத்திற்கும் காரணமாக விளங்கினார்கள்.

சமூக மாற்றம் பற்றிய மேற்கத்திய அணுகுமுறை மனிதர்களின் உள்ளார்ந்த அம்சங்களில் மாற்றம் கொண்டுவருவதை முற்றிலும் புறக்கணித்து புறவுலகில் மாற்றம் கொண்டு வருவதிலேயே கூடிய கவனம் செலுத்துகின்றது. ஆனால் உண்மையில் அவசியப்படுவது, மனிதர்களது உள்ளார்ந்த ஆளுமையிலும், அவர்களது சமூக, பொருளாதார சூழலிலும் ஏற்படும் பூரண மாற்றமாகும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். சமூக மாற்றம் பற்றிய இஸ்லாமிய அணுகுமுறையானது பின்வரும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்குகின்றது.

> **சமூக மாற்றத்திற்கு மனிதனைப் பற்றிய முழுமைத்துவப் பார்வை அடிப்படையாகும். இந்த முழுமைத்துவப் பார்வையின் அடிப்படையில் உருவான தனிமனிதர்களே மக்காவில் உருவாகிய சமூக மாற்றத்திற்கும், மதீனாவில் தோன்றிய ஆரம்ப கால இஸ்லாமிய சமூகம், ஆட்சியின் தோற்றத்திற்கும் காரணமாக விளங்கினார்கள்.**

1. சமூக மாற்றம் என்பது ஏற்கனவே பூரணமாக நிர்ணயிக்கப்பட்ட வரலாற்றுச் சக்திகளின் விளைவன்று. மாற்றமென்பது திட்டமிடப் பட்டு மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த மாற்றம் ஒரு நோக்கத்தையும் குறிக்கோளை யும் உடையதாக இருத்தல் வேண்டும். அதாவது ஓர் இறுதி இலட்சியத்தை நோக்கிய நகர்வாக அது அமைதல் வேண்டும். இது சமூக மாற்றம் பற்றிய இஸ்லாத்தின் அடிப்படை விதிகளில் முக்கியமான ஒன்றாகும்.

2. மாற்றத்தை ஏற்படுத்தும் சாதனங்களில் மக்கள் முக்கிய பங்கை வகிக்கின்றார்கள். பூமியில் அல்லாஹ்வின் பரதிநிதி என்ற வகையில், ஏனைய சக்திகள் அனைத்தும் மக்கள் என்ற சாதனத்திற்கு அடுத்த தரத்திலேயே உள்ளன. இப்பரபஞ்சத்தில் நிலவும் தெய்வீக விதிக்கு ஏற்ப, இறை சித்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள கட்டுக்கோப்பிற்கு உட்பட்டு அவர்களது விதியைத் தீர்மானிப்பதற்கு மக்களே பொறுப்புடையோர் ஆவர்.

3. மாற்றம் சூழலில் மட்டுமன்றி மக்களின் உள்ளங்களிலும் அவர்களது மனோபாவம், தூண்டுதல், அர்ப்பணம் ஆகியவற்றிலும் நிகழ்தல் வேண்டும். அவர்களது நோக்கங்கள், குறிக்கோள்களை அடைவதற்காக அவர்கள் மேற்கொள்ளும் உறுதியிலும் செயற்பாட்டிலும் இம்மாற்றம் பரதிபலிக்க வேண்டும்.

4. வாழ்க்கை என்பது பரஸ்பர தொடர்புகளை உள்ளடக்கிய ஒரு வலைப்பின்னலாகும். சமூகத்தில் ஏதாவதொரு மாற்றம் நிகழும்போது இந்த பரஸ்பர தொடர்புகளில் சில பாதிப்புக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். எனவே மாற்றமென்பது சம பலத்தைப் பேணி படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இஸ்லாத்தின் இந்த அதற்கே உரிய அணுகு முறையே புரட்சிகரமான மாற்றத்தை, படிமுறையான வழிமுறையைப் பின்பற்றி ஏற்படுத்தும் தன்மை படைத்தது. நபி (ஸல்) அவர்கள் சிலைகளை உடைப்பதற்கு 13 வருட காலம் காத்திருந்தார்கள். இஸ்லாமிய அழைப்பு ஆரம்பித்து பல ஆண்டுகள் வரை சிலைகள் கஃபதுல்லா வில் காணப்பட்டன. ஆனால் மக்கள் உள்ளங்களில் இறை விசுவாசத்தைப் படிப்படியாக வேரூன்றச் செய்து, இணை வைப்பாளர்களை பல போர்களில் சந்தித்து, இறுதியில் மக்காவின் வெற்றியின்போதே நபி (ஸல்) அவர்கள் கஃபாவிலிருந்த சிலைகளை தங்கள் கைகளாலேயே உடைக்கின்றார்கள். மதீனாவில் 3 முக்கிய படித்தரங்களில் மது அருந்துவதைத் தடை செய்ததை யும் இது தொடர்பாகக் குறிப்படலாம்.

இஸ்லாம்; சமூக மாற்றத்தை நோக்காகக் கொண்ட ஒரு மார்க்கமாகும். சமூகம் பற்றிய ஒரு தெளிவான கோட்பாட்டை இஸ்லாம் சமர்ப்பிக்கின்றது. வரலாற்றில் மாற்றத்தை விளைவிப்பதற்கான வழிமுறைகளையும் அது வரையறுத்துள்ளது. இஸ்லாமிய நோக்கில் சமூக மாற்றமானது தனிமனிதன், சமூகம், உலகம் என்ற மூன்று படித்தரங்களில் அது செயல்படுகின்றது. தனிமனிதர்களின் விசுவாசம் உறுதியடைந்து, சமூகத்தில் அவர்களது பங்கு குறித்து தெளிவான பார்வையைப் பெறாதவரை நாடப்படும் சமூக மாற்றத்தைக் கொண்டுவர முடியாது. அதன் பின்னர் ஆரம்பத்தில் சமூக மட்டத்திலும், அதனைத் தாண்டி முழு உலகத்தையும் பிணைத்த வகையிலும் இந்த மாற்றம் நிகழ்கின்றது.

ஒரு தனிமனிதன் தொடர்பான பிரச்சினை எவ்வாறு அனைத்து உலகையும் அல்லது இனத்தையும் உள்ளடக்கிய வகையில் நோக்கப்படல் வேண்டும் என்பதை அல்குர்ஆன் குறிப்படுகின்றது.

அல்குர்ஆன் ஸூறா அல் மாஇதாவின் 32ம் வசனத்தில் ''எவர் மற்றோர் ஆத்மாவின் கொலைக்குப் பிரதியாகவோ அல்லது பூமியில் குழப்பத்தை தடை செய்வதற்காகவோ தவிர, அநியாயமாக மற்றொருவரைக் கொலை செய்கின்றாரோ அவர் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவர் போலாவார். எவர் அதனை (ஓர் ஆத்மாவை) வாழ வைக்கின்றாரோ அவர் மனிதர்கள் யாவரையும் வாழ வைத்தவர் போலாவார்.''

இங்கு இஸ்லாம் எவ்வாறு தனிமனிதன் தொடர்பான பிரச்சினையை மனித இனம் அனைத்துடனும் தொடர்பான தாக நோக்குகின்றது என்பதனையும், எவ்வாறு ஒரு நிகழ்வானது இஸ்லாமிய நோக்கில் பெறுமானங்களுடன் தொடர்பான பல பாதைகளைத் திறந்து விடுகின்றது என்பதை யும் நாம் தெளிவாகக் கண்டு கொள்ள முடிகின்றது.

மீள்பார்வை

ஆசிரிய பீடத்திலிருந்து...

Meelparvai Media Centre (MMC)
2 A, Hill Castle Place, Bandaranayake Mawatha,Colombo 12. Tel/Fax: 0112 336272
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# வன்முறையும் அரசியல்வாதிகளும்

அரசியல்வாதிகளுக்கும் வன்முறைக்கும் இடையில் பிரிக்க முடியாத நெருங்கிய உறவு வளர்ந்து வருகிறது. எமது அரசியல் கலாச்சாரத்தில் வன்முறை தவிர்க்க முடியாத அம்சமாக மாறி விட்டது.

சமீபத்தில் சட்டமா அதிபர் முன்னாள் பிரதி அமைச்சர் சந்தன கத்ரியாரச்சி மற்றும் மூவருக்கெதிரான இரு குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற்றமை சட்ட ஆட்சியின் அடிப்படைகளை கேள்விக்குட்படுத்தியது. இதுபோலதான் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எதிரான வழக்கொன்றையும் அரச தரப்பு வழக்கறிஞர் வாபஸ் பெற்றுக்கொண்டார்.

இப்போது சந்தன கத்ரியாரச்சிக்கு ஐந்து மாத கடூழிய சிறைத் தண்டனையும் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனையையும் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி வழங்கியுள்ளார். அத்தோடு இவருக்கு 5000 ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

அவர் குற்றவாளி என்றே நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், சட்டமா அதிபர் எந்த அடிப்படையில் இவ்வழக்கை வாபஸ் பெற்றார் என்ற கேள்வி எழுகிறது. அரசியல்வாதிகளை சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப வைக்கும் குறுக்கு வழிமுறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதே சட்ட ஆட்சியின் அடிப்படைத் தத்துவமாகும். ஆனால், சட்டத்தின் பிடியிலிருந்து அரசியல்வாதிகளையும் அரசியல் செல்வாக்கு மிக்கோரையும் தப்பிக்க வைக்கும் குறுக்கு வழி உபாயங்களே இன்று மேலோங்கியிருக்கின்றன.

இதன் காரணமாக நீதித்துறை குறித்த அலட்சிய மனோபாவமே அரசியல் சக்திகளிடம் உள்ளது. அதற்கான போதிய பெறுமானங்களை அவர்கள் வழங்குவதில்லை. செய்வதையெல்லாம் செய்து விட்டு, தப்பிப்பதற்கான வழிகளை தேடுவதுதான் அவர்களது இயல்பாக மாறிவிட்டது.

உள்ளூர் மட்டங்களில் அடியாட்களை ஏவிவிட்டு போதைப் பொருட்களால் போஷித்து வளர்க்கும் மட்டரக அரசியல் கலாச்சாரத்தை ஊக்குவிப்பது யார்? வெளியே வெள்ளையாடைகளிலும், கௌரவமான வேடங்களிலும் உலா வரும் அதே அரசியல் சக்திகள்தான் உள்ளூர நாறிப் போன ரவுடித் தனத்திற்கு தீனி போடுகிறார்கள்.

அரசியல் இன்று அதிகாரத்திற்கான போட்டியாகவே பொருள் கொள்ளப்படுகிறது. ஒரு வகையில் அது ஒரு விளையாட்டு. விளையாட்டுக்குக் கூட நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட விதிகள் உள்ளன. ஆனால், இந்த அரசியல் விளையாட்டுக்கு எந்த விதிகளும் இல்லை; எந்தப் பெறுமானங்களும் இல்லை. விரும்பியவாறு ஆடும் கண்ணாமூச்சி ஆட்டமாகவே அது உள்ளது.

வந்தடையும் வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்படாமல், இறுதி விளைவுகள் -இறுதி வெற்றி- குறித்து மட்டுமே கவலைப்படும் இந்தப் போக்கு சர்வாதிகார மனநிலையின் நடைமுறை வடிவம் என்று துணிந்து கூறலாம்.

புறச் சூழலில் இவ்வாறான இழிந்த வழிமுறைகளை தெரிந்தும் தெரியாதது போல் எதிர்கொள்ளும் மனநிலை வளர்ந்து வருகிறது. உள்ளூர கொதித்து குமுறும் மக்களுக்கு இதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்று தெரியாத தடுமாற்றம் நிலவுகிறது.


உண்மையில் இது எமது சமூகத்தின் ஒருவகைப் பிரதிபலிப்பே அன்றி வேறென்ன? சமூகத்தின் குறுக்குவெட்டு முகமாகவே அரசியல்வாதிகள் மேற்கிளம்புகின்றனர். உயர் பெறுமானங்களைப் பேணாத குறைநிலை சமூகங்களிலிருந்து இவ்வாறான அரைகுறை மனிதர்களே வெளித்தோன்றுவர்.

இந்த அரசியலுக்கும் வன்முறைக்கும் இடையிலான தேனிலவுக்கு சமூகமும் ஒரு வகையில் காரணமாகி விடுகிறது. ஆகவே, விரிந்த கண்ணோட்டத்தில் நமது ஒட்டுமொத்த சமூகத்தையும் தார்மீக விழுமியங்களின் பாலும் உயர் பண்பாடுகளாலும் பெறுமானங்களாலும் மீள்நிர்மாணம் செய்ய வேண்டும். அப்போதுதான் இழந்துபோன உயர் அரசியல் கலாச்சாரத்தை மீளவும் உயிர்ப்பிக்கலாம். வன்முறை கெடுபிடிகளிலிருந்து அதனை விடுவிக்கலாம்.

# எழுத்தாளர்களும் இணையப் பாவனையும்

செல்வி எம்.ஐ.எப் நபீலா

செல்வி எம்.ஐ.எப் நபீலா சப்ரகமுவ பல்கலைக்கழக தமிழ்த்துறை இறுதியாண்டு மாணவி. அவர் மேற்கொண்ட ஆய்வின் ஒரு பகுதி கட்டுரையாகத் தரப்படுகின்றது. இப்பகுதி 'இலங்கையில் தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் இன்னும் மரபு ரீதியிலான வழிகளிலேயே நாட்டம்' என்ற தலைப்பில் எழுதப்பட்டது.



இணையத்தள பாவனை சர்வதேச அளவில் வெகு தீவிரமாக வளர்ச்சி கண்டு வருகின்ற போதிலும்கூட, எமது இலங்கையில் அதன் வேகம் மந்தகரமான நிலையிலேயே அமைந்துள்ளது. இலங்கையில் இணையத்தளம் பற்றிய அறிவு அல்லது விளக்கம் மக்கள் மத்தியில் குறைவாக காணப்படுவதும் இணையத்தள சேவைகளை வழங்கும் தொலைத் தொடர்பு நிறுவனங்களின் கட்டணங்கள் அதிகரித்துக் காணப்படுவதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

உதாரணமாக 20ம் நூற்றாண்டுகளில் இறுதிக் கட்டங்களில் ஸ்ரீலங்கா டெலிகொம்மினால் இணையத்தள இணைப்புகள் வழங்கப்பட்ட போதிலும்கூட, டவுண்லோட் - தரவிறக்கத்திற்கேற்ப கட்டணங்கள் அறவிடப்பட்டமையினால் பாவனையாளர்களுக்குப் பெருந்தொகையான பணத்தினை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக புரோட்பேண்ட் இணையத்தள இணைப்பு வசதியை ஸ்ரீலங்கா டெலிகொம் ஆரம்பித்தது. ஆரம்பத்தில் பிரதான நகரங்களை மாத்திரம் மையப்படுத்தியிருந்த இவ்விணைப்பானது தற்போது அகில இலங்கை ரீதியில் வியாபிக்கப்பட்டு வருகின்றது. புரோட்பேண்ட் இணையத்தள சேவைக் கட்டணம் நிலையான கட்டணத்தைக் கொண்டிருப்பதினால் தரவிறக்க பரப்பளவில் கவலை கொள்ளத் தேவையில்லை. இதன் காரணத்தினால் தற்போது படிப்படியாக இணையத்தள பாவனையாளர்களின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இன்னும் சில ஆண்டுகளில் இத்தொகை பல மடங்குகளாக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்க முடியும். அதேநேரம், இலங்கையில் போட்டியாக செயல்படும் ஸ்ரீலங்கா டெலிகொம்மின் எஸ்.எல்.ரி. சிட்டிலிங்க், மொபிடெல், மற்றும் சன்டெல், லங்கா பெல், டயலொக், எடிசலாட், எயாடெல், ஹட்ச், டயலொக் சீ.டி.எம்.எ.ஏ. போன்ற தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களும் இச்சேவையினை போட்டி போட்டுக் கொண்டு வழங்கி வருவதை அவதானிக்கின்றோம்.

மத்திய காலத்தில் உருவான அறிவியல் எழுச்சியுடன் படிப்படியாக ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியினால் அச்சுத் தொழில்நுட்பம் (Printing Technology) தோன்றியது. அதற்கு தமிழ்மொழியும் ஈடுகொடுத்தது, அதன் விளைவாகவே இன்றைய தமிழ் உயர்ந்த நிலையில் உள்ளது. தொடர்தேர்ச்சியான தொழில்நுட்ப வளர்ச்சியில் 20ம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் ஏற்பட்ட பாரிய முன்னேற்றம் இன்றைய கணனி யுகம் (Age of Computer) ஆகும். இந்த யுகத்தையும் தமிழ் மொழி மிகவும் நுட்பமான முறையில் எதிர்கொண்டு வருகிறது.

இன்று தட்டச்சு செய்தல், கணக்குகள் பதிதல், விபரங்களை சேகரித்தல் போன்ற சிறிய தேவைகள் முதல், விண்வெளியில் செயற்படுகிற ஏவுகணைகளை மாத்திரமல்லாமல் விண்வெளி ஆய்வு கூடங்களைக் கூட பூமியிலிருந்து கட்டுப்படுத்தி, செயற்படுத்தக் கூடிய உயர்மட்டப் பணிகள் வரை இயக்கும் கருவியாக கணனி மாறி விட்டது.

இன்றைய கணனி யுகத்தில் தனி மனிதராக இருக்கட்டும் அல்லது பன்னாட்டுத் தொழில் நிறுவனமாக இருக்கட்டும் கணனியின்றி அன்றாடச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. தேவையான தகவல்களைத் தரவுகளாகச் சேமித்துவைத்தல் (Database Development), தேவைப்படும்போது தகவல்களைத் தேடியெடுத்தல் (Information Extaction and Retrieval), மின்னஞ்சல் அனுப்புதல் (e-mail) வினாடிகளில் உலகெங்கும் இணையத்தளம் (Internet and Web) மூலம் தொடர்பு கொள்ளுதல், இணையத்தளம் மூலம் தொழில் மற்றும் வணிகத் தொடர்புகளை மேற்கொள்ளுதல் (E-commerce) என்று கணனியின் பயன்பாடுகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இன்றைய காலகட்டத்தில் செய்திப் பரிமாற்றத்திலும் இணையம் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது.

இலங்கையில் பெரும்பாலான பிறமொழி தேசிய அச்சு ஊடகங்கள் இணையங்களை பயன்படுத்துவதைப் போல தமிழ்மொழி மூல தேசிய பத்திரிகைகளும், இணையத்தில் தமிழ் தளங்களினூடாக செய்திகளை உடனுக்குடன் தரவேற்றம் செய்கின்றன. உதாரணமாக இலங்கையின் முன்னணித் தேசிய தமிழ் பத்திரிகைகளான தினக்குரல், வீரகேசரி, தினகரன், சுடர் ஒளி போன்ற தேசிய நாளிதழ்களும், வாராந்த இதழ்களும் தத்தமது இணையத் தளங்களினூடாக செய்திகளை தரவேற்றம் செய்து வருகின்றன.

(பக்.19)

| ஆண்டு | பாவனையாளர்கள் | சனத்தொகை | வீதம் |
|---|---|---|---|
| 2000 | 121,500 | 19,630,230 | 0.5 % |
| 2007 | 428,000 | 19,796,874 | 2.2 % |
| 2008 | 771,700 | 21,128,773 | 3.7 % |
| 2009 | 1,163,500 | 21,324,791 | 5.5 % |
| 2010 | 1,776,200 | 21,513,990 | 8.3 % |

அட்டவணை: 01

| உலக வலயங்கள் | சனத்தொகை டிச.31 | 2000 நிகழ்காலம் | வீதம் |
|---|---|---|---|
| 1,013,779,050 | 4,514,400 | 110,931,700 | 10.9 % |
| 3,834,792,852 | 114,304,000 | 825,094,396 | 21.5 % |
| 813,319,511 | 105,096,093 | 475,069,448 | 58.4 % |
| 212,336,924 | 3,284,800 | 63,240,946 | 29.8 % |
| 344,124,450 | 108,096,800 | 266,224,500 | 77.4 % |
| 592,556,972 | 18,068,919 | 204,689,836 | 34.5 % |
| 34,700,201 | 7,620,480 | 21,263,990 | 61.3 % |
| 6,845,609,960 | 360,985,492 | 1,966,514,816 | 28.7 % |

அட்டவணை: 02

- இங்கு சனத்தொகை எனும் போது 2010 ஆம் ஆண்டின் உத்தேச சனத்தொகையாகும்.
- டிச.31, 2000 வரை இணையத்தளப் பாவனையாளர்கள்.
- நிகழ்காலம் எனும் போது செப்டம்பர் 2010 வரை கணிப்பிடப்பட்டுள்ளது.

# நவீன தேவைகளுக்கேற்ற இஸ்லாமிய ஆளுமைகளை உருவாக்குவதே இன்றைய தேவையாகும்

**அஷ்ஷெய்க் எம்.எம். நயீமுத்தீன் (நளீமி)**
மேலதிக செயலாளர் - மீள்குடியேற்ற அமைச்சு



அஷ்ஷெய்க், அல்ஹாபிழ் எம்.எம். நயீமுத்தீன் அவர்கள் சம்மாந்துறையைச் சேர்ந்தவர். 1991ம் ஆண்டு ஜாமியா நளீமிய்யாவில் பட்டம் பெற்று வெளியேறினார். 1993ம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்று சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின் ஒரு வருட காலம் பாராளுமன்ற உத்தியோகத்தராக கடமையாற்றினார். 1995ம் ஆண்டு SLAS பரீட்சையில் சித்தியடைந்த இவர் 1996 முதல் 2005 வரை காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தில் உதவிக் காணி ஆணையாளராகவும் காணி ஆணையாளராகவும் (அபிவிருத்தி) பணியாற்றினார்.

Public Management துறையில் தனது முதுகலைமாணிப் பட்டத்தை நிறைவு செய்துள்ள இவர் உயர் கல்வி அமைச்சில் இலங்கை உயர் தொழிநுட்பக் கல்வி நிறுவனத்தில் 5 வருடங்கள் பிரதிப் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றினார். 2011 ஏப்ரல் முதல் மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளராக பணியாற்றி வருகிறார். அஷ்ஷெய்க் நயீமுத்தீன் அவர்கள் சமூகப் பணியிலும் இஸ்லாமிய தஃவா துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அண்மையில் திஹாரியில் ஆரம்பிக்கப்பட்ட பாதிஹ் கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுத் தலைவராகவும் இவர் பணியாற்றுகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவருடன் மீள்பார்வை மேற்கொண்ட நேர்காணலை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

சந்திப்பு - இன்ஸாப் ஸலாஹுதீன்

**★ இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றியவர் என்ற வகையில் சமூகத்தின் கல்வி மேம்பாட்டிற்கு என்ன ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறீர்கள்?**

பொதுவாகப் பார்க்கும்போது அடிப்படையான மார்க்கக் கல்வி கிடைக்காது போகின்றபோது மாணவர்கள் கல்வியை விட்டும் இயல்பாகவே தூரமாவதை அவதானிக்க முடிகிறது. இன்று சூழல் மாறியிருக்கிறது. இஸ்லாத்தோடு மாணவர்களைத் தொடர்புபடுத்துகின்ற போது கல்வியிலும் அவர்களது ஈடுபாட்டை அதிகரிக்கலாம் எனக் கருதுகிறேன்.

ஒப்பீட்டு ரீதியில் உயர்கல்வியில் முஸ்லிம்களின் ஈடுபாடு குறைவு என்று தான் சொல்ல வேண்டும். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். க.பொ.த (சா/த) பரீட்சைக்குப் பின் உயர்தரத்தை ஆரம்பிக்கும் மாணவர்களைப் பார்க்கின்றபோது ஒரு அவதானத்தைச் சொல்லலாம் என நினைக்கிறேன்.

இலங்கையைப் பொறுத்தவரை 250,000 பேர் A/L பரீட்சையில் சித்தியடைகிறார்கள். அதில் கிட்டத்தட்ட 22,000 பேருக்குத்தான் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கிறது. அப்படியாயின் ஏனையவர்களின் நிலை என்ன? இதில் முஸ்லிம்களது பல்கலைக்கழக பிரவேச வீதம் வருடத்திற்கு வருடம் வித்தியாசப்பட்டாலும் பொதுவாக 4 வீதமாகவே காணப்படுகின்றது.



எனவே, பல்கலைக்கழகம் கிடைக்காதவர்கள் என்ன செய்வது என்பதில் சமூகத்தில் தெளிவில்லாத ஒரு நிலைதான் இன்னும் காணப்படுகிறது. எனவே, மாணவர்களுக்கு அது தொடர்பில் வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும். நான் முன்பு பணியாற்றிய உயர்கல்வி நிறுவனத்தில் A/L சித்தியடைந்த, பல்கலைக்கழகம் கிடைக்காத மாணவர்களுக்கு பொறியியல், கணக்கியல், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், விவசாயம் போன்ற துறைகளில் உயர்தேசிய டிப்ளோமா கற்கைநெறிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதனை எமது சமூகம் கண்டு கொள்வதில்லை. அது தொடர்பாகவும் மாணவர்கள் வழிகாட்டப்பட வேண்டும்.

மற்றது, இன்று நிறைய முஸ்லிம் இளைஞர்கள் வெளிநாடு செல்கிறார்கள். ஆனால் திறன்கள் அற்ற தொழிலாளர்களாகத்தான் அவர்கள் செல்கிறார்கள். இலங்கையில் தொழிநுட்பக் கல்வியை வழங்கக் கூடிய நிறைய நிறுவனங்கள் காணப்படுகின்றன. அங்கு பல துறைசார்ந்த கற்கை நெறிகளும் காணப்படுகின்றன. இவற்றில் ஏதாவதொன்றைக் கற்றுவிட்டு வெளிநாடு செல்வார்களாயின் அவர்கள் அதிக வருமானத்தைப் பெற இடமிருக்கிறது.

எனவே, இது தொடர்பான ஆலோசனைகளும் சமூகத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

இன்று, சர்வதேசப் பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் அதிகமான முஸ்லிம் மாணவ மாணவிகள் கற்கிறார்கள். இது முஸ்லிம் சமூகத்தில் பணம் இருக்கிறது என்பதனைக் காட்டுவதாக நாம் நினைக்கக் கூடாது.

மாறாக, இலவசமாகப் படிக்கக்கூடிய நிறுவனங்களை நாம் தெரிவு செய்வதில்லை என்பதனைத்தான் காட்டுகிறது. எனவே, உரிய முறையில் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும்.

மற்றது கல்வி எனும்போது சமூகத்தில் ஆய்வு ஆராய்ச்சிகளைச் செய்யக்கூடிய ஆளுமைகள் உருவாக்கப்பட வேண்டும். அடுத்த சமூகத்தோடு ஒப்பிடும்போது இது எமது சமூகத்தில் மிகக் குறைவாகும். சமூக நோக்குக் கொண்ட கலாநிதிகள் எமது சமூகத்தில் எண்ணிக்கை அடிப்படையிலும் தர அடிப்படையிலும் அதிகம் உருவாக வேண்டிய தேவை இன்று நிலவுகின்றது.

**★ பாதிஹ் கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுத் தலைவராக நீங்கள் இருக்கின்றீர்கள். பல கல்வி நிறுவனங்கள் இருக்கின்ற நிலையில் ஏன் பாதிஹ் நிறுவனம் உருவாக்கப்பட்டது?**

மார்க்கக் கல்வியையும் உலகக் கல்வியையும் சேர்த்து வழங்கக்கூடிய நிறுவனங்கள் அரிதாகத்தான் எமது நாட்டில் காணப்படுகின்றன. எனவே, இதுபோன்ற நிறுவனங்கள் இன்னும் உருவாக்கப்பட வேண்டிய தேவை இருந்து கொண்டுதான் இருக்கிறது.

அண்மையில் இலங்கையின் உயர் கல்விக் கொள்கையில் மாற்றங்கள் நடந்திருக்கின்றன. அந்த மாற்றங்களுக்கேற்ப அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கான வாயில்கள் இப்போது திறக்கப்பட்டுள்ளன. எனவே, அப்படியான நிறுவனங்களை முஸ்லிம் சமூகத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு இது ஒரு முக்கியமான சந்தர்ப்பம். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே பாதிஹ் கல்வி நிறுவனம் உருவாக்கப்பட்டது. எதிர்காலத்தில் இது முஸ்லிம் ஆளுமைகளை உருவாக்கக்கூடிய ஒரு அரச சார்பற்ற பல்கலைக்கழகமாக மாற வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இந்த அடிப்படையில் அல்லாஹ்வின் உதவியைக் கொண்டு இதனை நாம் ஆரம்பித்திருக்கிறோம்.

**★ பாதிஹ் நிறுவனத்தின் கல்விக் கொள்கை குறித்துச் சொல்லுங்கள்?**

கல்வியை வழங்குவதில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்கள், புதிய உத்திகள், தொழிநுட்பங்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களின் இயலளவை அதிகரிக்க முடியும். உதாரணமாக ஐந்து வருடங்கள் ஒரு மொழியைப் படிப்பதனை இந்தத் தொழிநுட்பங்களைப் பயன்படுத்துவதனால் இரண்டு வருடங்களில் படித்து முடிக்கலாம். சீனா அல்லது ரஷ்யாவிற்குச் செல்லும் மாணவனொருவன் ஒரு வருடத்தில் அந்த நாட்டு மொழியைப் படித்து பொறியியலிலே, மருத்துவத்திலே பட்டம் பெறுகிறான்.

எனவே, பாதிஹ் நிறுவனமும் மாணவர்களின் முதல் இரண்டு வருடங்களில் அறபு, ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழிகளை அவர்களுக்குக் கற்பிக்கத் தீர்மானித்துள்ளது. மொத்தமான கல்வி வருடம் 5 ஆண்டுகளாகும். மாணவர்கள் A/L பரீட்சைக்குத் தயாராகின்ற அதேநேரம் பல் கலைக்கழகப் பட்டப் படிப்பொன்றுக்கும் தயாராகுவார்கள்.

இஸ்லாமிய ஷரீஆவையும் ஏனைய கல்விகளையும் நவீன முறையில் நன்கு கற்று தேர்ச்சி பெற்ற ஆளுமைகளை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டே எமது கல்விக் கொள்கை அமைந்துள்ளது. நவீன கற்பித்தல் வழிமுறைகளினூடாக இதனை 5 வருடங்களில் அல்லாஹ்வின் உதவியால் சாதிக்கலாம் என நாங்கள் நம்புகின்றோம்.

**★ வட மாகாண முஸ்லிம்களது மீள்குடியேற்றத்தின் தற்போதைய நிலை குறித்துச் சொல்ல முடியுமா?**

பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இலங்கையின் நாலா புறங்களிலும் சிதறி வாழ்கிறார்கள். குறிப்பாக புத்தளம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வாழ்கிறார்கள். வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கான காரியாலயமொன்று புத்தளத்தில் அமைக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தொடர்பான சகல விடயங்களும் அந்தக் காரியாலயத்தினூடாகவே நடைபெற்று வந்தன.

மீள்குடியேற்றம் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை யாதெனில் இடம்பெயர்ந்த எல்லா மக்களும் அவர்களது ஆரம்ப வாழ்விடங்களுக்கு மீண்டும் வர வேண்டும் என்பதாகும்.

இந்தக் கொள்கை எல்லா இனத்தவருக்கும் நன்மையளிக்கக்கூடிய ஒன்றாகும். அந்தவகையில் புத்தளத்தில் வாழக்கூடிய முஸ்லிம்களும் தங்களது பதிவுகளை தங்கள் சொந்தப் பிரதேசங்களில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர், அந்தவகையில் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு ஏற்ப புத்தளத்தில் இருந்த அந்தக் காரியாலயமும் மூடப்பட்டுள்ளது.

புத்தளத்தில் உள்ள முஸ்லிம்களில் 95 வீதமானவர்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் தமது பதிவுகளை செய்துள்ளார்கள். ஆனால் அவர்கள் சரியான முறையில் அங்கு போய்க் குடியேறவில்லை. தமது சொந்தப் பிரதேசங்களுக்குச் சென்று குடியேறுபவர்களுக்கே அரசாங்கம் வசதிகளைச் செய்து கொடுக்கும் என்பதை இங்கு நினைவுபடுத்த வேண்டும்.

இறுதிப் போரின்போது இடம்பெயர்ந்தவர்கள், அதற்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்கள் என இரண்டு பிரிவுகள் காணப்படுகின்றன. 2008ம் ஆண்டு ஏப்ரலுக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கு எந்த வசதிகளும் செய்து கொடுக்கப்படுவதில்லை என்ற ஒரு கருத்து நிலவியது.

இக்கருத்து ஜனாதிபதி மட்டம் வரை போய் இருக்கிறது. அந்தக் கருத்துக்கள் ஜனாதிபதியால் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான செயலணியுடன் ஆலோசிக்கப்பட்டு 2008 ற்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களது நிலைமையை ஆராய்ந்து முன்மொழிவுகளை வழங்க ஒரு கமிட்டி உருவாக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தலைமையில் இந்தக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

(பக்.19)

# சிறுவர்களை வேலைக்கமர்த்துபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

**பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்**



சிறுவர்களை வேலைக்கமர்த்துவது மற்றும் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் விஷேட செயலமர்வொன்று அண்மையில் கொழும்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதியமைச்சர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் பிரதியமைச்சர் உரையாற்றுகையில்,


இலங்கையில் பல்வேறுபட்ட பிரதேசங்களிலும் குறிப்பாக வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் தொடர்ச்சியாக சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதாகவும், அதன் மூலம் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கல்வி உட்பட பல்வேறுபட்ட உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளினால் எமது சிறுவர்களுடைய எதிர்காலம் அழிக்கப்படுகின்றது.

எனவே, எமது நாட்டினுடைய எதிர்கால சந்ததியினரான சிறுவர்களை பாதுகாத்து அவர்களை அன்போடு ஆதரித்து அவர்களுடைய உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அமைச்சினது மாத்திரமல்ல இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரதும் கடமையாகும்.

ஆகவே இது தொர்பாக நாங்கள் எல்லோரும் விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும். இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு சிறுவர்களையும் தங்களுடைய பிள்ளைகளாக நினைத்து, சிறுவர்கள் எங்கு வேலைக்கமர்த்தப்பட்டாலும் அது தொடர்பாக உடனடியாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அல்லது 1929 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு நீங்கள் தகவல்களை தெரிவிப்பதன் மூலம் இச்செயற்பாடுகளை தடுத்து நிறுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

# இஸ்லாம் குறித்து எந்த முஸ்லிமும் எனக்கு சொல்லித் தரவில்லை

-பேராசிரியர் அப்துல்லாஹ் (பெரியார் தாசன்)



''இறை மறுப்பாளர்கள் உண்மையில் இறைவனை மறுக்கவில்லை. இறைவனை அறியாமைதான் நாஸ்திகமாகும். மாற்றமாக இறைவனை நிராகரிக்க யாருக்கும் முடியாது'' என்றார் பேராசிரியர் அப்துல்லாஹ்

தெமடகொட மஸ்ஜித் தவ்ஹீத் தஃவா குழுவினர் ஏற்பாடு செய்த சிறப்பு சொற்பொழிவு நிகழ்வு கடந்த 27.06.2011 அன்று மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பேராசிரியர் அப்துல்லாஹ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழகத்தின் சிறந்த மனநல நிபுணரான பேராசிரியர் அப்துல்லாஹ், இஸ்லாத்தை ஏற்க முன்னர் பெரியார்தாஸன் என்ற பெயரில் அறியப்பட்டவர். இரண்டாண்டுகளுக்கு முன்பு இஸ்லாத்தைத் தழுவியவர். தனது நாட்டிலும் வெளிநாடுகளிலும் இஸ்லாம் குறித்து உண்மையை மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தி வருகிறார்.

'நாஸ்திகத்திலிருந்து ஆஸ்திகத்திற்கு' எனும் தலைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது: இன்று உலகம் இணைவைப்பில் சிக்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் இன்னும் இறைவனை அறியாதிருக்கிறார்கள். இழிவான, கேவலமான விடயங்களைப் பேசும் நாவுகள் ஏன் இறைவனைப் பற்றிப் பேசாதிருக்கின்றன. இஸ்லாத்தை அறிந்தவர்கள், அறியாதவர்களுக்கு ஏன் எத்திவைக்கவில்லை என்றும் கேள்வியெழுப்பினார்.

16 வயது வரை முஸ்லிம்களின் வீட்டில் புரியாணி உண்டிருக்கிறேன். அவர்களின் அன்பையும் பரிமாறியிருக்கிறேன். அவர்கள் அல்குர்ஆனைக் கண்ணில் கூட காட்டியதில்லை. விஞ்ஞானி அப்துல் கலாம், கவிஞர் அப்துர் ரஹ்மான், அப்துஸ் ஸமத் போன்றோரோடு மிக நெருக்கமாகப் பழகியிருக்கிறேன். அப்துர் ரஹ்மானோடு கஸல் கவிதைகள் குறித்து இரவிரவாகப் பேசியிருக்கிறேன். ஆனால், இவர்கள் யாரும் இஸ்லாம் பற்றிச் சொல்லித் தரவேயில்லை. அல்குர்ஆனைப் படிக்கும் படி கேட்டுக் கொள்ளவேயில்லை என்றும் வருத்தப்பட்டுக் கொண்டார்.

அத்தோடு தமிழக முன்னாள் முதலமைச்சர் மு.க. கருணாநிதி உயிரோடிருந்து தானும் உயிரோடிருந்தால் இன்ஷா அல்லாஹ் கருணாநிதிக்கு இஸ்லாத்தை எத்தி வைத்து அவரை இஸ்லாத்தின்பால் அழைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# சீனன்கோட்டை பட்டதாரிகள் அமைப்பு அங்குரார்ப்பணம்

பேருவலை சீனன்கோட்டைப் பிரதேச பட்டதாரிகளை உள்ளடக்கியதாக ''சீனன்கோட்டைப் பட்டதாரிகள் அமைப்பின் (China Fort Graduates Association) அங்குரார்ப்பண நிகழ்வு, பெப்ரவரி 27 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெற்ற 60க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்து சிறப்பித்தனர். அஷ்ஷெய்ஹ் இஸ்பஹான் ஹாதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நடப்பு வருடத்திற்கான உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெற்றது.

போசகர்கள் : அஷ்ஷெய்க் கைருல் பஷர்(நளீமி) M.A., சட்டத்தரணி ரிப்லான் (LLB), தலைவர்: கலாநிதி ரிஸ்மி காஸிம் PhD (Chemistry), உபதலைர்கள்: திருமதி இப்பத் ஜமீல், அஷ்ஷெய்க் முர்சித் தாஹா (நளீமி), இணைச் செயலாளர்கள்: இஹ்ஸான் ஹம்ஸா, திருமதி மிஸ்பா அன்ஸார், பொருளாளர்: அஷ்ஷெய்ஹ் பௌஸர் ஹூஸைன் (நளீமி), உதவிப் பொருளாளர்: திருமதி நஸ்லிஹா அரூஸ், ஒருங்கிணைப்பாளர்கள்: அஷ்ஷெய்க் இஸ்பஹான் ஹாதி (நளீமி), திருமதி நுஸ்ரத் நிஸாம்.


செயற்குழு உறுப்பினர்கள் அஷ்ஷெய்க் நஸீர் ஸாலிஹ் (நளீமி), அல்ஹாஜ் மிஸ்வர் காஸிம், அஷ்ஷெய்க் மக்கி மன்ஸூர் (நளீமி), அஷ்ஷெய்க் முப்தி முர்ஸி (நளீமி), ஜனாப் இத்பான் மஷூர், அஷ்ஷெய்க் ஸப்வான் ஆரிப் (நளீமி), திருமதி முபஷ்ஷிரா ஹாஷிமி, திருமதி மௌஸூபா இம்தியாஸ், செல்வி நஜ்வா ஹம்ஸா, திருமதி சம்லியா, திருமதி ரம்லா இர்பான்.




அக்குறணை பங்கொள்ளாமடை அல்-ஹிலால் பொது நல அமைப்பின் இஸ்லாமிய தின விழா க/லுக்மானியா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. விழாவுக்கு பிரதம அதிதியாக வருகை தந்த அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் அவர்கள், எகிப்து நாட்டில் இருந்து வருகை தந்த கௌரவ அதிதி தொழில் அதிபர் ஒசாமா மொஹமட் இஸ்மாயிலுக்கு ஞாபகாத்த சின்னம் வழங்குவதை படத்தில் காணலாம். இப்படத்தில் வலம் இருந்து இடமாக அல் ஹிலால் பொது நல அமைப்பின் ஸ்தாபகர் ஹமீட் ஏ. காதர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா செயலாளர் தாஸிம் மௌலவி ஆகியோரும் காணப்படுகின்றனர்.



உடுநுவர படுபிடிய பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த சந்தை கடந்த 17.06.2011ம் திகதியன்று பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஊர் பிரமுகர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர். இதன்போது எடுக்கப்பட்ட சந்தைக்காட்சியை படத்தில் காணலாம்.
(தகவலும் படமும்: ரம்ஸின் நிஸாம்)




கடந்த 2011.06.10ஆம் திகதி களனி பல்கலைக்கழகத்தின் இராகம மருத்துவபீட முஸ்லிம் மஜ்லிஸினால் அநுராதபுரம்/ஹிதோகம/குடாநெலுபேவ/அல்மதீனா வித்தியாலயத்திற்கு ரூபா 25000/- பெறுமதியுடைய ஒரு தொகை பாடசாலை உபகரணங்கள் நன்கொடை செய்யப்பட்டது. படத்தில் முஸ்லிம் மஜ்லிஸ் தலைவர் எம்.எச்.எம்.ரம்சான் உபகரணங்களை கையளிப்பதையும், பாடசாலை அதிபர் அல்ஹாஜ் ஏ.சி.எம். ஹனீபா ஆசிரியர் அதனைப் பெற்றுக்கொள்வதையும் காணலாம். அருகில் முஸ்லிம் மஜ்லிஸ் செயலாளர் எம்.என்.ஏ. ரிபாத், பொருளாளர் எம்.டி.கே.எப். நிப்ராஸ் காரியப்பர்ஆகியோரும் காணப்படுகின்றனர்.



தெல்தோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பு அண்மையில் கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி செயலமர்வொன்றை நடாத்தியது. இச்செயலமர்வில் தலைமைத்துவம் என்றால் என்ன? சிறந்த தலைவர்களின் பண்புகள் போன்ற தலைப்புகளில் விரிவுரைகள் நடாத்தப்பட்டதுடன் பல்வேறு செயற்பாடுகளும் வழங்கப்பட்டன. செயலமர்வின் இறுதியில் சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக உப தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். அஸ்லம் விளக்கமளிப்பதையும் அருகில் கல்லூரி அதிபர் எம்.எம். மன்ஸூர் உட்பட ஆசிரியர்கள் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

# காழி நீதிமன்றங்களும் குடும்பவியல் ஆலோசனை சேவையும்




ஆலிப் அனாம்

முஸ்லிம் விதவைகளுக்கான அமைப்பு எனும் பெயரில் இயங்கி வரும் நிறுவனமொன்றின் உறுப்பினர் ஒருவரை சமீபத்தில் சந்திக்க நேர்ந்தது. இவ்வமைப்பினூடாக இலங்கை முஸ்லிம் சமூகத்திலுள்ள முஸ்லிம் விதவைகளின் புள்ளிவிபரங்கள் திரட்டப்படுவதோடு, அவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படுவதாக அறியக் கிடைத்தது.

கிழக்கு மாகாணத்தில் மட்டும் யுத்தத்தினால் விதவையாக்கப்பட்ட 23,000 பெண்கள் உள்ளனர் என்று சமீபத்தில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் தெரிவித்திருந்தார். இவர்களில் அனேகமானவர்கள் தமிழ்ப் பெண்களாவர். எனினும், அவர்களுள் குறிப்பிடத்தக்களவு முஸ்லிம் விதவைப் பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

சமகால இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பல்வேறு விதமான விதவைப் பெண்கள் வாழ்கின்றமை கவனிப்புக்குரியது. கணவன்மாரிடமிருந்து விடுதலை ('பஸ்கு') பெற்ற பெண்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் சென்று கணவன்மாரிடமிருந்து விடுதலை பெற்ற (தலாக்) பெண்கள், இயற்கை மரணத்தால் கணவன்மாரை இழந்த பெண்கள், யுத்த சூழ்நிலையில் கணவன்மாரை இழந்த பெண்கள் என பலதரப்பு விதவைகள் உள்ளபோதும் கணவன்மாரிடமிருந்து பஸ்கு பெறும் முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்து வந்துள்ளதை புள்ளி விபரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

சமீபத்தில் கொழும்பு வடக்கில் பணியாற்றும் காழி ஒருவரோடு பேசும்போது மிகவும் அதிர்ச்சிகரமான பல தகவல்களை முன்வைத்தார். வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பும் பெண்கள் நேராக காழி நீதிமன்றங்களுக்கே வருவதாகவும் மீண்டும் வெளிநாடு திரும்புவதற்கு முன்னர் தமது கணவன்மாரிடமிருந்து தமக்கு விவாக விடுதலை (பஸ்கு) பெற்றுத் தருமாறு காழிமாரைக் கோருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குடும்ப வாழ்க்கை பற்றிய சரியான புரிதல் இல்லாமையே இதற்கான மூல காரணம் என்று குறிப்பிட்ட அவர், வெளிநாட்டில் தாம் அனுபவிக்கின்ற சுகபோக வாழ்வும் இவ்வாறான நிலைமைக்கு இட்டுச் செல்வதாகக் குறிப்பிட்டார்.

உண்மையில் அற்ப சொற்ப காரணங்களுக்காக இவ்வாறு விவாக விடுதலை பெறும் சம்பவங்கள் நாட்டின் பல பாகங்களிலும் அதிகரித்து வருகின்றது. சில அறபு நாடுகளிலுள்ள நீதிமன்றங்களில் குடும்பப் பிரச்சினைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பாக நீதிமன்றங்களோடு இணைந்திருக்கின்ற குடும்பவியல் ஆலோசனை மன்றங்களுக்கு பிரச்சினையோடு தொடர்பானவர்கள் அனுப்பப்படுகின்றனர். அங்கு போதிய குடும்ப உளவள ஆலோசனை பெற்றதன் பிற்பாடு பலர் நீதிமன்ற வழக்குகளிலிருந்து வாபஸ் பெறுகின்றனர்.

இதுபோன்ற நடைமுறைகள் காழி நீதிமன்றங்களோடு இணைந்த வகையில் மேற்கொள்ளப்படுமாயின் அனேக குடும்பவியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதோடு விதவைகளின் எண்ணிக்கையையும் குறைக்கலாம். இது குறித்து காழி நீதிமன்றங்கள் சிந்திக்குமா?

# இஸ்லாமிய பொருளாதார சிந்தனை

## உயர்தர பொருளியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு

மனிதனின் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய ஆய்வே பொருளாதாரம் என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. தன் நலன்களை மட்டுமே கருத்திற்கொண்டு உச்ச பயனை அடைய விரும்புகின்ற ஒரு தனிமனிதனின் பகுத்தறிவுடனான செயற்பாடுகள் பற்றிய ஆய்வு பொருளியல் என அறிமுகம் செய்யப்படுகின்றது. (இந்த வரைவிலக்கணங்கள் ஒரு வகை வரட்சித் தன்மை கொண்டதாகவும் பொருளியலை தரம் குறைப்பதாகவும் உள்ளன. ஏனெனில் அது மனிதனை பகுத்தறிவு நிறைந்த பொருளியல் மனிதனாகக் காட்டுகின்றது.)


எந்தவொரு மனிதனும் தன்னிடமுள்ள வளங்களைக் கொண்டு உயர்ந்த திருப்தியடையவே விரும்புகின்றான். சுயநலனை (Self Interest) உயர்த்தக் கூடிய தீர்மானங்களை மட்டுமே தெரிவு செய்து கொள்பவன் பொருளியல் மனிதனாவான். நடைமுறை உலகில் ஒவ்வொரு மனிதனும் தெரிந்தோ தெரியாமலோ பொருளியல் ரீதியான தீர்மானங்களை மேற்கொள்கின்றான். எனவே ஒவ்வொரு மனிதனும் பொருளாதார மனிதன் (Economic Man) ஆவான். இது பொருளியலை விளக்கத் தொடங்கும் பொழுதே முன்வைக்கப்படும் கருத்தாகும்.

யதார்த்தத்தில் பொருளியல் கூறுவதுபோன்று பகுத்தறிவாளனாகவோ முழுமையுற்றவனாகவோ மனிதனை நாம் காண முடியாது. அதற்கும் அப்பால் மனித சிந்தனை வீச்செல்லை விரிவானது.

பொருளியலானது தன்னை சமநிலைப்படுத்துவதற்காகவும் விஞ்ஞானபூர்வமானது எனக் காட்டிக் கொள்வதற்காகவும் தன்னிடம் இருக்க வேண்டிய ஒழுக்கவியலையும் தார்மீகங்களையும் வெகு தொலைவிற்கு அப்புறப் படுத்தியுள்ளது. உள்ளவற்றை உள்ளவாறே சொல்லுதல் பொருளியல் பரிபாசையில் சாத்தியப்படாத ஒன்றாகவே உள்ளது.

இன்னொரு வகையில் கூறுவதாயின் பொருளியலானது சமூக விஞ்ஞானத்தின் ஒரு கூறு. அது மனிதனின் உண்மை நிலை

**இஸ்லாத்தில் ஒருவர் முழு அளவில் சொத்துக்களை உழைப்பதற்கும் சேமித்து வைப்பதற்கும் உரிமை கொண்டுள்ளார். இது அல்லாஹ்வினால் தனி மனிதருக்கு வழங்கப்படும் உரிமையாகும். அத்தகைய சொத்துக்களை பாதுகாக்கும் வழிமுறைகளையும் இஸ்லாம் முன்வைத்துள்ளது.**



யுடனான நடவடிக்கைகளை ஆராய்கின்றது. அதாவது, மனித நடத்தைகளில் தொடர்புற்றதே சமூக விஞ்ஞானம். மக்களின் உற்பத்தி, விநியோகம், நுகர்வு போன்ற நடவடிக்கைக்கு கவனம் செலுத்துவதே பொருளாதாரம்.

இதன்படி இங்கு ஒழுக்கம் தவிர்க்க முடியாததாகின்றது. ஆனால் தற்போது ஒழுக்கம் பொருளியலுடன் பொருந்தாத ஒன்று எனக் கூறுகின்றனர். இது சடப்பொருட்களின் வெற்றியால் பெறப்பட்ட முடிவாகும். இந்த முடிவு நாம் பார்த்த பகுத்தறிவு வாத நடத்தைகளின் வரைவிலக்கணத்திற்குப் பொருந்தாததாக இருப்பதைக் காணலாம்.

பொருளியல் வரைவிலக்கணப்படுத்தும் பகுத்தறிவுவாத பொருளாதார மனிதனிலிருந்து வித்தியாசப் பட்டவனாக இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் மனிதன் விளங்குகின்றான். அவனது நம்பிக்கையும் இஸ்லாமிய மூலாதாரங்களான குர்ஆனும் ஸுன்னாவும் அவனுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கின்றன. அதன்படி அவன் செயற்படுகின்றான். இஸ்லாமிய வாழ்வின் ஒரு பகுதியாகவே இஸ்லாமிய பொருளியல் கோட்பாடும் அமைந்துள்ளது.

அல்லாஹ்வுடனான நடைமுறைகள், பிரபஞ்சத்தின் ஒரு பிரதிநிதியாக சமூகத்துடனான நடத்தைகள், சக மனிதர்களுடனான நடத்தைகள் என வரைமுறைகளும் வழிகாட்டல்களும் பெற்றதாக இஸ்லாமிய வாழ்வு உள்ளது. இந்த வாழ்வின் ஒரு பகுதியை பொருளியல் மனிதனும் வாழ்கின்றான். இவ்வாழ்வின் படி பொருளியலில் ஒழுக்கம் பிரிக்க முடியாத, தவிர்க்க முடியாத ஒரு கூறாக அமைந்து விடுகின்றது.

### இஸ்லாமிய பொருளாதாரத்தின் அடிப்படை

*1. தனிநபர் சொத்துடமை:*

ஒவ்வொரு தனிநபரினதும் தூய்மைத் தன்மையும் சொத்துரிமையும் சிறந்த வழிகாட்டல்களோடு வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. தனியார் சொத்துரிமை ஒரு மனிதனின் ஒழுக்க, ஆன்மீக வளர்ச்சிக்கான ஆரம்பத் தேவையாகக் கொள்ளப்படுகின்றது. தனிநபர் சுதந்திரத்திற்கும் சமூக நலனுக்கும் இடையில் இஸ்லாம் ஒரு நடுநிலையைப் பேணுகின்றது. இதற்காக இஸ்லாம் சமவுடமைத் தத்துவம் கூறுவதுபோல் அரச உடமையை வலியுறுத்தவில்லை. அதேபோன்று, இஸ்லாத்தை மீறுகின்ற பாவனைகளையும் உரிமைகளையும் தடுத்தும் இருக்கின்றன. ஊழல், வீண் விரயம், மோசடி, பதுக்கல் போன்ற வற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

''பெற்றோரோ நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற சொத்தில் ஆண்களுக்கு பாகம் உண்டு. அவ்வாறே பெற்றோரோ உறவினரோ விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பாகம் உண்டு. இது அல்லாஹ்வினால் வகுக்கப்பட்ட பங்காகும்.''

''இன்னும் அவர்கள் செலவு செய்தால் வீண் விரயம் செய்ய மாட்டார்கள். உலோபித்தனமாக குறைக்கவும் மாட்டார்கள். இரண்டுக்கும் மத்தியில் சமநிலையாக இருப்பார்கள்.

''அநாதைகளை அவர்கள் திருமண வயது அடையும் வரை அவர்களது முன்னேற்றம் கருதி சோதித்துக் கொண்டிருங்கள். அவர்கள் மணப் பருவத்தை அடைந்ததும் தமது நிருவகிக்கும் ஆற்றல் பெற்றுள்ளதாக நீங்கள் கருதினால் அவர்களது சொத்தை அவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். அவர்கள் பெரியவர்களாகி விடுவார்கள் என எண்ணி அவர்களது சொத்தை அவசர அவசரமாகவும் வீண்விரயமாகவும் சாப்பிடாதீர்கள்.

இன்னும் அவ்வநாதைகளைப் பொறுப்பேற்றவர் செல்வந்தராக இருந்தால் அச்சொத்திலிருந்து ஊதியம் பெறுவதை தவிர்த்துக் கொள்ளவும். ஆனால் அவர் ஏழையாக இருந்தால் நியாயமான அளவு சாப்பிட்டுக் கொள்ளவும். மேலும் அவர்களுடைய பொருட்களை அவர்களிடம் ஒப்படைக்கும்போது அவர்களது சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கணக்கெடுப்பதில் அல்லாஹ்வே போதுமானவன்.

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் சொத்துரிமை என்பது அடிப்படையில் அல்லாஹ்வுக்குரியது. வானங்களிலும் பூமியிலும் உள்ள சொத்துக்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியவை என்ற அல்குர்ஆன் வசனம் இதனைத் தெளிவாக்குகின்றது. இஸ்லாத்தில் ஒருவர் முழு அளவில் சொத்துக்களை உழைப்பதற்கும் சேமித்து வைப்பதற்கும் உரிமை கொண்டுள்ளார். இது அல்லாஹ்வினால் தனி மனிதருக்கு வழங்கப்படும் உரிமையாகும். அத்தகைய சொத்துக்களை பாதுகாக்கும் வழிமுறைகளையும் இஸ்லாம் முன்வைத்துள்ளது. யார் தனது சொத்தைப் பாதுகாக்கும் வழியில் மரணிக்கின்றாரோ அவர் ஷஹீதானவர் என்ற ஹதீஸ் இதனை தெளிவாக்குகின்றது.

மனிதன் சம்பாதிப்பதே அவனுக்குக் கிடைக்கும் என்ற அல்குர்ஆன் வசனம் சம்பாதிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. அதேபேன்று அடுத்தவர்கள் சொத்துக்களைத் திருடினால் அல்லது கொள்ளையடித்தால் அதற்குரிய கடும் தண்டனையையும் இஸ்லாம் அறிமுகம் செய்துள்ளது.

## பரிசும் வாரிசுச்சொத்தும்



கலாநிதி அஜீல் நஷ்மி


கேள்வி: எமது தந்தை அவர் மரணிப்பதற்கு முன்னர் வாரிசுச் சொத்தை எங்களுக்கு மத்தியில் பகிர்ந்தளித்தார். ஆனால்,ஆண்களுக்கு வழங்க வேண்டிய பங்கை விட அதிகமாக வழங்கிவிட்டார். ஏனெனில், ஆண்பிள்ளைகள் வயதில் சிறியவர்களாக இருந்தனர். அவர்கள் வேலை செய்பவர்களாக இருக்கவில்லை. பெண்பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்கள் திருமணம் முடித்து ஒரு ஸ்தீர நிலையில் இருக்கின்றனர். அவ்வாறே ஆண்பிள்ளைகளில் ஒருவர் எந்த வேலையும் செய்ய முடியா அளவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார். எமது தந்தையின் செயற்பாடு பற்றிய ஷரீஆவின் நிலைப்பாடு யாது?

Fatwa

இது உண்மையில் வாரிசுச்சொத்துப்பங்கீடல்ல. மாறாக, தந்தை மரணிக்க முன் பிள்ளைகளுக்கு வழங்கிய பரசாகும். உங்களின் தந்தை செய்தது சரியானதே.

(குறிப்பு: ஒருவர் மரணித்த பின்னர் சொத்துப்பங்கீடு செய்யப்படுவதனையே மீராஸ்- சொத்துப்பங்கீடு என ஷரீஆவில் கூறப்படும்.)

# ஈமானோடு வாழ்வோம் ஷரீஆவை மதிப்போம்



இப்னு மஸாஹிரா

ஷரீஆவின் அங்கீகாரமின்றி எமது எந்த அமல்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. எனவே, நாம் ஷரீஆவைக்கற்க வேண்டும், அதற்காக வாழ்பவர்களை மதிக்க வேண்டும்.

ஈமான் என்பது நாவினால் மாத்திரம் மொழிந்தால்போதுமானது தானே என சிலர் வாதாட முடியும். ஆனால், அல்லாஹு தஆலாவின் அழைப்பைப் பாருங்கள்:

''இன்னும் மனிதர்களில் 'நாங்கள் அல்லாஹ்வின் மீதும், இறுதி(த் தீர்ப்பு) நாள் மீதும் ஈமான் (நம்பிக்கை) கொள்கிறோம்' என்று கூறுவோறும் இருக்கின்றனர். ஆனால் (உண்மையில்) அவர்கள் நம்பிக்கை கொண்டோர் அல்லர். (இவ்வாறு கூறி) அவர்கள் அல்லாஹ்வையும், ஈமான் கொண்டோரையும் ஏமாற்ற நினைக்கின்றார்கள். ஆனால், அவர்கள் (உண்மையில்) தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்கிறார்களே தவிர வேறில்லை, எனினும் அவர்கள் (இதை) உணர்ந்து கொள்ளவில்லை.'' (அல்பகரா: 08,09)

எனவே, நாவினால் மாத்திரம் ஈமான் கொண்டுவிட்டோம் எனக் கூறுவது மாத்திரம் போதாது. ஈமான் என்பது உள்ளத்தில் ஆழமாகப்பதிந்து, அதனை செயல் உறுதிப்படுத்த வேண்டும். இதனைத்தான் பின்வரும் அல்குர்ஆனிய அழைப்பு உறுதிப்படுத்துகிறது:

''உண்மையான முஃமின்கள் யார் என்றால், அல்லாஹ்(வின் திருநாமம் அவர்கள் முன்) கூறப்பட்டால், அவர்களுடைய இருதயங்கள் பயந்து நடுங்கிவிடும். அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக்காண்பிக்கப்பட்டால் அவர்களுடைய ஈமான் அதிகரிக்கும். இன்னும் தன் இறைவன் மீது அவர்கள் முற்றிலும் நம்பிக்கை வைப்பார்கள். அவர்கள் தொழுகையை நிலை நிறுத்துவார்கள். அவர்களுக்கு நாம் அளித்த (செல்வத்)திலிருந்து நன்கு செலவு செய்வார்கள். இத்தகையவர்கள் தான் உண்மையான முஃமின்கள்'' (அல் அன்பால்: 02-04)

எனவே, ஒரு மனிதன் ஈமான் கொண்டு விட்டு கஞ்சனாக இருக்க முடியாது. அவன் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்யத் தயங்கக்கூடாது. எனவேதான் தபூக் யுத்தவேளை, மிகவும் கஷ்டமான நேரம், அந்நேரத்திலும் கூட ஸஹாபாக்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவழிப்பதில் போட்டி போட்டுக் கொண்டனர். உமர் (றழி) தனது சொத்தில் அரைவாசியைக் கொண்டு வந்தார். அபூபக்ர் (றழி) தனது முழு சொத்தையுமே அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்தார்கள். இதுவே ஈமானோடு வாழ்ந்தோரின் நிலைப்பாடு.

ஈமான் என்பது ஒரு ஆழமான கருத்தைக் கொண்டுள்ளது. ஈமான் என்பதன் மூலம் நாம் இஸ்லாத்திலுள்ள ஈமானையே கருதுகிறோம். அதன் மூலமே இம்மையிலும் மறுமையிலும் வெற்றியுள்ளது. அதற்கே அல்லாஹ் வெற்றி, கண்ணியம், உதவி என்பவற்றை வழங்குகிறான்.

''முஃமின்களுக்கு உதவி செய்வது எமது கடமையாகும்'' (அர்ரூம் : 47)

''அல்லாஹ்வுக்கும் றஸூலுக்கும் முஃமின்களுக்குமே கண்ணியம் இருக்கிறது.'' (அல்முனாபிகூன்: 08)

''இது ஏனெனில், அல்லாஹ் ஈமான் கொண்டவர்களுக்கு பாதுகாவலனாக இருக்கிறான். அன்றியும் காஃபிர்களுக்குப் பாதுகாவலர் எவரும் இல்லை என்பதனால்தான்.'' (47:11)

இந்த ஈமான் தான் வானங்களினதும் பூமியினதும் இரட்சகனோடு எம்மைப்பிணைத்து விடுகிறது. நாம் ஈமானோடு வாழ்பவர்களாக இருக்க வேண்டும். அம்மனிதர்களை உருவாக்க பாடுபடவேண்டும். இல்லையேல் ஷைத்தானோடு வாழும் மனிதர்களின் தொகைதான் அதிகரித்திருக்கும். முஃமின்கள் இருப்பார்கள். ஆனால், ஈமான் இருக்காது. அல்லாஹ்வை நம்புவதே ஈமானின் அடிப்படை. அதிலிருந்தே ஏனைய நம்பிக்கைகள் பிறக்கின்றன.

எனது பெற்றோர் முஃமின்களாக இருக்கின்றனர். எனவே நானும் முஃமினாக இருக்கிறேன் என எமது சமூகம் ஈமானைக் கொச்சைப்படுத்துகிறது. இந்த ஈமான் மரணித்துப்போன ஈமானாகும். நாம் எதிர்பார்க்கும் ஈமான் உயிரோட்டமாக இருக்க வேண்டும். அது ஒரு சமூகத்தையே உருவாக்க வேண்டும். வெறும் வெற்று வார்த்தையாக இருக்கக்கூடாது. அது பலமான ஈமானாக இருக்க வேண்டும். அதனைத்தான் சில சகோதரர்கள் களத்திலே செய்து கொண்டிருப்பதனை அவதானிக்க முடியும்.

ஷரீஆவைக்கற்ற திறமைசாலிகள் தமது துறையை விட்டும் ஒதுங்கி விடக் கூடாது. ஷரீஆவைக் கற்றவர்களிலே ஈமானியப் பலமும் அதிகரித்து இருக்க வேண்டும். இல்லையேல் கற்ற கல்வியில் பிரயோசனம் இல்லாமல் போய்விடும். சில வேளைகளில் ஷரீஆ திறமைசாலிகளை மட்டம் தட்டும் நிலையும் சமூகத்தில் காணப்படுகின்றது.

ஒரு சகோதரரின் கூற்று: ''ஷரீஆவில் மட்டும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களை உருவாக்குவது அவசியமில்லை தானே. வைத்தியராக இருப்பவர் இஸ்லாமிய ஷரீஆவைக் கற்றால் அவர் இரு துறை வல்லுனராக மாறுவாரே!'' இவ்வாறு ஷரீஆவில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களை மட்டந்தட்டும் நிலையும் சமூகத்திலுள்ளது.

## முஸ்லிமல்லாதவர்களோடு பழகுதல்


Fatwa

கேள்வி: நான் முஸ்லிமல்லாதவர்கள் வேலை செய்கின்ற ஒரு கம்பனியில் வேலை செய்கின்றேன். அவர்கள் விருந்துக்கு அழைத்தால், முகமன் கூறினால் நான் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்?

எம்மோடு போராடாத, எமது எதிரிகளுக்கு உதவி செய்யாத முஸ்லிமல்லாதவர்களுடன் பழகுவதிலே எவ்வித பிரச்சினையும் இல்லை. இதனையே அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

''மார்க்க (விஷய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செய்வதையும் அல்லாஹ் விலக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்பவர்களை நேசிக்கிறான்.'' (அல்மும்தஹினா: 08)

நபி(ஸல்) அவர்கள் முஷ்ரிக்கான பெண்ணிடம் தண்ணீர் பெற்று வுழு செய்துள்ளார்கள். ஒரு யூத பெண் கொடுத்த உணவை சாப்பிட்டுள்ளார்கள். ஒரு கொத்து பார்லி விதைகளுக்காக தனது கேடயத்தை ஒரு யூதனிடம் அடகுவைத்த நிலையிலேயே மரணத்தைத் தழுவினார்கள். என்றாலும் இவ்வாறான உறவுகளுக்கு ஷரீஆ சில வரையறைகளை இட்டுள்ளது. அவை முஸ்லிமல்லாதோர் மீது அகீதா ரீதியான அன்பு வைப்பதையிட்டும் தடுக்கின்றன. ஆனால், அவை அவர்களோடு ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவதையோ, அவர்களின் வாழ்த்துக்களுக்கு பதில் கூறுவதையோ, அவர்களுக்கு பரிசளிப்பதையோ, அவர்களுடன் நல்லமுறையில் நடப்பதையோ, அவர்களுடன் நீதமாக நடப்பதையோ தடுக்கமாட்டாது. இவ்வாறான ஷரீஆ அனுமதித்த எல்லைக்குள் முஸ்லிமல்லாதவர்களோடு எமது உறவை வைத்துக்கொள்ள முடியும்.



ஷேய்க் அப்துல் ஹய் யூஸுப்

## மஃமூம் சத்தமிட்டு தக்பீர் சொல்தல்



ஷேய்க் முஹம்மத் ஸாலிஹ் உஸைமீன்

கேள்வி: இமாம் ஆரம்ப தக்பீரில் 'அல்லாஹு அக்பர்' எனக் கூறும்போது மஃமூன்களும் சத்தமாக 'அல்லாஹு அக்பர்' எனக் கூறுகின்றனர். ஆனால், மஃமூன்கள் மற்றைய தக்பீர்களின்போது 'அல்லாஹு அக்பர்' என சப்தமாகக் கூறுவதில்லை. மஃமூமாக தொழுபவர் ஆரம்பத் தக்பீரை சப்தமிட்டுக் கூறுவது பற்றிய சட்டநிலைப்பாடு யாது?

இமாம் அனைத்து தக்பீர்களையும் பின்னுள்ள மஃமூன்களுக்கு விளங்கும் விதமாக சப்தமிட்டுக் கூற வேண்டும். மஃமூமைப் பொறுத்தவரையில் அவர் தனது சப்தத்தை உயர்த்தாமல் இருக்க வேண்டும். அது ஆரம்பத்தக்பீரோ அல்லது ஏனைய தக்பீர்களாக இருந்தாலும் சரியே.

மஃமூம் தனக்கு கேட்கக் கூடிய அளவு மாத்திரம் தக்பீர் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், மஃமூம்கள் தக்பீரை சப்தமாகக் கூறுவது மார்க்கத்தில் இல்லாத, தடுக்கப்பட்ட விடயமாகும். இதனையே நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு வலியுறுத்திக் கூறினார்கள்:

''யார் இம்மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக உருவாக்குகிறாரோ அது நிராகரிக்கப்பட வேண்டியதாகும்.'' (ஹதீஸ்).

# சிரியா வெளித் தலையீட்டை எச்சரிக்கின்றது: சிரிய வெளிவிவகார அமைச்சர்

கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சிரியா கையாண்டு வரும் அடக்கு முறைக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபை உடனடியாகச் செயற்பட வேண்டும் என்று பிரான்ஸ் வெளியிட்டுள்ள கருத்தை சிரிய அரசாங்கம் கண்டித்துள்ளது. சிரிய வெளிவிவகார அமைச்சர் வலீத் முஅல்லிம் டமஸ்கஸில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், ''எமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றபோதும் நாம் ஒரு பொது உடன்பாட்டை எட்டுவோம். ஆனால், எம்மீது வெளித் தலையீடுகள் திணிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்'' என்று தெரிவித்தார்.

முன்னாள் சிரியாவின் காலனி நாடான பிரான்ஸ், பாதுகாப்புச் சபையில் சிரியாவுக்கு எதிராக தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. இதனிடையே சிரியாவில் ஜனநாயக சீர்திருத்தங்கள் வேண்டும் என்று கோரியுள்ள அங்காராவையும் வலீத் முஅல்லிம் மறை முகமாகக் கண்டித்துள்ளார். சிரியா தொடர்பான நிலைப் பாட்டை அங்காரா மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று முஅல்லிம் கூறியுள்ளார்.



மார்ச் நடுப்பகுதியிலிருந்து சிரியாவில் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் நடந்து வருகின்றன. ஆனால், இதுவரை எந்தவொரு ஐரோப்பியத் தலைவரும் இவ்விவகாரம் குறித்து கலந்துரையாட சிரியாவுக்கு சமூகமளிக்கவில்லை என்றும், சிரியா மீதான பொருளாதாரத் தடை அதன் மீதான யுத்தத்திற்கு சமனானது என்றும் முஅல்லிம் குறிப்பிட்டார்.

இதுவரை சிரிய இராணுவத்தின் அடக்குமுறையால் 1500 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு 10,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். துருக்கிய ஜனாதிபதி அப்துல்லாஹ் குல், ''அஸத் அரசியல் சீர்திருத்தம் குறித்து தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

## ஆப்கானிலிருந்து அமெரிக்கப் படை வெளியேற்றம்




ஆப்கானிலிருந்து 33,000 அமெரிக்கப் படைகளை எதிர்வரும் கோடைகாலத்திற்கு முன்பாக நாடு திரும்புமாறு ஒபாமா வேண்டியுள்ளார். ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்கப் போர் முடிவுக்கு வந்து விட்டதை ஒபாமாவின் இம்முடிவு காட்டுவதாக இராணுவத் துறை ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையில் இது ஒரு திருப்பம் என்று கருதப்படுகின்றது.

இரத்தம் தோய்ந்த, பீதி நிறைந்த வரலாற்றினால் காயப்பட்டிருந்த ஒரு நாட்டை முழுமையாகக் கட்டியெழுப்புவதற்கான ஒரு வாய்ப்பு இதன் மூலம் ஏற்பட்டுள்ளது. இன்று யுத்தம் முடிவடைகின்றது என்பதை நாம் சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம் என ஒபாமா தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் நீண்ட நாட்கள் இருந்தபோதும் ஒளிமயமான எதிர்காலம் அங்கு உதயமாகும். இந்த நீண்ட யுத்தங்கள் பொறுப்பு மிக்க முடிவொன்றுக்கு வந்து விட்டது என்று அவர் சொன்னார்.

## ஹிஸ்புல்லாஹ்வின் செல்வாக்கு குறைந்துள்ளது



ஹிஸ்புல்லாஹ் இயக்கத்தின் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ், அறபுப் புரட்சியின் மூலம் தனது செல்வாக்கை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அறபுப் புரட்சிகள் ஈரானின் செல்வாக்கைக் குறைத்துள்ளதோடு, லெபனானில் நிலை கொண்டுள்ள ஹிஸ்புல்லாக்களின் செல்வாக்கையும் பாரியளவு குறைத்துள்ளது.

சிரியாவில் அஸதின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கு முன்வந்துள்ள நஸ்ருல்லாஹ், பஹ்ரைனில் உள்நாட்டுப் புரட்சிக்கு ஊக்கமளித்து வருகின்றார். எவ்வாறாயினும், ஹிஸ்புல்லாஹ்வின் செல்வாக்கு பிராந்தியத்தில் குறைந்து வருவதாக மத்திய கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒன்றுக்குப் பின் ஒன்று முரணான கொள்கையை அவ்வியக்கம் கடைப்பிடித்து வருவதாகவும் அவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இந்தியாவே பாகிஸ்தானுக்கான பெரும் அச்சுறுத்தல்

தாலிபான் மற்றும் அல் காயிதா அமைப்புகளை விட இந்தியாவே பாகிஸ்தானுக்கான பெரும் அச்சுறுத்தல் என்று பெரும்பாலான பாகிஸ்தானியர்கள் தெரிவித்துள்ளனர். BU Research Centre மேற்கொண்ட ஆய்வில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின் லேடனை சமீபகாலமாக யாரும் விரும்பவில்லை. எனினும், அவரது மரணத்தை பாகிஸ்தானியர்கள் சோகத்துடன் எதிர்கொண்டனர். 14 சதவீதமான பாகிஸ்தானியர்களே உஸாமாவின் மரணத்தை வரவேற்றதாகவும் அந்த ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தியா, அல்காயிதா, தாலிபான் மூன்றிலும் பாகிஸ்தானுக்கு மிகப் பெரும் அச்சுறுத்தல் யார் எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு 57 சதவீதமான பாகிஸ்தானியர்கள் இந்தியாவே எனப் பதிலளித்துள்ளனர். இதேவேளை, இந்தியாவுடனான உறவை மேம்படுத்த வேண்டுமென பத்தில் ஏழு பேர் கருத்து வெளியிட்டுள்ளனர்.


குறிப்பாக இந்தியாவுடனான வர்த்தகத்தை மேம்படுத்துவது பாகிஸ்தானுக்கு உகந்தது என்று தெரிவித்துள்ளனர்.

## ஒஸாமாவின் மனைவி நாடு திரும்புகிறார்

ஒஸாமாவின் விதவை மனைவி பாகிஸ்தானிலிருந்து யெமன் திரும்பவுள்ளார். யெமன் வெளிவிவகார அமைச்சுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான ராஜதந்திர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யெமன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தானிலிருந்து இவர்கள் வெளியேற்றப்படுவதற்கு முன்பாக தமது சொந்த நாடான யெமனுக்குத் திரும்புவதாக அவரது உறவினர் அமல் அப்துல் பத்தாஹ் குறிப்பிட்டார். மே 2ம் திகதி ஒஸாமா பின் லேடன் கொல்லப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி அறிவித்தார்.

## முபாரக் புற்றுநோயால் பாதிப்பு



முன்னாள் எகிப்திய ஜனாதிபதி ஹுஸ்னி முபாரக் வயிற்றுப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

தற்போது ஷரம் ஷேய்கில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வரும் முபாரக் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

82 வயதான முபாரக்கின் உடல் நிலை மோசமடைந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

## பெண்கள் வாகனம் செலுத்தியதால் பரபரப்பு

சவூதி அரேபியாவில் பெண்கள் வாகனம் செலுத்துவது தடுக்கப்பட்டுள்ள போதும், இரு சவூதிப் பெண்கள் கடந்த மாதம் வாகனத்தை ஓட்டிச் சென்றுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சவூதி அரேபியாவில் பெண்களுக்கு எதிராக சட்டத்தை ஆட்சேபிக்கவே தாம் இவ்வாறு நடந்துகொண்டதாக இப்பெண்கள் இருவரும் தெரிவித்துள்ளனர்.

அவர்களுள் ஒருவரான இமான் அல் நப்ஜான் எனும் பெண், தனது தாயாருக்குச் சொந்தமான காரை ஓட்டிச் சென்றதாக ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். பெண்கள் வாகனம் ஓட்ட வேண்டாம் என்று இடப்பட்டுள்ள பெயர்ப் பலகைக்கு தான் அஞ்சவில்லை என்று நப்ஜான் கூறினார்.

ஸாரா அல் காலிதி எனும் மற்றொரு பெண், வாகனத்தை ஓட்டிச் சென்றபோது போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினரால் நிறுத்தப்பட்டுள்ளார். தான் உடனடியாக வீடு செல்ல வேண்டும் என்று கூறி தான் அங்கிருந்து நகர்ந்து விட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன், ஜேர்மன் அதிபர் அஞ்சலா மார்கல் ஆகியோர் சவூதியில் பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு ஆதரவளிப்பதாகக் கூறியுள்ளனர். இதேநேரம், பெண்கள் வாகனம் ஓட்ட முடியாது என்ற உத்தியோகபூர்வமான சட்டம் நாட்டில் அமுலில் இல்லை எனவும், மார்க்கத்தின் பெயரால் இக்கருத்து அங்கு நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# லிபியா: நேட்டோ தாக்குதல்கள் மனிதாபிமான நெருக்கடியை கூர்மைப்படுத்துகின்றது!

## நிறுத்துமாறு இத்தாலி வலியுறுத்துகின்றது



திரிப்போலியில் கடந்த வாரம் நேட்டோ படைகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்துள்ள சம்பவம் பாரிய விமர்சனங்களை எழுப்பியுள்ளது. நேட்டோவின் கண்மூடித்தனமான இராணுவ நடவடிக்கை சட்டவிரோதமானது என்று கண்டிக்கப்படுகின்ற போதும் லிபியா மீது மேற்கு நாடுகளின் இத்தகைய தாக்குதல்கள் தொடர்வது அந்நாட்டின் எதிர்காலத்தை சூனியமாக்கி விடும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

நேட்டோவின் காட்டுமிராண்டித்தனமான இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படுவதோடு, லிபியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகாணப்பட வேண்டும் என மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையில் திரிப்போலியும் பெங்காஷியும் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கும் நிலையில், கேர்னல் கடாபி அரசாங்க உயர் அதிகாரி ஒருவருடன் செஸ் விளையாடும் காட்சியை கடாபியின் தொலைக் காட்சியொன்று ஒளிபரப்பியது.

அரசாங்கத்தின் பேச்சாளர் மூஸா இப்றாஹீம், நேட்டோ படையினர் சிவிலியன்களை படுகொலை செய்வது ஊடகங்களிடம் அறிக்கை விட்டு வரும் அதேவேளை, கடாபி எவ்வித உணர்ச்சியுமற்று தனது இராணுவத் தனத்தை வெளிப்படுத்தி வருவதை லிபியர்கள் கண்டித்துள்ளனர்.

நேட்டோ யாரைக் குறிவைக்கின்றது என்பது தெளிவற்றதாகவே உள்ளது. இதன் காரணமாகவே பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனாவும் ரஷ்யாவும் லிபியா மீதான நேட்டோ நடவடிக்கைக்கு ஆதரவாக வாக்களிப்பதிலிருந்து விலகிக் கொண்டன. லிபியாவின் வான் எல்லையை ஆக்கிரமித்துள்ள நேட்டோ, அதன் தரமான எண்ணெய் வளத்தின் மீது குறிவைத்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

நேட்டோவின் இலக்குகளற்ற தாக்குதல்களுக்கும் பொதுமக்கள் உயிரிழப்புக்கும் இறுதிப் பொறுப்புக் கூறவேண்டிய கடாபி, அரண்மனையில் அமர்ந்தவாறு செஸ் விளையாடிக்கொண்டிருப்பது நாடே பற்றி எரிந்தபோது பிடில் வாசித்த ஐரோப்பிய மன்னரின் கதையையே நினைவுக்குக் கொண்டு வருகிறது.

கடாபியின் வெகுளித்தனம் இத்தோடு நின்றுவிடவில்லை. கிழக்கு லிபியாவின் குறிப்பாக பெங்காஷியின் எண்ணெய் கிணறுகளை அமெரிக்காவும் பிரிட்டனும் கைப்பற்றியுள்ள நிலையில், இறந்தால் லிபியாவிலேயே இறப்பேன். எதிரிகளுக்கு அஞ்ச மாட்டேன். என்னை அவர்கள் பிடிக்க முடியாது என்று வெகுளித்தனமான வாய்ச்சவடால்களை விட்டுக்கொண்டிருக்கின்றார்.

ரேகன் ஒருமுறை சொன்னது போன்று, கடாபி ஒட்டுமொத்த ஆபிரிக்காவினதும் முட்டாளாகவே இருந்து வருவதை மீளவும் நிரூபிக்கின்றார். இலக்குகள் அற்ற நேட்டோவின் தாக்குதல் லிபியாவை சிதைத்து வருகின்றது. அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். பல நகரங்களில் நெருக்கடியான வாழ்வை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். இந்நிலையில் பொதுத் தேர்தலை நடத்துவதாகவும் அதில் வெற்றி பெற்றால் தான் அதிகாரத்தில் இருப்பதாகவும் தோல்வியுற்றால் அதிகாரத்திலிருந்து விலகுவதாகவும் கடாபி கூறியிருப்பது அதிகாரத்தை மிக இலகுவாக இழப்பதற்கு கடாபி தயாரில்லை என்பதையே காட்டுகின்றது.

தந்தை சார்பாக மகன் ஸைபுல் இஸ்லாம் இவ்வறிவித்தலை கடந்த வாரம் விடுத்திருந்தார். கிளர்ச்சியாளர்களோ கடாபியின் இவ்வறிவித்தலைக் கேட்பதே நேரத்தை வீணடிக்கும் செயல் என்று நிராகரித்துள்ளனர். இதே வேளை, தனது சொந்த மக்களுக்கு எதிரான யுத்தத்தை கடாபி இன்னும் நிறுத்தவில்லை. யூத, சியோனிஸ மனப்பான்மையோடு கிளர்ச்சியாளர்கள் தரப்பில் காயப்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்படும் மருத்துவ உதவிகளைக் கூட கடாபியின் படை தடுத்து வருகின்றது. கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவான நகரங்களுக்கு மனிதாபிமான உதவிகள் செல்வதற்கும் இடைஞ்சல்களை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஐந்து மாதங்களாக நடைபெற்று வரும் சிவில் யுத்தத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மக்களைக் காப்பாற்றுவதாகக் கூறிக் கொண்டு களமிறங்கிய நேட்டோ, மனதாபிமான நெருக்கடியை மேலும் கூர்மைப்படுத்தியுள்ளது. லிபிய தேசிய கவுன்ஸிலை இது வரை 16 நாடுகள் அங்கீகரித்துள்ளன. ஆனால், தேசிய சபை மேற்கு நாடுகளுக்குச் சார்பானது. ஒரு புறம் நேட்டோ படையின் தாக்குதல். இன்னொரு புறம் கடாபியின் விசுவாசப் படையின் தாக்குதல் என்று இரண்டுக்கும் இடையில் சிக்கியுள்ள மக்கள், பெரும் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளனர்.

கெய்ரோவில் ஆபிரிக்க ஒன்றியம், அறப் லீக், ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. சபை ஆகியன இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், லிபிய மக்களின் நியாயமான அபிலாசைகளுக்கு பதிலளிக்கும் அரசியல் தீர்வொன்றை தீவிரப்படுத்துமாறு கோரியுள்ளன. ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார தலைவர் கதரின் ஏஸ்டன், அறப் லீக் தலைவர் அம்ர் மூஸா, ஆபிரிக்க ஒன்றியத் தலைவர் ஜீன் பிங், ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் ஆகியோர் இதில் ஒப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே சமீபத்திய நேட்டோ தாக்குதலைக் கண்டித்துள்ள இத்தாலி, நேட்டோ படைகளின் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளது. இத்தாலியின் வெளிவிவகார அமைச்சர் பிரான்கோ ப்ராட்டினி நேட்டோ படையின் தாக்குதல் மனிதாபிமான உதவிகளுக்குத் தடையாக இருப்பதாகவும் சிவிலியன்களின் இயல்பு வாழ்வைப் பாதித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# பின் அலிக்கு 35 ஆண்டு கால சிறைத்தண்டனை

துனீசியாவின் முன்னாள் ஜனாதிபதி பின் அலி தனக்கெதிரான சகல குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ளார். அறபுப் புரட்சியில் முதன் முதலாக பதவி கவிழ்க்கப்பட்ட பின் அலி, தற்போது சவூதி அறேபியாவில் தஞ்சம் கோரியுள்ள நிலையில், பின் அலிக்கு எதிரான விசாரணைகள் துனீசியாவில் தொடங்கப்பட்டுள்ளன. 1981ம் ஆண்டிலிருந்து ஜனாதிபதியாக இருந்து வந்த பின் அலி பல்லாயிரக்கணக்கானோரை படுகொலை செய்த கொலையாளி என்பதோடு, நாட்டின் சொத்துக்களை சூறையாடிய பெரும் திருடர் எனவும் அறியப்பட்டவர்.

பின் அலிக்குச் சார்பாக வாதாடும் பெய்ரூத்தைச் சேர்ந்த சட்டத்தரணி அக்ரம் அஸூரி, பின் அலி மீதான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று கூறியிருப்பது மிகுந்த நகைப்புக்கிடமானது. பின் அலி மிகப் பெரும் பணத் தொகையோடு நாட்டை விட்டு தப்பியோடியுள்ளார். ஜனவரி 14ல் சவூதிஅறேபியாவுக்கு தப்பித்துச் சென்ற பின் அலி மீது துனீசியாவின் குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிது. அவர் மீது 93 வழக்குகள் பதிவாகியுள்ளன. தற்போது



சில குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் பட்டு 35 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள், ஆயுதங்கள், பெருமளவு பணம் என்பன பின் அலியின் வாசஸ்தலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக இடைக்கால அரசாங்கம் கூறுகின்றது. முதற்கட்ட விசாரணையை அடுத்தே பின் அலிக்கு பிரஸ்தாபத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் எதிர் காலத்தில் தொடரப்படவுள்ளன.

''விசாரணைகள் இப்போதே தொடங்கப்பட்டுள்ளன. இதன் பின்னரே பல உண்மைகள் வெளி வரும்'' என்று பின் அலிக்கு எதிராக ஆஜராகியுள்ள சட்டத்தரணிகள் கூறுகின்றனர். படுகொலை, சித்திரவதை, தொல்பொருள் சான்றுகளைக் கடத்திச் சென்றமை என்பனவும் பின் அலியின் மீதான குற்றச்சாட்டுகளில் உள்ளடங்குகின்றன.

93 வழக்குகளில் 33 வழக்குகள் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. டிசம்பர் 17 லிருந்து ஜனவரி 14 வரை நடைபெற்ற மக்கள் எழுச்சியின்போது 300 பொதுமக்கள் கொல்லப்படக் காரணமாக இருந்த முன்னாள் உள்நாட்டு அமைச்சர் ரபீக் பல் ஹாஜூம் விசாரிக்கப்படவுள்ளதாக இராணுவ நீதித்துறை தலைவர் மர்வான் போர்கொய்ரா தெரிவித்துள்ளார்.

தற்போது பின் அலியும் அவரது மனைவி லைலா தாபல்ஸியும் சமூகமளிக்கா நிலையில் (Absentee) விசாரிக்கப்பட்டு வருகின்றனர். சவூதியிலுள்ள இருவரதும் வெளிநாட்டிலுள்ள சொத்துக்களை பல ஐரோப்பிய நாடுகள் முடக்கி வைத்துள்ளன. 1980களில் முன்னாள் ஆட்சியாளர் ஹபீப் போர் கொய்பாவுக்கு பைத்தியம் பிடித்து விட்டதாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததைத் தொடர்ந்தே பின் அலி பதவிக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## யெமனில் அமெரிக்கத் தலையீட்டை ஸாலிஹ் திட்டமிட்டு ஊக்குவிக்கின்றார்

தாக்குதலில் காயமடைந்த யெமன் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் ஸாலிஹின் உடல்நிலை தேறியுள்ளபோதும் அவர் யெமனுக்குத் திரும்புவது நிச்சமற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. சவூதி அறேபியாவில் சிகிச்சை பெற்று வந்த ஸாலிஹ், நாடு திரும்ப முடியாது என்று ஏற்கனவே யெமனில் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்திருந்தனர்.

உப ஜனாதிபதி அப்துர் ரப் மன்ஸூருடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வரும் ஸாலிஹ், தான் அவசரமாக நாடு திரும்பவுள்ளதாகக் கூறியுள்ளார். காயப்பட்டதற்குப் பிற்பாடு ஸாலிஹ் இது வரை பொதுமக்கள் முன்னிலையில் சமூகமளிக்காமை, சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சவூதி அறேபியாவிலுள்ள இராணுவ மருத்துவமனை ஒன்றில் விசேட சிகிச்சை பிரிவில் ஸாலிஹ் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதற்கிடையில் பஹ்ரைன் மன்னர் அம்மார் ஸாலிஹை தனது நாட்டுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி நாட்டில் இல்லாத சூழலில் உப ஜனாதிபதி மீதான மக்களின் அழுத்தம் அதிகரித்து வருகின்றது.

ஜனாதிபதியின் மகன் அஹ்மத் தற்போது பொதுமக்களுக்கு எதிரான குடியரசுப் படைக்கு தலைமை தாங்குகின்றார். கடந்த ஐந்து மாத காலத்தினுள் குறைந்தது 300 பொதுமக்கள் அரச படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். யெமனில் தொடர்ந்தும் கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அமெரிக்காவின் தலையீட்டை ஊக்குவித்துள்ள ஸாலிஹ், அல்காயிதா போராளிகள் நாட்டில் ஊடுருவியுள்ளதாகக் கூறி அமெரிக்க விமானப் படையின் தலையீட்டை வரவேற்றுள்ளார்.

தற்போது யெமனின் சில பகுதிகளில் அமெரிக்க போர் விமானங்கள் நடாத்தி வரும் தாக்குதல் உள்நாட்டில் நடைபெற்று வரும் மக்கள் எழுச்சியை திசை திருப்பும் உள்நோக்கம் கொண்டது என்று அவதானிகள் கருதுகின்றனர்.




# மொரோக்கோ: புரட்சிக்குத் தயாராகும் சிவில் சமூகம்

றவூப் ஸெய்ன்


வடஆபிரிக்காவின் நான்கு முஸ்லிம் நாடுகளில் ஒன்றான மொரோக்கோ 1956ல் பிரான்ஸிடமிருந்து சுதந்திரம் பெற்றது. கடந்த அரை நூற்றாண்டு காலமாக மன்னராட்சியில் நீடிக்கும் இந்நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்று அமைச்சரவை ஒன்று செயல்படுகின்ற போதும் அரசியல் அதிகாரம் முழுவதும் மன்னரின் கைவசமே உள்ளது.

அரசியலமைப்புக்கு உட்பட்ட மன்னராட்சியில் (Constitutional Monarchy) பாராளுமன்றமும் நீதித்துறையும் மிகவும் பலவீனமாகவே உள்ளன. அரசியலமைப்பில் மன்னருக்கே அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. பிரதமரைத் தெரிவுசெய்யும் அதிகாரமும் அமைச்சரவையின் அங்கத்தவரைத் தெரிவுசெய்யும் அதிகாரமும் மன்னருக்கே உள்ளது.

16 நிருவாக பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டுள்ள மொரோக்கோவில் ஒவ்வொரு நிருவாகப் பிராந்தியமும் தனித்தனி கவர்னர்களால் நிர்வகிக்கப்படுகின்றது. பாராளுமன்றத்தைக் கலைப்பதும், தேர்தல்களை நடாத்துவதும் மன்னரின் முடிவைப் பொறுத்தே அமையும். பாதுகாப்புத் துறைத் தலைவராகவும் அரசியல் அதிகாரத்தின் தலைவராகவும் விளங்கும் மன்னர், அமீருல் முஃமினீன் என்றே அழைக்கப்படுகிறார்.

1996ல் மேற்கொள்ளப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தின்படி இரு அவை கொண்ட பாராளுமன்ற முறை அறிமுகமானது. அவை கீழ்சபை, பிரதிநிதிகள் சபை என அழைக்கப்படுகின்றன. கீழ்சபை நேரடியான தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படுகின்றது. மேல்சபை மறைமுகமாக பல்வேறு பிராந்திய, உள்ளூர் சபைகளின் மூலம் தெரிவுசெய்யப்படுகின்றது. பாராளுமன்றத்தின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டது.

| | |
|---|---|
| **மொரோக்கோ** | |
| பரப்பு: | 710850 சதுர கிலோ மீற்றர் |
| மக்கள்: 3 | 3.8 மில்லியன் (2007) |
| தலைநகர்: | ரபாத் (சனத்தொகை 1.6 மில்லியன்) |
| அரசாங்கம்: | அரசியலமைப்புக்குட்பட்ட மன்னராட்சி |
| நாட்டின் தலைவர்: | மன்னர் 6ம் முஹம்மத் |
| பிரதமர்: | அப்பாஸ் அல் பாஸி |
| எல்லைகள்: | மொரிடானி, அல்ஜீரியா, மேற்கு ஸஹாரா ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளது. |


மொரோக்கோ அமீருல் முஃமினீன் மன்னர் ஆறாம் முஹம்மத்

மொரோக்கோவின் கீழ்க் கட்டுமான வசதிகள் பெருமளவு அபிவிருத்தியடைந்துள்ளன. பாதைகள், ரயில் போக்குவரத்து, தொடர்பாடல், குடிநீர், மின்சாரம் என்பன பாரியளவு வளர்ச்சி கண்டுள்ளன. பொருளாதாரத்தை தாராளமயமாக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. 2007 செப்டம்பரில் நடைபெற்ற தேர்தலே மொரோக்கோவில் இறுதியாக நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலாகும். அது நீதியானதும் சுதந்திரமானதும் என சர்வதேச கண்காணிப்பாளர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

ஆயினும், மொரோக்கோவின் அரசியல் வரலாற்றிலேயே ஆகக் குறைந்த வாக்காளர்கள் பங்கு கொண்ட தேர்தலாக அது கருதப்படுகின்றது. பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களில் 37%த்தினரே வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். இஸ்திக்லால் கட்சியின் தலைவர் அப்பாஸ் அல் பாஸி தேர்தலை அடுத்து மன்னரால் பிரதமராக நியமிக்கப்பட்டார். 33 கட்சிகளும், 13 சுயேட்சைக் குழுக்களும் இத்தேர்தலில் களமிறங்கியிருந்தன.

325 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மொரோக்கோவில் 95 தொகுதிகள் உள்ளன. இத்தேர்தலில் நீதிக்கும் அபிவிருத்திக்குமான இஸ்லாமியக் கட்சி போட்டியிட்டது. ஸஅத்தீன் உஸ்மானி தலைமையிலான இக்கட்சி 10.9 வீதமான வாக்குகளைப் பெற்று 46 ஆசனங்களைப் பெற்றது. மொத்தமாக அக்கட்சி 503396 வாக்குகளைப் பெற்றது.

2005ம் ஆண்டில் அமெரிக்காவின் அரச திணைக்களம் மேற்கொண்ட கருத்துக் கணிப்பீடொன்றில், மொரோக்கோவின் பிரதான இஸ்லாமியக் கட்சியான நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியே 2007ல் நடைபெறவுள்ள தேர்தலில் 47%மான வாக்குகளைப் பெறும் என எதிர்வு கூறியிருந்தது.

உண்மையில் இவ்வாறானதோர் கருத்துக் கணிப்பீட்டை அமெரிக்க இராஜாங்க திணைக்களம் ஏன் மேற்கொண்டது என்பது பற்றி பல்வேறு சந்தேகங்கள் அப்போதே எழுப்பப்பட்டது. இதனால் கட்சியைத் தோற்கடிப்பதற்கான முனைப்புகளையே வொஷிங்டன் எதிர்பார்த்திருந்தது.

மன்னர் ஆறாம் முஹம்மத் இஸ்லாமிய கட்சிகளுடன் இணைந்தே அடுத்த அரசாங்கம் அமைக்கப்படும் என கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்ற இஸ்திக்லால் கட்சியின் தலைவர் அப்பாஸ் பாஸீ மன்னரால் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

மெரோக்கோவில் இயங்கி வரும் பல்வேறு இஸ்லாமிய கட்சிகளிடையே மிகப் பெரும் செல்வாக்குள்ள கட்சியாக மட்டுமன்றி, ஒட்டுமொத்த வடஆபிரிக்காவிலேயே வேகமாக வளர்ந்து வரும் இஸ்லாமியக் கட்சியாகவும் மொரோக்கோவின் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியே விளங்குகின்றது. ஸலபிய்யதுல் ஜிஹாதிய்யா எனும் மற்றொரு இஸ்லாமியக் கட்சியும் களத்தில் செயற்பட்டு வருகின்றபோதும், அக்கட்சி, தான் ஒரு இஸ்லாமியக் கட்சி அல்ல எனவும் சோசலிஸ கட்சிகள் போன்று தானும் ஒரு கட்சி எனவும் பிரச்சாரம் செய்து வருகின்றது.

இஸ்திக்லால் கட்சிக்கு அடுத்ததாக அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சியாக நீதிக்கும் அபி விருத்திக்குமான கட்சி விளங்குகிறது.

வடஆபிரிக்காவின் ஏனைய நாடுகளான அல்ஜீரியா, தூனீசியா, லிபியா என்பவற்றோடு ஒப்பிடுகையில் மெரோக்கோவில் இஸ்லாமியவாதிகளின் வளர்ச்சி அதிகமாகும். ஏனைய நாடுகளைப் போன்று இஸ்லாமியவாதிகள் மீதான அழுத்தம் ஒப்பீட்டு ரீதியில் இங்கு குறைவாகும். பிரான்ஸின் ஆதிக்கம் மதச்சார்ப்பற்ற சோசலிஸ கட்சிகளின் செல்வாக்கு, மேற்குமயமாதல் ஆகிய பாரிய சவால்களுக்கு மத்தியிலேயே இஸ்லாமியவாதிகளின் அரசியல் போராட்டம் தொடர்கின்றது.

மொரோக்கோவின் இடதுசாரி சோசலிஸக் கட்சிகளே இஸ்லாமியவாதிகளுக்கு சவாலாக உள்ளன. இஸ்லாமிய அரசியல் கட்சிகள் பாராளுமன்றத்தில் செல்வாக்குப் பெறுவதை தடுக்கும் நோக்கில் பல்வேறு சூழ்ச்சித் திட்டங்களை இடதுசாரிக் கட்சிகள் மேற்கொண்டிருந்தன. எனினும், அவை வெற்றியளிக்கவில்லை. மொரோக்கோவில் மிகக் குறைந்த சிறுபான்மையாக வாழும் யூத சமூகத்திலிருந்து கடந்த அரை நூற்றாண்டு கால அரசியல் வரலாற்றில் முதன் முறையாக ஒரு பெண் பாராளுமன்றம் தெரிவாகியுள்ளார்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 1%மாக வாழும் யூதர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சோசலிஸக் கட்சியில் களமிறங்கிய அவர் பாராளுமன்றம் தெரிவாகியுள்ளார். 2007 தேர்தலைப் பொறுத்தமட்டில் அதற்கு முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிடும்போது இஸ்லாமியவாதிகள் பெற்ற வெற்றி பாரியதாகவே கருதப்படுகின்றது.

இன்று அறபுலகின் பல பிராந்தியங்களிலும் நடைபெற்று வரும் அரசாங்கத்திற்கு எதிரான புரட்சிகள் மொரோக்கோவிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளன. மன்னருக்குள்ள அதிகாரத்தைக் குறைத்து ஜனநாயக ரீதியான சீர்திருத்தங்களைக் கொண்டு வருமாறு கோரும் வீதி ஆர்ப்பாட்டங்கள் மொரோக்கோவிலும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எகிப்து: செப்டம்பரிலேயே தேர்தலை நடாத்தத் தீர்மானம்

எதிர்வரும் செப்டம்பரிலேயே தேர்தலை நடாத்துவதற்கு எகிப்தின் ஆளும் இராணுவ சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஊடக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தேர்தலை பிற்போடுமாறு எகிப்தின் மதச்சார்பற்ற சில அரசியல் கட்சிகள் இடைக்கால இராணுவ அரசாங்கத்தை அழுத்தி வருகின்றன.


ஏற்கனவே, தேர்தல் பிற்போடப்படும் என்று உப ஜனாதிபதி யஹ்யா அல் ஜமால் செய்மதி தொலைக்காட்சி சேவை ஒன்றிடம் தெரிவித்திருந்த கருத்தை இடைக்கால இராணுவ சபை மறுத்துள்ளது.

மார்ச்சில் நடைபெற்ற அபிப்பிராய வாக்கெடுப்பில் 77%மான எகிப்தியர்கள் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க வேண்டும் என்று கேட்டிருந்தனர். அரசியலமைப்பை உருவாக்குவதற்கு முன்பாக பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தது.

எதிர்வரும் தேர்தலுக்கு நீதிக்கும் சுதந்திரத்திற்குமான கட்சி முழு அளவில் தயாராகி வருகின்ற நிலையில், மதச்சார்பற்ற கட்சிகள் தேர்தலை பிற்போடுமாறு வேண்டி வந்தன. நீதிக்கும் சுதந்திரத்திற்குமான கட்சி சகோதரத்துவ அமைப்பின் உத்தியோக பூர்வமான கட்சியாகும். இவர்கள் இத்தேர்தலில் வெற்றிபெற்றால் அரசியலமைப்பை வரைவதில் செல்வாக்குப் பெற்றுவிடுவார்கள் என்ற அச்சத்தினாலேயே மதச்சார்பற்றி கட்சிகள் தேர்தலை பிற்போடுமாறு வேண்டின.

# உங்கள் குழந்தைகளும் நாணயங்களும்

இப்னு ஹபீபா



**பெற்றோர்களே! எந்தக் காரணமுமின்றி உங்கள் குழந்தைகளுக்கு பணம் கொடுக்க வேண்டாம். மாறாக, அவர்களுக்கு பணம் கொடுக்க விரும்பும் போதெல்லாம் அதற்கான காரணத்தைத் தேடி அறிந்து கொள்ளுங்கள்.**

- உங்கள் குழந்தை தனது கையில் தவழும் நாணயங்களின் பெறுமதியை அறிந்து வைத்துள்ளார்களா?
- அவை அனைத்தையும் ஒரே தினத்தில் செலவு செய்து விடுவதற்கும் சேமிப்பதற்கும் இடையில் வித்தியாசத்தை அறிந்து வைத்துள்ளார்களா?
- வீண்விரயம், உலோபித்தனம் இன்றி செலவு செய்வதில் சம நிலையைப் பேணுகிறார்களா?
- அறிஞர் காலித் ஷன்தூத் என்பவர் தனது 'முஸ்லிம் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதிலே வீட்டின் பங்களிப்பு' எனும் நூலில் இப்படிக் குறிப்பிடுகின்றார். பெற்றோர்கள், உறவினர்கள், குழந்தைகளுக்கு பணம் கொடுப்பதை பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். கோபப்படும் போதெல்லாம் திருப்திப்படுத்தவும் உறவினர்களிடமிருந்து நன்கொடைகள் என்ற வகையிலும் பெற்றுக் கொள்கின்றனர்.
- இவ்வாறாக வழங்கப்படும் பெரும்பாலான நாணயங்களின் மூலம் குழந்தைகள் ஐஸ்பழங்கள், இனிப்புப் பண்டங்கள் அல்லது நடமாடும் வியாபாரிகளிடம் உணவுப் பண்டங்கள் போன்ற வற்றை வாங்குகின்றனர். இவை தொடர்ந்தேர்ச்சியான சில நோய்களுக்குக் காரணமாக அமைவதோடு, பண்பாட்டு, உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றன. இதனால்
- குழந்தைகள் நாணயங்களை எவ்விதக் கஷ்டமும் சிரமமுமின்றி இலகுவாகப் பெற்றுக் கொள்வதை வழக்கப்படுத்திக் கொள்கின்ற இந்தப் பழக்கமானது தவறான ஒரு விடயமாகும். மனித உள்ளம் இலகுவாகப் பெறும் விடயங்களை அவசரமாகவே களைந்து விடுகிறது. கஷ்டப்பட்டுப் பெரும் விடயங்களைத் தான் கவனமாக வைத்திருக்கிறது.
- குழந்தைகள் பணத்தை வீண் விரயம் செய்வதையும், வீணாக செலவு செய்து விடுவதையும் பழக்கப்படுத்திக் கொள்கின்ற அதேவேளை சேமிப்பைப் பழக்கப்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக தனக்குக் கிடைக்கும் அனைத்து செல்வத்தையும் செலவழிக்கின்றனர்.
- குழந்தைகள் வீண்விரயத்தை வழக்கப்படுத்திக் கொண்ட போது ஏதோவொரு காரணத்தால் பணம் கிடைக்காவிட்டால் திருட ஆரம்பித்து விடுகின்றனர்.

எனவே, இவற்றிற்குத் தீர்வு பெற்றோர் குழந்தைகளுடன் நடந்து கொள்ளும் விதத்தில்தான் உள்ளது.

பெற்றோர்களே, எந்தக் காரணமுமின்றி உங்கள் குழந்தைகளுக்கு பணம் கொடுக்க வேண்டாம். மாறாக, அவர்களுக்கு பணம் கொடுக்க விரும்பும் போதெல்லாம் அதற்கான காரணத்தைத் தேடி அறிந்து கொள்ளுங்கள்.

1. மகனே! நீங்கள் சுத்தமாக நேர்த்தியாக இருக்கிறீர்கள். இதோ உங்களுக்கு ஒரு பரிசு பெற்றுக் கொள்ளுங்கள்.

2. மகனே! நீங்கள் நேர காலத்துடன் காலையில் எழுந்து தினமும் சுபஹ் தொழுகையை நிறைவேற்றுகிறீர்கள். இதோ அதற்காக உங்களுக்கு ஒரு பரிசு என்று கூறலாம்.

பாடசாலை செல்ல ஆரம்பித்ததன் பின்பு அதிகமான காரணங்களைக் கூறலாம்.

கல்வியில் சிறந்து விளங்குவதற்காக, அல்குர்ஆனில் ஒரு பகுதியை மனனமிட்டதற்காக, தொழுகையில் பேணுதலாக இருப்பதற்காக அதுபோல் அவரிடம் தனது இளைய சகோதரருக்கு ஏதாவது கற்றுக் கொடுக்கும்படி வேண்டலாம். இவை எல்லாவற்றிற்கும் பின்னால் உள்ள இலக்கு என்னவெனில் சிறிய வயது முதலே கஷ்டம் சிரமத்தின் பின்புதான் பணம் சம்பாதிக்கலாம் என்று புரிய வைத்து பணத்தின் பெறுமதியை உணர்த்துவதாகும்.

ஒருமுறை ஒரு செல்வந்த தந்தையிடம் அவரின் சிறிய மகன் ஒரு துவிச்சக்கரவண்டி வாங்கித்தரும்படி கேட்டான். தந்தையோ தன்னிடம் போதிய பணமில்லை என்று கூறிவிட்டார். பின்பு தான் சிறியதொரு தொகையை தினமும் தருவதாகவும் அதனை உண்டியலில் சேமித்து துவிச்சக்கரவண்டி வாங்குவோம் என்று ஒரு யோசனையையும் மகனுக்குக் கூறி அப்படியே செய்தார்.

இந்த நடவடிக்கை குழந்தையிடம் பணம் கஷ்டத்திற்கும் சிரமத்திற்கும் மத்தியில்தான் பெறப்படுகின்றது என்ற எண்ணத்தை விதைத்து விடுகின்றது. இதனால் பணத்தின் பெறுமதியை அந்த குழந்தை அறிந்து கொள்கின்றது.

பெற்றோர்களே! குழந்தையை சேமிப்புக்குப் பழக்கப்படுத்துங்கள். அதற்காக உண்டியல்களைக் கொடுத்து தான் பெறும் பணத்தில் ஒரு பகுதியையேனும் அதில் சேமிக்கப் பழக்குங்கள். சிறிய தொகையாயினும் அவர்கள் பெறுவதை எல்லாம் முழுமையாக செலவழிக்காது கண்காணித்து வாருங்கள். ஏனெனில், இவ்வாறு முழுமையாக செலவழிக்கும் இந்தப் பழக்கம் மோசமானதாகும். பின்பு அவரின் சேமிப்புப் பழக்கத்தினால் விளையாட்டுப் பொருட்களையோ அல்லது அவர்களுக்குத் தேவையான பொருட்களையோ வாங்கிக் கொடுக்கலாம்.

பெற்றோர்களே! உங்கள் குழந்தை சாதாரண தரத்தில் பாடசாலையில் பயிலும் வயதில் அவர்களுக்குத் தேவையான உபகரணங்களையும் ஆடைகளையும் வாங்குவதற்குப் போதுமான பணத்தை அவர்களிடமே கொடுங்கள். அதுபற்றி கண்காணிக்கக் கூடியவராகவும் இருந்து கொள்ளுங்கள்.

நிச்சயமாக இதனால் உங்கள் குழந்தையிடம் பொறுப்புணர்ந்து வளரும். நாட்ட சக்தி விரிவடையும். தீர்மானிக்கும் ஆற்றல் பெருகும். குறிப்பாக இது வாழ்வில் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும்.

பெற்றோர்களே! உங்கள் குழந்தை ஆரம்ப தரத்தில், சாதாரண தரத்தில், உயர் தரத்தில் எந்த வயதை உடையவராக இருப்பினும் அவரிடம் ஒரு குறிப்பை வேண்டுங்கள். அதாவது தனது வரவு செலவுகளை திகதிகள் குறிக்கப்பட்டு பதிவு செய்த ஒரு குறிப்பை வேண்டுங்கள். இதனை மாதாந்தமோ அல்லது வாராந்தமோ அல்லது ஒரு குறித்த முறையிலோ பெற்று அதனைப் பரிசீலனைக்கு உட்படுத்துங்கள். அதிலே வீண்விரயங்களைக் கண்டால் அதற்காக உபதேசம் செய்து செலவுகளைக் குறைக்கலாம். அதுபோல உலோபித்தனத்தைக் காணும்போது அதற்காகவும் உபதேசம் வழங்கி செலவழிக்க வேண்டிய விடயங்கள் எவை என்பது பற்றி நெறிப்படுத்தலாம்.

பெற்றோர்களே! இறுதியாகவும் முக்கியமாகவும் ஒரு விடயத்தை உங்களிடம் வேண்டுகிறேன். உங்கள் குழந்தைகளை சிறுவயதிலிருந்தே அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யப் பழக்குங்கள். ஏழைகளுக்கு ஸதகாக்கள் கொடுக்கத் தூண்டுங்கள். அதேபோல் உலோபித்தனத்தை விட்டும் அவர்களது உள்ளத்தை துடைத்து விடுங்கள்.

நிச்சயமாக இந்த விடயம் முன்மாதிரியினூடாகத்தான் வளர முடியும். இந்த விடயத்தில் உங்களைப் பார்த்தே உங்கள் குழந்தைகள் நடந்து கொள்வார்கள். எனவே, இதில் முன்மாதிரியாக இருந்து கொள்ளுங்கள். அதுபோலவே அல்குர்ஆன் இது தொடர்பாகக் கூறும் விடயங்களை அவர்களுக்கு விளங்கப்படுத்துங்கள்.

அல்லாஹ்வின் பாதையில் தங்கள் செல்வத்தை செலவு செய்பவர்களுக்கு உவமையாவது ''ஒவ்வொரு கதிரிலும் நூறு தானிய மணிகளைக் கொண்ட ஏழு கதிர்களை முளைப்பிக்கும் ஒரு விதை போன்றது. அல்லாஹுதஆலா தான் நாடியவர்களுக்கு இதை மேலும் இரட்டிப்பாக்குகிறான். இன்னும் அல்லாஹுதஆலா விசாலமானவன். யாவற்றையும் நன்கறிந்தவன்.'' *(ஸூரத்துல் பகரா : 261)*

---


# திக்ர்: இறை ஞாபகம்

திக்ர் என்றால் இறைநினைவு, இறைவனைத் துதித்தல், தியானித்தல், இறைவனிடம் வேண்டுதல் என்று பொருள்படும். திக்ர் இரு முறைகளில் அமையும்.

1. நாவால் மொழிதல்
2. மனதால் நினைத்தல்

இது இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகளில் ஒன்றாகும். எனவே, நாம் இதனை அல்லாஹ்வும் அவனது தூதரும் கற்றுத்தந்த முறைப்படியே அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் அல்குர்ஆனிலே கூறுகின்றான் ''நபியே நீர் உம் மனத்திற்குள் மிகப் பணிவோடும் பயத்தோடும் (மெதுவாக) சொல்லில் உரத்த சத்தமின்றியும் காலையிலும் மாலையிலும் உமது இரட்சகனை நினைவுகூர்வீராக. அவனை மறந்திருப்போரில் ஒருவராக ஆகிவிடாதீர்.'' *(7:205)*

''ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அதிகமாக திக்ர் செய்யுங்கள். இன்னும் காலையிலும் மாலையிலும் அவனை துதி செய்யுங்கள்.'' *(33:41-42)*



''அல்லாஹ்வை நினைவு கூர்வதன் மூலம் உள்ளங்கள் அமைதி பெறுகின்றன.''

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; ''அல்லாஹ்வை திக்ர் செய்பவனுக்கும் திக்ர் செய்யாதவனுக்குமான உவமையானது, உயிருள்ளவனுக்கும் மரணித்தவருக்கும் ஒப்பானதாகும்.'' (புகாரி)

நபி (ஸல்) அவர்கள் அதிகமாக அல்லாஹ்வை நினைவுகூர்பவராக இருந்தார்கள். ஒரு நாளைக்கு நூறு தடவைகள் இஸ்திஃபார் (பாவ மன்னிப்பு) செய்யக்கூடியவர்களாக காணப்பட்டார்கள்.

எமது நாவு எப்பொழுதும் அல்லாஹ்வை நினைவுகூர்வதிலேயே ஈரமானதாக இருக்க வேண்டும். அன்றாட செயற்பாடுகளின் போதும் அதிகமாக அல்லாஹ்வை நினைவு கூர்பவர்களாக நாம் மாற வேண்டும். இதன்மூலம் எமது உள்ளங்கள் அமைதியடைவதுடன் எமது செயற்பாடுகளும் இலகுவாய் அமையும்.

அது மாத்திரமன்றி திக்ர் செய்வதன் மூலம் நாம் மேலும் பல பயன்களை அடைந்து கொள்ள முடியும். வாழ்வில் வெற்றி கிடைக்கும், உளத்தூய்மை ஏற்படும், உள்ளம் மென்மையாகும், ஈமான் அதிகரிக்கும், பாவ மன்னிப்பு கிடைக்கும், ஷைத்தானிடமிருந்து பாவமன்னிப்பு கிடைக்கும், அல்லாஹ்வின் அருளும் அன்பும் அதிகரிக்கும், மறுமையில் வெற்றி கிடைக்கும் இது போல பல்வேறு நன்மைகளையும் பயன்களையும் திக்ர் மூலம் அடைந்து கொள்ளலாம்.

எனவே, நாம் ஒவ்வொருவரும் அல்லாஹ்வை அதிகமாக நினைவுபடுத்துவதன் மூலம் இப்பயன்களை அடைவதோடு அல்லாஹ் விரும்பக்கூடிய நல்லடியானாக வாழ்ந்து இம்மையிலும் மறுமையிலும் அவனது நேசத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

ரமீஸா அபுல்பெளஸ்
கஹட்டோவிட்ட.

ஸியெம்மெம் ஸுபைர்

# பாவங்கள் நமக்கு பாடங்களாகட்டும்!




தஃவா பாதையில் பயணிப்போர் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டிய பாரதூரமான விடயமொன்று குறித்து இவ்விதழில் எமது கவனத்தை செலுத்துவோம்.

பொதுவாக பாவங்களுக்கும் இஸ்லாமிய அழைப்பாளர்களான தாஈக்களுக்குமிடையிலான இடைவெளி மிகவும் விசாலமானதாகவே காணப்படல் வேண்டும். அந்த விசாலமான இடைவெளி எப்பொழுதும் பேணப்பட்டே வரல் வேண்டும். அது குறித்து தாஈக்கள் எப்பொழுதும் கவனமெடுத்தல் முக்கியம்.

தாஈக்களின் தலைவரான நபி (ஸல்) அவர்கள் முதல் இவ்வுலகிற்கு வந்த அனைத்து சீர்திருத்தவாதிகளும் இதனை கவனத்தோடு பேணியுள்ளனர்.

*ரய்யாஹுஃல் கைஸி (றஹ்) அவர்கள் குறிப்பிடும் பின்வரும் கூற்றை அவதானியுங்கள்.*

நான் சுமார் நாற்பது பாவங்களை இழைத்திருக்கிறேன். அந்த ஒவ்வொரு பாவத்திற்காகவும் ஓரிலட்சம் தடவைகள் அல்லாஹுதஆலாவிடம் பாவ மன்னிப்புக் கோரியுள்ளேன். இக்கூற்று பாவங்கள் குறித்து நாம் எவ்வளவு பாரதூரமாக சிந்திக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறதல்லவா?

**கடந்த காலத்தில் இழைத்து விட்ட பாவங்களை நினைத்து வருந்துவதும் அவை பற்றி சிந்திப்பதும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் எமது ஆன்மாவை அசைத்து உலுக்கி எழுப்பி விடுகிறது.** எமது திடசங்கற்பத்தை வலுவடையச் செய்கிறது. இழந்து போன எத்தனையோ நல்ல விடயங்களை அடைந்து கொள்ள வழிசமைக்கிறது.


பாவத்திற்கு மேல் பாவங்களை இழைத்து விட்டு அவை பற்றி கிஞ்சிற்றும் பச்சாதாபப்படாது இருப்பது மிகப் பெரும் ஆபத்தாகும். அப்போது, குறித்த அப்பாவங்களுக்கு உள்ளம் பழகிப் போய்விடுகிறது. தொடர்ந்தும் பாவங்களையும் அனாசாரங்களையும் இழைக்கும் செயற்பாட்டிற்கு மனம் இயைபாக்கம் அடைந்து விடுகிறது. எமது எல்லை மீறிய பொடுபோக்கின் காரணமாக அவற்றை நாம் கண்டுகொள்வதுமில்லை. கணக்கிலெடுத்துக் கொள்வதுமில்லை.

பாவங்கள் எமக்கு சுமையாகத் தோன்றாமைக்கும் அவை பழகிப் போன ஒன்றாகத் தோன்றுவதற்கும் பிரதான காரணம் தீமைகள் பழகிப் போகின்றமையாகும். அன்றாடம் இடம்பெறும் தீமைகள் அல்லது சிறிய பாவங்கள் பெருகிப் போவதும் அவை அற்பச் செயலாக மாறிப்போய் வழக்காறாக மாறிவிடுவதும் மனிதனது உள்ளம் படிப்படியாக அதற்குப் பழகிப் போய் விடுவதற்கு காரணமாகிறது.

இறுதியில் எந்த பாவத்தை இழைத்தாலும் அது ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை. பாவத்தின் நோவு மனதில் ஏற்படுவதில்லை. மனசாட்சி குறுகுறுப்பதில்லை. தான் இழைத்துவிட்ட பாவங்கள் குறித்த குற்ற உணர்வும் குறுகுறுப்பும் அற்றுப் போவதற்கான இன்னொரு முக்கிய காரணம் பாவத்தை உணர்ந்து கொள்ளும் புலன் உணர்வு மண்டலம் செயலற்றுப் போவதாகும்.

சிலவேளை இவ்விடயம் தான் அபுல் ஹஸன் ஸய்யாத் (றஹ்) போன்ற நம் முன்னோர்களை கடுமையாக அச்சங்கொள்ளச் செய்திருந்தன போலும். அவர் சொல்வதைக் கேளுங்கள்:

என் கண்களுக்கு முன்னால் நிகழ்ந்து கொண்டிருக்கும் அதிகமான தீமைகளையும் பித்அத்களையும் நான் பொருட்படுத்தவில்லை. **நான் பயப்படுவதெல்லாம் உள்ளம் அவற்றுக்குப் பழகிப் போய்விடுமோ... அவற்றோடு அன்னியோன்யமாகி விடுமோ என்றுதான். ஏனெனில் உள்ளங்கள் எவற்றோடு அடிக்கடி தொடர்பு வைத்திருக்கின்றனவோ** அவற்றோடு ஒன்றித்து விடுகின்றன. பழகி விடுகின்றன. அன்னியோன்யமாகி விடுகின்றன. அவை அவ்வாறு மாறி விட்டால் மிக விரைவில் இறந்து போய் விடுகின்றன.




எனவே, உண்மையான முஃமின், அதிலும் குறிப்பாக ஒரு தாஈ தனது ஒவ்வொரு பாவத்தின் போதும் அது பற்றி பல தடவை சிந்திப்பான். அது ஏன் நடந்தது? இனிமேல் நடக்காமல் எவ்வாறு தன்னைப் பாதுகாத்துக் கொள்வது? அப்பாவத்தினால் வரப் போகின்ற விளைவுகள் என்ன என்றெல்லாம் பலவாறாக சிந்திப்பான்; கைசேதப்படுவான்; தன்னைத் தானே நிந்தித்துக் கொள்வான். அப்பாவம் எத்தனை முறை தனது வாழ்வில் நடந்துள்ளன என்பதையும் அவன் துள்ளியமாக அறிந்து வைத்திருப்பான்.

அவன் தனது பாவத்திற்காக, யாவற்றையும் நன்கறிந்த, மன்னிக்கும் மகா கிருபையாளனான வல்ல அல்லாஹ்விடம் பச்சாதாபப்பட்டு கண்ணீர் சிந்தி பாவ மன்னிப்புக் கோருவான்; இஸ்திஃபார்களை அதிகரிப்பான்; இறைவனின்பால் மிக விரைவாக மீண்டு விடுவான். பொழுதுகள் எத்தனை கழிந்தாலும், இரவுகள் எவ்வளவுதான் நீண்ட போதிலும் தான் இழைத்துவிட்ட பாவத்தின் கசப்புணர்வும் வடுவும் அவனது உள்ளத்தை விட்டும் இலகுவில் நீங்கி விடாது. அது நினைவுக்கு வரும்போதெல்லாம் அவன் தௌபா செய்வான். இஸ்திஃபாரை அதிகரித்துக் கொள்வான்.

எமது முன்னோர்களுள் சிலர் **தாம் இழைத்து விட்ட சிறு தவறுக்காக** நாற்பது வருடங்கள் அவற்றை நினைத்து வருந்தி அழுதிருக்கிறார்கள். எமது பார்வையில் அவை அற்பமானவையாக தோன்றிடினும் அவர்களது பார்வையில் அவை பெரும் பாவங்களாய் தோற்றமளித்தன. அவர்கள் நெறி பிறழாத சிக்கலற்ற உள்ளங்களைக் கொண்டிருந்தமையே அதற்கு அடிப்படைக் காரணம். அவை எப்பொழுதும் விழிப்போடிருந்தன. எனவே, ஒரு போதும் அவர்களது உள்ளங்களுக்கு பொடுபோக்கு ஊடுருவவில்லை. உலகத்தை நேசித்தல் போன்ற காரணிகள் அவர்களது உள்ளங்களிலுள்ள புலன் உணர்வுகளை செயலற்றுப் போகச் செய்யவில்லை.

நாற்பது வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த சிறு பாவத்தைக் கூட ஞாபகப்படுத்தி அதற்காக வருந்தினர் என்றால் அவர்களது வாழ்வில் பாவங்கள் எவ்வளவு குறைவாக நடந்துள்ளன என்பதை எமக்கு நன்கு ஊகித்துக் கொள்ள முடியும். அவர்கள் அவற்றை எண்ணி கணக்கிட்டே வைத்திருந்தனர் என்பதும் இங்கு நாம் கவனத்திற் கொள்ளத்தக்கது.

ஆனால், அவை எமது பார்வையிலோ மிக அற்பமானவையாகவே தோன்றுகின்றன. அவற்றை நாம் சிறு பாவங்களாகக் கருதுகிறோம். அவர்களது உள்ளங்கள் எப்பொழுதும் விழிப்போடிருந்ததன் விளைவாக சிறு பாவங்களைக் கூட பெரும் பாவங்களாகக் கருதின. நல்லவர்களின் நன்மைகள் (அல்லாஹ்வுக்கு மிகவும்) நெருக்கமானவர்களின் தீமைகள் என சொல்லப்படுவது போலவே அவர்களது நிலை காணப்பட்டது. அதனையே அல்குர்ஆனின் பின்வரும் வசனமும் தெளிவுபடுத்துகிறது. ''நீங்கள் அவற்றை (லேசாக) அற்பமாகக் கருதுகிறீர்கள். ஆனால் அவை அல்லாஹுவிடத்தில் மிகவும் பாரதூரமானவை'' (ஸூறதுன் நூர் : 15) இவ்வசனம் குறித்தும் நாம் சிந்திப்போம்.

எமது முன்னோர்களான ஸலபுகள் பாவத்தை பார்த்த விதம் வேறு. நாம் பாவத்தை பார்க்கும் விதம் வேறு. **பிலால் இப்னு ஸஃத் என்ற தாபிஈ சொல்கிறார்:**

பாவத்தின் சிறுமையையோ அற்பத் தனத்தையோ நீ நோக்காதே! மாறாக யாருக்கு நீ மாறு செய்தாய் என்பதை நோக்கு! பாவம் எவ்வளவு சிறியதாயினும் அது அல்லாஹுதஆலாவுக்கு செய்கின்ற மாறு என்பதையே நாம் இங்கு ஆழ்ந்து புரிந்து கொள்ளல் வேண்டும்.

இமாம் இப்னுல் கையிம் (றஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: ஓர் அடியான் தொடர்ந்து பாவம் செய்யும்போது அது அவனுக்கு அற்பமாகத் தோன்றும். உள்ளத்திற்கு சிறிதாகத் தோன்றும். இந்நிலை அவனது அழிவின் அடையாளமாகும். நிச்சயமாக அடியானின் கண்களுக்கு பாவங்கள் அற்பமாகத் தோன்றத் தோன்ற அல்லாஹ்வின் பார்வையில் அவை பாரதூரமானவையாக மாறுகின்றன.

*அதா அஸ்ஸுலைமி (றஹ்)* அவர்கள் ஒரு நாள் மிகக் கடுமையாக அழுது கொண்டிருந்தார். ஏன் இப்படி அழுகிறீர்கள்...? ஏதாவது பாரதூரமான ஒன்று உங்களுக்கு நடந்து விட்டதா? அல்லது யாரையாவது கொலை செய்து விட்டீர்களா? எனக் கேட்டார் ஒரு மனிதர். அதற்கவர், நான் நாற்பது வருடங்களுக்கு முன்னர் எனது பக்கத்து வீட்டுக்காரருக்குச் சொந்தமான ஒரு புறாவை வேட்டையாடி விட்டேன். பிறகு அதன் பெறுமதிக்கு நான் ஸதகா கொடுத்து விட்டேன். அது அந்த உரிமையாளனுக்குத் தெரியாது. அக்கொடிய செயலை நினைத்துத்தான் அழுகிறேன் என்றார்.

இதோ அபூ ஸுலைமான் அத்தாரானி (றஹ்) அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். எனக்கு நோய் வந்தால் எந்தப் பாவம் அந்த நோய்க்குக் காரணி என்பதை நான் நன்கறிவேன். என்கிறார். பாவத்தின் விளைவாக, அதன் பாரதூரத்தை நினைத்து நோயுறுமளவிற்கு அவர்களது நிலை காணப்பட்டது என்றால் எமது நிலை குறித்து நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

அல்லாஹ்வே...! நாம் எத்தனை, எத்தனை பாவங்களை இழைத்து விட்டிருக்கிறோம்...! எண்ணிலடங்காப் பாவங்களை இழைத்துவிட்டு அவற்றை மறந்து விட்டிருக்கிறோம்...! அது எமது ஈமானிய பலவீனத்தின் வெளிப்பாடே அன்றி வேறென்ன..?

ஒரு முஃமினைப் பொறுத்தவரையில் அவன் பாவத்தை இப்படித்தான் பார்க்க வேண்டும். அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். நிச்சயமாக ஒரு முஃமின் தனது பாவங்களை, தன் மீது எக்கணமும் விழுந்து விடக் காத்திருக்கும் ஒரு மலையைப் போன்றே நோக்குவான். ஆனால் ஒரு பாவியோ தன் மூக்கின் மீது அமர்ந்து விட்டுப் பறந்து விடும் அற்ப ஈயைப் போன்று தனது பாவங்களை நோக்குவான்.

அஹ்மத் இப்னு இஸ்மாஈல் (றஹ்) கூறுகிறார்: சிறு பாவங்களையிட்டு எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் தூய்மையான ஆடையில் விழும் சிறிய கரும்புள்ளிகளும் அதனை அழுக்காக்கி விடுகின்றன.

தஃவாப் பாதையில் பயணிக்கும் சகோதரனே! உன்னையிட்டு நீ எச்சரிக்கையாய் இரு. உனது ஆன்மாவை நீ பாதுகாத்துக் கொள். ஏனெனில் சிறு பாவங்கள் கூட உனது ஆன்மாவைக் கொன்று விட முடியும். பாவங்கள் சிறியவை தானே என அலட்சியமாய் இருந்து விடாதே! பொருட்படுத்தாமல் விட்டு விடாதே! எப்பொழுதும் மிகுந்த அவதானத்துடனிரு! சிறு பாவங்களாயினும் அவைபெரும் மலைகளாய் உனக்குத் தோன்றட்டும். இப்னுல் ஜௌஸி (றஹ்) அவர்கள் குறிப்பிடுவது போன்று, பாவம் மிகச் சிறியது என்பதற்காக அதனை அற்பமாகக் கருதாதே! ஏனெனில் கொழுத்த ஒட்டகத்தைக் கூட கழுத்தை நெறித்து கொன்று விடும் ஆற்றல் கொண்ட பலமான கயிறு சிறு சிறு தும்பிலிருந்து தானே உருவாகிறது...!. சிந்தித்து செயற்படுவோமா..?


ஊடகத் துறையில் ஒரு முன்மாதிரீ

# முன்மாதிரியான இஸ்லாமிய வெளியீட்டுத்துறை

இஸ்லாமிய வெளியீட்டுத் துறை இஸ்லாமிய செயற்பாட்டின் குறிக்கோள்களை சாத்தியப் படுத்தும் வினைத்திறன் மிக்க பங்கை நிறைவேற்ற வேண்டும். இஸ்லாத்தை சரியான முறையில் முன்வைத்தல், வழிபிறழ்வுகள் குறித்து எச்சரித்தல் மூலமாக அல் குர்ஆன், அஸ் ஸுன்னாவின் நிழலில் பல சமூக நோய்களுக்கு நிவாரணம் காண வேண்டும்.

வெறுமனே உழைப்பதற்காக மட்டும் அல்லாமல் தஃவாவை இலக்காகக் கொண்டு செயற்படும் இஸ்லாமிய வெளியீட்டகமாக அது இருக்க வேண்டும். ஆனால் கவலைக்குரிய விடயம் என்னவெனில் வெளியீட்டு நிறுவனங்கள் இளைஞர்களையும் மனிதர்களையும் இஸ்லாமிய நூல்களின்பால் கவர்ந்து, அவற்றின் விலையைக் கூட்டி விடுகின்றனர். பிரயோசனமற்ற நூல்களை வழங்குகின்றன.

இஸ்லாமிய வெளியீட்டகம் எதை வெளியிடுகிறது, யாருக்காக வெளியிடுகிறது என்ற வகையில் எழுத்தாளனின் திருப்தியையும் யாருக்காக எழுதுகிறோமோ அந்த வாசகர்களின் திருப்தியையும் கவனித்த பிறகே அதனைப் வெளியிட வேண்டும். தற்போது இஸ்லாமியப் போர்வை போர்த்திய நூல்கள் பல காணப்படுகின்றன. அவை இஸ்லாத்திற்கு முரணான விடயங்களை உள்ளடக்கி இஸ்லாத்திற்கு எதிராக சூழ்ச்சிகள் செய்கின்றன. இதுகுறித்து நாம் அவதானமாக இருக்க வேண்டும்.



முஸ்தபா மஷ்ஹூர்
தமிழில்: றுஸ்லி ஈஸா லெப்பை

**முன்மாதிரியான முஸ்லிம் எழுத்தாளன்**

இவர் தஃவா களத்திலே பொருத்தமான, பரயோசனமான விடயத்தை சிறந்த முறையில் தெரிவு செய்யக்கூடியவராக இருக்க வேண்டும். தேவையான தாக்கத்தை நிகழ்த்தக் கூடியவாறும் உள்ளத்திற்கும் அறிவிற்கும் கருத்துகள் சென்றடையக் கூடியவாறும் தெளிவான முறையில் விடயங்களை முன்வைக்க வேண்டும்.

முஸ்லிம் எழுத்தாளன் தனது கருத்துகளில் இஸ்லாம் பற்றி சரியான விளக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அவரது எழுத்து வழிகேடுகளையும், தவறுகளையும் விட்டு தூரமாகி இருக்க வேண்டும். இவரது தவறான விளக்கத்தினால் தாக்கமடைந்த வாசகர்கள் சுமக்க இருக்கின்ற பாவங்களை இவர் கணிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

எழுத்துத் துறையிலோ ஊடகத் துறையிலோ ஒவ்வொரு இஸ்லாமிய எழுத்தாளனும் திறமையை வளர்ந்து சமூகத்திற்கு பிரயோசனம் அளிக்க வேண்டும். ஊடகத்துறையிலே எந்தப் பகுதியையும் விட்டு வைக்காத அளவுக்கு கற்று அதனை இஸ்லாமிய மயப்படுத்த வேண்டும்.

இஸ்லாமிய கதாசிரியர் சில முக்கிய விவகாரங்களுக்கு தன் கதை சொல்லும் பாணியின் மூலம் தீர்வு சொல்ல வேண்டும். கதை சொல்லும் பாணிக்கு கவர்ச்சியும் தாக்கமும் இருக்கின்றது என்ற அடிப்படையில் சிறுவர், இளைஞர், முதியவர், ஆண், பெண் என பல மட்டங்களுக்கு தனது தீர்வைச் சொல்ல வேண்டும்.

இவ்வாறு தான் முன்மாதிரியான இஸ்லாமிய கவிஞரும் தனது கவிதை மூலமாக இஸ்லாமிய விவகாரங்களுக்கு தீர்வு சொல்ல வேண்டும். பாடல்கள் கூட இளைஞர், குழந்தைகள் என பல மட்டங்களை கவர்ந்து கொள்கின்றன. மனித உள்ளங்களிலே கவிதை வரிகளுக்கு தனியான இடமும் தாக்கமும் இருக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**இஸ்லாமிய புத்தகசாலை**

இஸ்லாமிய புத்தகசாலைகள், விநியோகத்துறை பரவலடைய புத்தகங்களை சிறந்த முறையில் காட்சிப்படுத்த வேண்டும். கொள்வனவாளர்களுக்கு அவற்றைக் கொள்வனவு செய்ய இலகுவாக இருக்கவும் புத்தகங்கள் மூலம் பிரயோசனம் அடையவும் அவற்றின் விலையை அளவுக்கதிகமாக உயர்த்தாமல் இருக்க வேண்டும்.

புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளில் பிரயோசனமான வற்றைத் தெரிந்து விநியோகம் செய்ய வேண்டும். முரண்பாடுகளை உண்டுபண்ணும் புத்தகங்கள் எவ்வளவு தான் பாரிய இலாபத்தைத் தந்தாலும் அவற்றைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய புத்தகசாலை பிரயோசனமான புதிய விடயங்களைப் பெற்று அவற்றைக் காட்சிப் படுத்தி விற்பனை செய்ய வேண்டும். இப்புத்தகசாலை வெளியீட்டுத் துறையுடன் சிறந்த தொடர்புகளைப் பேண வேண்டும். மேலும் பணக் கொடுக்கல் வாங்கல்களை சிறப்பாகப் பேண வேண்டும்.

இஸ்லாமிய ஊடகத்துறையில் செயற்படும் அனைவரும் தூய எண்ணத்தைக் கொண்டிருப்பது அவசியமாகும். அவர்களின் நோக்கங்கள், உலகியல் நோக்கங்களை விட்டும் தூய்மையாக இருக்க வேண்டும். ஆனால் சில ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், பிரபல்யமடைய வேண்டும் அல்லது தலைமைத்துவத்தை எதிர்பார்த்தல் அல்லது ஆட்சி அதிகாரம் உடையோரிடம் எதையாவது பெற்றுக் கொள்ளுதல் அல்லது அதிகார வர்க்கத்திடம் தொழிலையோ புகழையோ செல்வத்தையோ பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களின்பால் தூண்டுவதை நாம் காண முடியும்.

**முடிவுரை**

ஊடகத்துறையில் ஓர் முன்மாதிரி என்ற இத்தொடரின் மூலமாக பல்துறைகளில் இஸ்லாமிய முன்மாதிரிக்கான மைல்கற்களை தெளிவுபடுத்த முயன்றோம். இவை உண்மையில் வழிகாட்டுதல்களும் அவதானங்களுமாகும்.

நாம் சொல்லி முடித்த அல்லது சொல்லாது விட்ட துறைசார் சகோதரர்கள் தமது துறையில் இஸ்லாமிய செயற்பாடு வேண்டி நிற்கும் அனைத்தையும் உள்ளடக்கி ஆய்வு செய்வது அவசியமாகும். அவர்கள் அவ்வாய்வுகளில் தமது செயற்பாட்டை பூரணமாக நிறைவேற்ற அவசியமான இஸ்லாமியப் பண்புகளையும் உள்ளடக்க வேண்டும்.

இவ்வாறான ஆய்வுகள் சிறப்புச் தேர்ச்சி பெற்ற தமது நண்பர்களுக்கு மத்தியிலும் பரிமாறப்பட, வேண்டும். அவர்கள் வைத்தியர்களாகவோ அல்லது பொறியியலாளர்களாகவோ அல்லது சட்டவியலாளர்களாகவோ அல்லது ஊடகவியலாளர்களாகவோ வியாபாரிகளாகவோ மாணவர்களாகவோ ஆசிரியர்களாகவோ யாராக இருந்தாலும் இந்த வரையறைக்குள் அடங்குவர்.


இத்துறைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அளவுக்கே இஸ்லாமிய ஆட்சியும், கட்டியெழுப்பப்படுகின்ற இஸ்லாமிய அடிப்படைகளும் முஸ்லிம் சமூகத்திற்கு சாத்தியமாகும். தஃவா பாதையில் முன்மாதிரியாக இருப்பதானது இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் உறுதியான அடித்தளத்தை உருவாக்குவதில் சாதகமான தாக்கத்தை விளைவிக்கும்.

உதவியும் வெற்றியும் அல்லாஹ்வின் மூலமே.

முற்றும்

# தவறிழைக்கத் தூண்டும் நாஸியா

كلا لئن لم ينته لنسفعا باالناصية ناصية كاذبة خاطئة




தொடர்ச்சியாக பொய்யுரைக்கும் ஒரு பெண்ணை FMRI (Functional Magnetic Resonance Imaging) தொழில்நுட்பம் மூலம் ஸ்கேனிங் இயந்திரத்தில் இட்டு கட்டங்கட்டமாக ஆய்வு செய்து பெறப்பட்ட புகைப்படங்களே இவை. இதில் சிவப்பு நிறத்தில் காணப்படுவது நாஸியாப் பகுதியாகும். அடுத்து இரண்டாவது படத்தில் நாஸியாவே மஞ்சல் நிறத்தில் காட்டப்பட்டுள்ளது.

முதல் படம் உண்மை உரைக்கும் தறுவாயில் ஸ்கேனர் மூலம் எடுக்கப்பட்ட படம். அதனைத் தொடர்ந்து உள்ள ஏனைய படங்கள் அப்பெண் படிப்படியாகப் பொய்யுரைக்க ஆரம்பித்துள்ளமையைக் காட்டுகின்றது. ஆரம்பித்தில் மிகத் தெளிவாகக் காட்சி தரும் நாஸியா படிப்படியாக பிரகாசம் குறைந்து இறுதியில் கருமை நிறமடைந்து காணமால் போயிருப்பதைக் காணலாம். பொய்யிலே மூழ்கிப் போனவர்களது நாஸியா வும் இவ்வாறு தான் கருமை படிந்து காட்சி யளிக்கும்.

இங்கு நபி (ஸல்) அவர்கள் மொழிந்த ஒரு ஹதீஸை ஞாபகிப்பது பொருத்தமாகும்.

''அடியான் பாவமானதொரு விடயத்தைச் செய்துவிட்டால் அவனது உள்ளத்திலே கருமை நிறப் புள்ளியொன்று படிகின்றது. அவன் அப்பாவத்தை விட்டு பாவமன்னிப்புத் தேடினால் அவனது உள்ளம் தூய்மையடைகின்றது. மீண்டும் அவன் பாவத்தின்பால் மூழ்கிப் போனால் அவனது உள்ளம் முழுதும் துருப் பிடித்து கருமையடைந்துவிடுகின்றது.'' (திர்மிதி, அஹ்மத்) இதனைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் பின்வரும் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

*அல்லாஹ் கூறுகின்றான்: ''அவர்கள் தேடிக்கொண்டவை அவர்களது இதயங்களின் மீது துருவாகப் படிந்துவிட்டன.'' (83:4)*

உள்ளம் என்பது எங்குள்ளது என்பது இதுவரை அறியப்படாத நிலையில் அது தலைப் பகுதியில் இருக்கவேண்டும் என்ற கருத்து தற்போது முன்வைக்கப்படுகின்றது. அந்தவகையில் பார்த்தால் இந்த ஹதீஸ் நாஸியாவைக் குறிப்பதாகவும் இருக்கலாம். பொய் என்பது சகல பாவங்களுக்குமான நுழைவாயில் என்பதால் பொய் கூறுபவன் பல்வேறு பாவங்களையும் செய்து அவனது உள்ளம் விரைவில் கருமையடைந்து விடுகின்றது.


பொய்யுரைப்பவர்களை இனங் காண்பதற்காக விஞ்ஞானிகளால் ஒரு சிறு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ்வியந்திரத்தைத் தலையில் பொறுத்திக் கொண்டு ஒருவர் உண்மை பேசினாலோ பொய்யுரைத்தாலோ சிறு ஒலியுடன் கூடிய சிறு மின்குமிழை ஒளிரச் செய்து காட்டிக்கொடுக்கின்றது. இது நாஸியாவுடன் தொடர்புபடுத்தித் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு இயந்திரமாகும். பொய் சொல்வதில் வல்லவர்களையும் பச்சை பச்சையாகப் பொய்யுரைப்பவர்களையும் இவ்வியந்திரத்தால் இனங்காண முடியாது. காரணம் அவர்களது நாஸியா கருமை படிந்து போயிருப்பதாகக் கூட இருக்கலாம்.

நாஸியா பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுவிட்டு பேராசிரியர் கீத்மூர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''நாம் தற்போது அறிந்துகொண்டுள்ள இந்த முன்நெற்றியின் இயக்கங்கள் பற்றி வரலாற்றில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. மறுத்துவ நூல்களில்கூட காணப்படவில்லை. நபி (ஸல்) அவர்களின் காலம் முதல் அதன் பிற்பட்ட காலங்களில் கூட சிறு குறிப்புக்களோ விளக்கங்களோ கூட இருந்ததில்லை. ஆனால் அல்குர்ஆன் இதுபற்றி அன்றே குறிப்பிட்டுள்ளது. இதனால்தான் அல்குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தைகள் என்பதும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதர் என்பதும் உறுதியாகின்றது'' என்றார்.

நாஸியாவானது மனிதர்களுக்கு மாத்திரமன்றி அனைத்து உயிரினங்களிடமும் காணப்படுகின்றது என்பதை பின்வரும் அல்குர்ஆனிய வசனம் கூறுகின்றது. ''எந்தவொரு ஜீவராசியாயினும் அவற்றின் முன்நெற்றியை (நாஸியாவை) அவன் (அல்லாஹ்) பிடித்துக் கொண்டே இருக்கின்றான்.'' *(11:56)*

எல்லலமுல்ல ஆலிப் அலி

# திராட்சை



ஊட்டச்சத்து மிக்க பழங்களில் திராட்சையும் ஒன்று. இதில் விட்டமின் பி1, பி2, பி3, பி6, பி12, சி, இரும்புச்சத்து, பொசுபரஸ் சத்து ஆகியவை உள்ளன.


ரத்த சோகை, மலச்சிக்கல், ஜீரண கோளாறு, சிறுநீரகக் கோளாறு களைப் போக்கும் சக்தி திராட்சைக்கு உண்டு. உறக்கம் இல்லாமல் அவதிப்படுபவர்களுக்கும் மாமருந்தாகிறது திராட்சை பழம்.

திராட்சையை உண்பதால் உடல் வறட்சி, பித்தம் நீங்கும். ரத்தம் தூய்மை பெறும். இதயம், கல்லீரல், மூளை, நரம்புகள் வலுப்பெறும்.

ஜீரணக் கோளாறு இருப்பவர்கள் திராட்சைப் பழத்தை சாப்பிட்டு வர நல்ல தீர்வு கிடைக்கும்.

பசி இல்லாதவர்கள் அடிக்கடி திராட்சையை சாப்பிட வேண்டும். அது பசியைத் தூண்டி விடும். குடல் கோளாறுகளைக் குணப் படுத்தும். உடல் அசதிக்கும், பயணத்தின் போது ஏற்படும் உஷ்ணத் திற்கும் திராட்சைப் பழம் ஏற்றது.

# வயிற்றுப்புண்



வயிற்றுப்புண் (Ulcer) என்று சொல்லப்படும் நோய் மக்களிடையே மிகவும் பரவலாக காணப் படும் ஒன்று. மக்களின் தரம், பலவகை வேறுபாடு கள், செய்யும் தொழில், வசிக்கும் சூழ்நிலை பழக்கவழக்க வேறுபாடுகள், ஆண், பெண் பகுப்பு உணர்ச்சி நிலைகள் போன்றவற்றால் பல தரப்பின ருக்கும் சூலை நோய் (வயிற்றுப்புண்) வரும்.


**வயிற்றுப்புண்ணின் (அல்சர்) வகைகள்**

1. வாயிலிருந்து இரைப்பைக்கு செல்லுகிற வழியில் உணவுக் குழாயில் தோன்றுவது.

2. இரைப்பை கீழ்ப்பகுதி மேற்பகுதி என இரண்டாகப் பிரித்து வழங்கப்படுகிறது. இரைப்பைக்குச் செல்லும் உணவை செரிந்து, செரிந்த பகுதியையும் முன் சிறுகுடலுக்கு அனுப்பும் தொழிலில் ஈடுபட்டிருப்பது இரைப்பையின் கீழ்ப்பகுதிதான். இது கீழ்வயிறு என்று குறிக்கப்படும். கீழ்வயிற்றில் தோன்றும் புண் காஸ்டிரிக் அல்சர் எனப்படும்.


3. இரைப்பை ஏதேனும் ஒரு காரணத்தில் சேதமடைவதுண்டு. அது சேதமடைந்தால் இரைப்பையின் மேற்பகுதியில் புண் தோன்று வதுண்டு. ஆங்கிலத்தில் இது ஸ்டமக் அல்சர் எனப்படும் உணவுப் பாதையில் தோன்றும். மூன்றாவது (அல்சர்) புண் இது. கீழ் வயிற்றுப் புண் வேறு. மேல் வயிற்றுப்புண் வேறு. இரண்டும் வேறு வேறு காரணங்களால் தோன்றுகிறது.

4. சிறு குடல் மிக நீளமானது. வளைந்து வளைந்து இருப்பதனால் அது மிகச்சிறிய இடத்தில் அடங்கி இருக்கின்றது. சிறுகுடலின் முன்பகுதி வயிற்றை அடுத்து இருக்கிறது. இது வடிவில் ஆங்கில எழுத்து யூ (U) போன்றது. இந்த முன்பகுதி ஆங்கிலத்தில் டியோடனம் எனப்படும். இங்கு ஏற்படும் புண்ணைத்தான் முன் சிறுகுடல் புண் என்கிறோம்.




# புளூடூத் தொழில்நுட்பம்

வயர்கள் எதுவுமில்லாம லும், தானாகவும் இணைப் பினை ஏற்படுத்திக் கொள்வது தான் புளூடூத். இந்த தொழில் நுட்பமானது இன்று Personal Area Network எனப்படும் வீடுகளில் கணினிகள், பிரின் டர்கள் மற்றும் செல்பேசிகள் என்பவற்றை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் வலை யமைப்பில் பயன்படுகிறது. அன்றாடத் தேவைகளில் பல வகையான இணைப்புக் களை நாம் பயன்படுத்தி வருகின்றோம். இவ் விணைப்புக்களை பலவித வயர்கள், கேபிள்கள், ரேடியோ சிக்னல்கள், இன்ப்ரா ரெட் கதிர்கள் எனப் பல வகைகளில் இணைப்பு ஏற்படுத் தப்படுகிறது.



ஆனால், புளூடூத் சாதனங் களை இணைப்பதில் தனி வழி கொண்டுள்ளது. குறை ந்த மின் சக்தி பயன்பாடு, ஒரே நேரத்தில் எட்டு சாத னங்களுடன் தொடர்பு, எந்த வகையிலும் ஒன்றுக் கொன்று குறுக்கிட்டு செயல் இழக்காத நிலை, இணைந்திடும் சாதனங்கள் நேராக இருந்திடத் தேவையற்ற நிலை, 32 அடி வட்டத்தில் புளூடூத் தொழில் நுட்பம் கொண்ட எந்த சாதனத்தையும் கண்டு இணையும் வசதி எனப் பல முக்கிய காரணங்களை அடுக்கிக் கொண்டு செல்லலாம்.

இந்த Personal Area Networkஇல் (PAN or Piconet) இரண்டிற்கு இடையே ஏற்படும் இந்த நெட்வொர்க் (புளூடூத்) அதே அறையில் மற்ற இரண்டிற்கு இடையே ஏற்படும் நெட்வொர்க்கால் பாதிக்கப்படுவதில்லை. இணைப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில் இந்த இரண்டு சாதனங்களுக்கிடையே தகவல் பரிமாற்றம் ஏற்படுகிறது. இது ஒலி, போட்டோ, வீடியோ, பைல் என எதுவாகவும் இருக்கலாம்.

# குழந்தைகள் விரல் சூப்பும் பழக்கத்தை எப்படி மாற்றலாம்?



குழந்தைகள் என்றாலே விரல் சூப்புவது என்பது இயல்புதான். நாம் என்னதான் கையை எடுத்துவிட்டாலும் குழந்தைகள் மீண் டும் மீண்டும் கையை வாய்க்குதான் கொண்டு செல்வார்கள். குழந்தை விரல் சூப்புவதற்கு முக்கிய காரணம், தனக்கு முழுமை யான பாதுகாப்பு கிடைக்கவில்லை என்று உணர்வதாகும் என உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மூன்று வயது வரை இந்த பழக்கத்தை பொருட்படுத்த வேண் டியதில்லை. தாயின் கருவறையில் இருக்கும் போதே இந்தப் பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. இதனால் கவலை அடைய வேண் டிய அவசியமில்லை. குறிப்பிட்ட வயதில் இந்தப் பழக்கம் மாறி விடும். நான்கு வயது வரை இந்தப் பழக்கம் நீடித்தால் குழந்தை நல சிறப்பு மருத்துவரிடம் காட்டி சிகிச்சை பெறுவது நல்லது

பெற்றோரிடம் தேவையான அன்பு, பராமரிப்பு, பாதுகாப்பு ஆகியவை கிடைக்காதபோது விரல் சூப்பும் பழக்கம் அதிகமாக இருக்கும். ஐந்து, ஆறு வயதில் இந்த பழக்கம் இருந்தாலும் மன நெருக்கடி மற்றும் அதிக கோபம் வரும். கையில் கிடைத்ததை எல்லாம் தூக்கி வீசுவார்கள். இவர்களிடம் அதிகமாக அன்பு செலுத்தி அரவணைத்தால் மட்டுமே விரல் சூப்பும் பழக்கம் மாறும். நான்கு வயது முதல் 14 வயது வரை விரல் சூப்பும் குழந்தைகளுக்கு உடலில் பல மாற்றங்கள் நிகழும்.

**பழக்கத்தை எப்படி மாற்றுவது?**

விரல் சூப்பும் குழந்தையிடம் அந்த பழக்கத்தை மாற்றுவதற் காக பெரிய பிரச்சினைகளை செய்ய வேண்டாம். வயது வந்த குழந்தைகளை, விரல் சூப்பும் பழக்கத்தை விட்டுவிடுமாறு கட்டாயப்படுத்துவதோ அல்லது அவர்களை அடிப்பதோ, உடலில் சூடு போடுவதோ கூடவே கூடாது.

4 வயதுக்கு மேல் அவர்களிடம் பக்குவமாக எடுத்துச் சொல்லி அவர்களை திருத்தலாம் அல்லது நிறைய அன்பு செலுத்தி அவர் களாகவே அந்த பழக்கத்தை நிறுத்த முயற்சிக்கலாம். குழந்தை களுக்கு விரல்களுக்கு வேலை கொடுக்கும் விதமாக அவர்களை விளையாட வைக்கலாம்.

எதையாவது எழுதச் சொல்லலாம் அல்லது ஓவியம் வரைய வைக்கலாம். இப்படி கை விரல்களுக்கு வேலை கொடுத்தால் விரல் சூப்பும் பழக்கத்தை தன்னாலேயே கொஞ்சம் கொஞ்சமாக மறந்து விடுவார்கள் குழந்தைகள். அதேபோல், தூங்கும்போது அவர்கள் கையில் பொம்மையை கொடுத்தால், அந்த பொம் மையை பிடித்துக் கொள்வதில் கவனம் செலுத்தும்போது விரல் சூப்புவதை மறப்பார்கள்.

# பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் தூக்கமும்



பிரச்சினை இல்லாத மனிதர்களே இருக்க முடியாது. ஒவ்வொருவருக் கும் ஒவ்வொரு விதமான பிரச்சினை இருக்கும். இதற்கு தீர்வு காண்பதில் தான் ஒருவரது வெற்றி அடங்கி இருக்கிறது. அந்த வகையில் பிரச்சி னைகளுக்கு புத்திசாலித்தனமாக தீர்வு காண என்ன செய்யலாம் என்று விஞ்ஞானம் ஆலோசனை வழங்கு கிறது.

இங்கிலாந்தில் உள்ள மாசாசூ செட்ஸ் பல்கலைக்கழகத்தில் இது தொடர்பாக ஆய்வுகள் நடைபெற்றன. அப்போது ஆழ்ந்த தூக்கத்துக்கும், புத்திசாலித்தனமாக முடிவு எடுப்பதற்கும் உள்ள தொடர்பு குறித்து ஆய்வு செய்தனர். 54 இளைஞர்களை தேர்வு செய்து அவர்களில் ஒரு பிரிவை நன்றாக தூங்க வைத்து பின்னர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வைத்தனர். மற்றொரு பிரிவினரை தூங்க விடாமல் விழித்திருந்து பிரச்சினைக்கு தீர்வு சொல்லும்படி செய்தனர்.

இதில் நன்றாக தூங்கிய அணியினர் சிறப்பான முறையில் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டனர். தூக்கத்தில் ஏற்படும் உடலியல் மாற்றங்கள், மூளையின் செயல்பாடுகளில் உருவாகும் மாற்றங்கள் காரணமாக ஒருவர் நன்றாக தூங்கிய பின்னர் சிறப்பான முடிவுகளை எடுக்க முடிந்தது என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.


இனி உங்களுக்கு எந்த பிரச்சினை வந்தாலும், நன்றாக தூங்கி ஓய்வு எடுத்த பின்னர் அதுபற்றி முடிவு எடுங்கள்.

# தலைமைத்துவமும் 9C களும்

சிலருக்கு இயல்பாகவே தனித் தன்மைகள் அமைந்திருக்கும். இன்னும் சிலருக்கோ பல திறமைகள், தனித் தன்மைகள் அவர்களுக்குத் தெரியாமலேயே மறைந்திருக்கும். இப்படிப்பட்ட நிலையில், தேவையான பண்புகளை வளர்த்துக் கொள்ளும் வகையில் (Where Have All The Leaders Gone?) என்ற புத்தகத்தை, பிரபல மேலாண்மை நிபுணர்களான லீ அய கோக்கா மற்றும் தேரின் விட்னி ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் தலைமைத்துவத்திற்கு 9 (C) தேவை என்கிறார்கள். அதாவது, ஆர்வம் (Curiosity), படைப்புத்திறன்/புதுமைச் சிந்தனை (Creativity), தகவல் தொடர்பு (Communication), ஒழுக்கம் (Character), தைரியம் (Courage), உறுதி (Conviction), ஈர்ப்பு/கவர்ச்சிகரமான ஆளுமை (Charisma), திறமை / தகுதி (Competence), யதார்த்த அறிவு (Common Sense) என்று கூறியுள்ளனர்.

# ஆங்கிலம் கற்பதற்கு ஓர் இணையத்தளம்


Online Tamil-English Dictionaries


இன்று எல்லோரும் ஆங்கிலத்தை கற்பதற்க்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மாணவர்கள் இதற்காக அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனினும் ஆங்கிலம் கற்பது இலகுவானதாக அமைந்துவிடுவதில்லை. பெரும்பாலான மாணவர்கள் ஏமாற்றப்படுவதை கண்டுகொண்டிருக்கிறோம்.

இன்று ஒரு ஆசிரியரிடம் சென்று கற்பதை விட சுயமாக கற்பதற்கான பல வழிமுறைகள் காணப்படுகின்றன. புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என அவை விரிந்து செல்கின்றன.

அந்த வகையில் இணையத்தில் தமிழ் மொழி மூலமாகவே ஆங்கிலத்தை கற்றுக்கொள்வதற்கான பல தளங்கள் காணப்படுகின்றன. அத்தகைய ஒரு தளம்தான் http://aangilam.blogspot.com/ என்பதாகும். ஆங்கில இலக்கணத்தின் அனைத்து பகுதிகள், ஆங்கிலப் பேச்சு பயிற்சி, பாவனைகள் என அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய ஒரு தளமாக இது காணப்படுகின்றது. மாணவர்கள் பயன் பெறுவார்கள் என்று நம்புகின்றோம்.

Students @ நேர்பார்வை


உற்சாகம், சாதனைக் கனவு, புத்தாக்கம், அர்ப்பணம்



# எவரெஸ்டை அடைவது கஷ்டமல்ல

இரண்டு கால்களையும் இழந்த நியூசிலாந்து மலையேறும் வீரர் ஒருவர் செயற்கை கால்கள் உதவியுடன் உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறி புதிய சாதனை படைத்துள்ளார். உலகிலேயே மிக உயரமான சிகரம் எவரெஸ்ட். இமயமலையில் எவரெஸ்ட் சிகரம் , கடல் மட்டத்தில் இருந்து 8 ஆயிரத்து 850 மீட்டர் ( 29 ஆயிரத்து 35 அடி) உயரமுடையது.

நியூசிலாந்து நாட்டை சேர்ந்தவர் மார்க் இங்லீஸ். வயது 47. 1982ம் ஆண்டு நியூசிலாந்தில் உள்ள கூக் என்ற சிகரம் மீது மார்க் இங்லீசும், அவரது நண்பரும் ஏறிக் கொண்டிருந்தனர். அப்போது தட்பவெப்பநிலை மாறி மார்க் இங்லீஸ் இருந்த பகுதி பனியால் உறைந்து விட்டது. இங்லீசும், அவரது நண்பரும் 14 நாட்கள் அந்த மலையில் இருந்த ஒரு குகையில் அடைந்து இருந்தனர். பின்னர் இருவரும் மீட்கப்பட்டாலும், அந்த விபத்தில் இங்லீசின் இரண்டு கால்களும் முழங்காலுக்கு கீழே துண்டாகி விட்டன.



மலையேறும் வீரர் ஒருவருக்கு கால்கள் தான் முக்கியமானது. அதையே இழந்தாலும் இங்லீஸ் மனம் தளரவில்லை. செயற்கை கால்களை பொருத்தி மீண்டும் பயிற்சியில் ஈடுபட்டார். தனது வாழ்நாள் சாதனையாக உலகின் உயரமான சிகரமான எவரெஸ்ட் மீது ஏறி அதன் உச்சியை அடைய வேண்டும் என்று இங்லீஸ் திட்டமிட்டார். இதன்படி அந்த சாதனை முயற்சியை இங்லீஸ் மேற்கொண்டார்.

எவரெஸ்ட் மீது ஏறிக் கொண்டு இருந்தபோது 6 ஆயிரத்து 400 மீட்டர் உயரத்தில் இங்லீசுக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. அவர் அணிந்து இருந்த இரண்டு செயற்கை கால்களில் ஒன்று சேதமடைந்தது. இருப்பினும், கைவசம் தயாராக கொண்டு சென்று இருந்த மாற்று செயற்கை காலை பொருத்தி கொண்டு இங்லீஸ் தொடர்ந்து சிகரம் மீது ஏறினார். இங்லீஸ் புதிய சாதனையை புரிந்து விட்டார். இரண்டு செயற்கை கால்களின் உதவியுடன் எவரெஸ்ட் சிகரத்தை ஒருவர் அடைந்தது இதுவே முதல் முறை.

# நிறுவனங்களும் பெயர்கள் தோன்றிய விதமும்

தகவல் தொழில் நுட்பம் மற்றும் கம்பியூட்டர் துறையில் பல நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. ஒரு சில நிறுவனங்களின் பெயர்கள் நாம் அன்றாடம் சொல்லும் நிறுவனப் பெயர்களாக மாறி உள்ளன. ஆனால், எந்தக் கணமேனும் இந்த நிறுவனங்கள் எப்படி அந்தப் பெயர்களைப் பெற்றன என்று யோசித்துப் பார்த்திருப்போமா!

1.அடோப் (Adobe): இது ஒரு நதியின் பெயர். இந்த நிறுவனத்தைத் தொடங்கியவர்களில் ஒருவரான ஜான் வார்நாக் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் லாஸ் ஆல்டாஸ் என்ற பகுதியில் வசிக்கிறார். இவரின் வீட்டிற்குப் பின்புறம் இந்த அடோப் நதி ஓடுகிறது.

2. அப்பிள் (Apple): அப்பிள் நிறுவனத்தின் முதல் இலச்சினை வாசகம் என்ன தெரியுமா Bite into an Apple என்பதுதான். இதுதான் இந்நிறுவனத்தின் ஸ்லோகன் ஆக இருந்தது. ஆனால் இந்நிறுவனத்தின் மிகப் புகழ் பெற்ற ஸ்லோகன் 'Think Different' என்பதே. எனவே இரண்டையும் கலந்து, வித்தியாசமான முறையில் இருக்க வேண்டும் என்பதற்காக, அப்பிள் நிறுவனத்தை நிறுவிய ஸ்டீவ் ஜாப்ஸ் அவரின் நிறுவனத்தை அப்பிள் கம்ப்யூட்டர்ஸ் என வைத்திருக்க வேண்டும்.

ஜாப்ஸ் மற்ற நண்பர்களுடன் சேர்ந்து அப்பிள்களை உற்பத்தி செய்திடும் பண்ணையில் முதலில் வேலை பார்த்து வந்தாராம். அவர் நண்பர்களுடன் தன் புதிய கம்ப்யூட்டர் கம்பனிக்குச் சரியான பெயரை அவரின் நண்பர்கள் தரவில்லை என்றால் கம்பெனிக்கு அப்பிள் கம்ப்யூட்டர்ஸ் என்று பெயர் வைத்து விடுவேன் என்று செல்லமாகவும் வேடிக்கைக்காகவும் மிரட்டி உள்ளார். ஆனால், அவரின் நண்பர்களால் வேறு எந்த மிக நல்ல பெயரையும் கொடுக்காத நிலையில் அப்பிள் கம்பியூட்டர்ஸ் என்பதே பெயரானது. அதுவே சரித்திரத்திலும் நிலைத்துவிட்டது என்பது நாம் அறிந்த வரலாறு.

# உலகமெங்கும் உயர்ந்த மலைகள்



காஷ்மீரில் உள்ள காட்ஷன் ஆஸ்டின் மலையின் உயரம் 8611 மீட்டர்.

வடஅமெரிக்காவிலுள்ள மிக உயரமான மலை மிக்கில்லி, உயரம் 6194 மீட்டர்.

ஆப்பிரிக்கா கண்டத்தில் உயரமான மலை கிலிமன் ஜோதா, உயரம் 5963 மீட்டர்.

தென்அமெரிக்காவில் உள்ள உயரமான மலை அகன்காகுவா. ஆர்ஜென்டினா- சிலி எல்லையில் உள்ள இந்த மலையின் உயரம் 6969 மீட்டர். ஐரோப்பா கண்டத்தில் உள்ள உயர்ந்த மலை எல்புருஸ் - உயரம் 5633 மீட்டர்.

அவுஸ்திரேலியாவில் உள்ள உயரமான மலை கோசியுஸ்கோ. உயரம் 2276 மீட்டர்.

கடலுக்குள்ளும் வெளியிலும் உள்ள மலையின் பெயர் மவுனாகியே. இது ஹவாய்த் தீவில் உள்ளது. இந்த மலையின் மொத்த உயரம் சுமார் 9100 மீட்டர். கடலுக்கு அடியில் அது 4877 மீட்டர் உள்ளது. கடலுக்கு மேல் அது 4205 மீட்டர் உயரம் உள்ளது.

# பிம்ஸ்டெக் அமைப்பு

**(Bay of Bengal Initiative for Multi Sectoral and Economic Co-operation)**

1997ஆம் ஆண்டு இலங்கை, தாய்லாந்து, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து பாங்கொக் நகரில் இவ்வமைப்பை ஆரம்பித்தன. பின்னர் இவ்வமைப்பில் பூட்டான், நேபாளம் ஆகியனவும் இணைந்து கொண்டன. 1997 ஆம் ஆண்டு பாங்கொக் நகரில் முதலாவது மாநாடு நடைபெற்றது.

பிரதான நோக்கங்கள்

01. அங்கத்துவ நாடுகளின் துரித பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான சூழலை ஏற்படுத்தல்.

02. அங்கத்துவ நாடுகளின் சமூக அபிவிருத்திக்கு தேவையான செயற்பாடுகளை ஏற்படுத்தல்.

03. நல்லிணக்கத்துடன் பயிற்சி திட்டங்களை மேற்கொள்ளல்.

# மனித வாழ்வில் வஹியின் தாக்கம் -II


எம்.எச்.எம். நாளிர்

மேற்குலகில் வஹியின் தாக்கம் அதிகரித்துவருவது பற்றி அவதானித்தோம். அது தொடர்பாக மேலும் சில விளக்கங்களைத் தெரிந்து கொள்வோம்.

மேற்கத்திய உலகம் இஸ்லாம் எழுச்சி பெறுவதை மிக நீண்ட காலமாகவே தடுத்து வருகின்றது. இதற்குப் பல வரலாற்றுக் காரணங்கள் உள்ளன. ஆதலால் இஸ்லாத்தைப் பற்றிய இல்லாததும் பொல்லாததுமான பல கருத்துக்களை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து வருகின்றது. சிந்தனா ரீதியாகவும் போராட்டங்கள் மூலமாகவும் இதனைக் கச்சிதமாக நடைமுறைப்படுத்துகின்றது.

இதற்காக கீழைத்தேய ஆய்வாளர்கள் என்ற சிந்தனைப் படையணியை உருவாக்கியது. புலமைப் பரிசில்கள் வழங்கி அல்-அஸ்ஹர் உட்பட பல பல்கலைக்கழகங்களுக்கு அவர்களை அனுப்பி வைத்தது. அவர்கள் அல்குர்ஆன், ஸுன்னா, ஸீறா, இஸ்லாமிய வரலாறு போன்றவற்றை ஆய்வுக்குட்படுத்தினர். அவற்றின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் நூல்களை எழுதினர். அவைதாம் மேற்குலகப் புத்தகக் கடைகளில் விற்பனைக்கு விடப்பட்டன; நூலகங்களிலே வாசிப்பதற்காக வைக்கப்பட்டிருந்தன. இதனால் மேற்குலகம் இஸ்லாத்தைத் தவறாகவே புரிந்து கொண்டது.

''மேற்குலகில் வாழும் மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி தப்பும் தவறுமான கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டு வந்துள்ளன. நூற்றுக்கணக்கான ஆண்டுகள் திட்டமிட்டு இந்தத் துஷ்பிரயோகம் நடந்து வந்திருக்கிறது. மேலை நாட்டு மக்களிடம் முஹம்மதிய மார்க்கம் என்றுதான் இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது.



யாரோ ஒரு தனிநபர், அவராகவே ஏற்படுத்திக் கொண்ட மார்க்கம் என்றே மக்கள் நம்பும்படியாக பிரச்சாரம் செய்யப்பட்டு வந்துள்ளது'' என்று மொரிஸ் புகைல் என்ற பிரெஞ்சு மருத்துவர் இதனைச் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆனால் பிற்காலத்தில் முஹம்மத் பிக்கோல், கலாநிதி எம். ஹமீதுல்லாஹ் போன்ற பலர் இஸ்லாம் பற்றிய தெளிவான விளக்கங்களையும், அல்குர்ஆன் மொழிபெயர்ப்புகளையும், ஸீறாவையும் அவர்கள் முன்வைத்தனர். அப்பொழுதுதான் நடுநிலையில் நின்று சிந்தித்தவர்கள் கீழைத்தேய ஆய்வாளர்களின் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களையும் மேற்கின் பொய் பிரச்சாரத்தையும் இனங்கண்டனர். இருண்ட உலகிற்குக் கிடைத்த ஒளியாகக் கண்டனர். எனவே, தூய இஸ்லாத்தை விளங்க வேண்டும் என ஆசைப்பட்டனர்.

மேற்கத்திய வாசகர்கள் தர்க்க ரீதியானதும் ஆய்வு ரீதியானதுமான நூல்களை விரும்பிப் படிப்பார்கள். வாசிப்பு அவர்களின் பழக்கமாக இருக்கும். அல்குர்ஆனையும் ஸீறாவையும் படித்த போது அவர்களுக்கு உண்மை புலப்பட்டது.

''நான் அல்குர்ஆனை திறந்த மனதுடன் வாசிக்கத் தொடங்கினேன். நவீன விஞ்ஞானமும் அல்குர்ஆனும் எவ்வளவு தூரம் பொருந்திச் செல்கின்றன என்பதைக் கண்டறிவதே எனது வாசிப்பின் நோக்கமாக இருந்தது. ஆனால், மொழிபெயர்ப்பு மூலம் படித்தபோது ஏற்பட்ட சந்தேகங்கள் அதன் மூல மொழியான அறபியில் படித்தபோது அப்படியே மறைந்துவிட்டன.''

''இஸ்லாத்தின் வேதநூலான அல்குர்ஆன் இன்றைய விஞ்ஞான உண்மைகளை உறுதிப்படுத்துவதாக உள்ளது. அவை, இக்கால ஆய்வு முடிவுகளுக்கு முரண்பட்டதாக இருக்கவில்லை. காலத்தால் அழியாத சில அடிப்படை உண்மைகளையே நான் விஞ்ஞான உண்மைகளெனக் கூறுகிறேன். அவை எல்லோராலும் எப்போதும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை'' என்று டொக்டர் மொரிஸ் புகைல் இதனை வெளிப்படுத்துகிறார்.

சடவாத சிந்தனையில் மூழ்கியிருந்தவர்கள் - அதன் மூலம் விரக்தி அடைந்தவர்கள் - போலி ஞானிகளால் ஏமாற்றப்பட்டவர்கள் - இஸ்லாத்தின் யதார்த்தத்தை விளங்க முற்பட்டபோது தமது ஆன்மீக வறுமையைப் போக்கும் சக்தி இஸ்லாத்திற்கு உண்டு என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

அவர்கள் படித்த மேற்குலக வரலாறு, தமது வேதக் கருத்திற்கு மாறான கருத்துக்களை முன்வைத்தவர்களைத் தண்டித்தும் விஞ்ஞானிகளை சித்திரவதை செய்தும், கொலை செய்தும் வந்திருப்பதை அவர்கள் படித்திருந்தார்கள். ஆனால் அல்குர்ஆனைப் படித்தபோது அது விஞ்ஞானத்துடன் ஒட்டிச் செல்வதை உணர்ந்து கொண்டார்கள். இஸ்லாத்தின் பால் இணைந்து கொண்டார்கள்.

கற்க வேண்டும் என்ற அவர்களின் ஆர்வமும், ஆய்வு செய்யும் அவர்களின் திறனும் மதங்களை ஒப்பீடு செய்யும் முயற்சியில் அவர்களை ஈடுபடுத்தின. அவை இஸ்லாத்தின் உண்மையை அவர்களுக்கு எடுத்துக் காட்டின. சகோதரி மர்யம் ஜெமீலா அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற வரலாறு இதனைத் தெளிவாகச் சொல்லிக் காட்டுகின்றது. இத்தகையவர்களால் எழுதப்பட்ட நூல்கள் மேற்கில் வாழ்ந்த - இஸ்லாத்தை பிழையாக விளங்கிக் கொண்ட மக்களை நேர்வழிப்படச் செய்தன. அவர்களின் தேடல் மனமாற்றத்தை ஏற்படுத்தின.

டொரன்டோ பல்கலைக்கழக கருவியல் துறை பேராசிரியரான டொக்டர் கீத் மூர் அல்குர்ஆனின் கருவியல் தொடர்பான கருத்துக்களை ஆய்வு செய்தார். இறுதியில் அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள தகவல்கள் யாவும் அல்லாஹ்விடம் இருந்துதான் வந்திருக்க முடியும் என்று தனக்குத் தெளிவாகத் தெரிவதாகவும், கருவியல் பற்றிய அறிவுபூர்வமான தகவல்களில் பெரும்பாலானவை பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட, அவற்றை பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே அல்குர்ஆன் முன்வைத்துள்ளது என்றும், இந்த ஆராய்ச்சியே முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதைத் தனக்கு நிரூபித்துவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

இதன் கருத்து, வஹி விஞ்ஞான அறிவுள்ளவர்களுக்குத் தான் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதல்ல. மாறாக இஸ்லாத்தின் தூது (வஹி) எந்த சமூகத்தின் முன் எத்தி வைக்கப்படுகின்றதோ அந்த சமூகத்தின் மொழியில் - பாணியில் முன்வைக்கப்பட வேண்டும் என்ற அல்குர்ஆனின் கருத்து (14:4) மேற்கில் பின்பற்றப்பட்டதால் அங்கு வஹி அறிவு போற்றப்பட்டும் ஏற்கப்பட்டும் வருவதைக் காண்கிறோம்.

---


முர்ஷித் தாஹா

# அறிஞர் இப்னு கல்தூனின் பொருளாதார சிந்தனைகள்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மட்டுமன்றி வல்லரசாகக் கருதப்படுகின்ற அமெரிக்கா உள்ளிட்ட அபிவிருத்தியடைந்த நாடுகள் (Developed Countries) கூட தமது பொருளாதாரத்தைத் தக்க வைத்துக்கொள்வதில் திண்டாடும் நிலை பரவலாகக் காணப்படுகின்றது.

முறையற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள், அதிகரித்த வருமான ஏற்றத்தாழ்வு, வறுமை நிலை, வேலையில்லாப் பிரச்சினை, அரச தரப்பிலான ஊழல் மலிந்த நிலை, அரசின் ஆடம்பரச் செலவீனங்கள் என்பன ஒரு பொருளாதாரத்தின் பின்னடைவுக்கான பிரதான காரணிகளாகும். இந்நிலைகளிலிருந்து விடுபட்டு பொருளாதாரத்தை நிலைத்து நிற்கும் அபிவிருத்தி நோக்கி வழிநடாத்த 14ஆம் நூற்றாண்டின் இஸ்லாமிய அறிஞர் இப்னு கல்தூனின் பொருளாதாரம் குறித்த சிந்தனைகள் மிகப் பொருத்தமானதாகவும் சமகால சூழலுக்கு அவசியமானதாகவும் காணப்படுகின்றன.

**பொருளாதாரத்தை நிலைத்து நிற்கும் அபிவிருத்தி நோக்கி வழிநடாத்த 14ஆம் நூற்றாண்டின் இஸ்லாமிய அறிஞர் இப்னு கல்தூனின் பொருளாதாரம் குறித்த சிந்தனைகள் மிகப் பொருத்த மானதாகவும் சமகால சூழலுக்கு அவசியமானதாகவும் காணப்படுகின்றன.**




ஒரு பொருளாதாரத்தின் அரச செலவீனங்களில் இராணுவச் செலவீனங்கள் (Expenditure for Mercenary army) மிகக் குறைவாகவே இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்துகின்றார். பொருளாதார மிகையை (Economic Surplus) அடைய விரும்புகின்ற ஒரு நாடு அல்லது ஒரு பொருளாதாரம், வளங்களில் பெரும்பகுதியை கல்வி முன்னேற்றத்திற்கும் (Educational Development) மனிதவளங்களை மேம்படுத்துவதற்காவுமே (Human resourse Development) ஒதுக்கீடு செய்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

இன்று நாடுகள் தமது ஆயுத பலத்தையும் இராணுவ பலத்தையும் அதிகரித்துக் கொள்வதிலேயே அதிக ஆர்வம் காட்டுவது மட்டுமன்றி அரச செலவீனத்தில் பெரும்பகுதியை அதற்காக ஒதுக்கீடு செய்துவருகின்றன. மொத்த சனத்தொகையில் கணிசமான தொகையினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற அதேவேளை வளர்ந்து வருகின்ற நாடுகளும் அதிகரித்த ஆயுத, இராணுவச் செலவீனங் களை மேற்கொண்டு வருவது ஆச்சரியமானது. பாரிய ளவிலான இராணுவம் ஒரு நாட்டில் காணப்படுவது, நாட்டின் வர்த்தக ரீதியான விரிவாக்கம், உற்பத்தி மற்றும் பொருளாதார மிகை என்பவற்றுக்கு இடையூறாகவே அமையும் என அவர் கருதுகின்றார்.

அறிஞர் இப்னு கல்தூனின் பொருளியல் தொடர்பான இத்தகைய முற்போக்கான கருத்துகள், பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் பொருட்டு இன்று அபிவிருத்தியடைந்த பல நாடுகளால் பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அவரின் மற்றுமொரு சிந்தனை, வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளில் அரசின் பங்குபற்றலும் தலையீடும் முற்றாக நீங்கியிருப்பதாகும். அரசினால் வர்த்தக நடவடிக்கைகளை மிகச்சரியாக புரிந்துகொள்ளவும் முடியாது. மட்டுமன்றி வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் காணப்படுகின்ற உற்சாகத்தையும் ஆர்வத்தையும் அரச தரப்பில் காணவும் முடியாது என்பதாகும்.

வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி முயற்சிகளில் அரசின் தலையீடு காணப்படுமாயின் பொருளாதார மிகை நிலை மட்டுமன்றி நாடே பின்னடையும் என எதிர்வு கூறினார்.

அறிஞர் இப்னு கல்தூனின் பொருளியல் சிந்தனைகள் தற்போது படிப்படியாக வளர்ந்து வரும் நாடுகளாலும் உள்வாங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய நாடுகள் தனியார் மயமாக்கலை ஆரம்பித்திருக்கின்றன.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் தமது இராணுவ மைய முதலீடுகளையும் செலவீனங்களையும் குறைத்து வருவதுடன் கல்வி மற்றும் தொழிநுட்பத் துறைகளில் தமது முதலீடுகளையும் செலவுகளையும் அதிகரித்து வருகின்றன. இதன் மூலம் தனியார் தொழில் முயற்சிகள் அதிகரிப்பதனால் பொருளாதார நடவடிக்கைகள் மேலும் விரிவடைகின்றன. அத்துடன் சர்வதேச சந்தையில் அதிக வாய்ப்புகள் அடையப்படுகின்றன.

மேலும் கைத்தொழில் நாடுகள் வர்த்தக நடவடிக்கைகளையும் உற்பத்தி முயற்சிகளையும் மேலும் அதிகரிப்பதற்காக சலுகை அடிப்படையிலான வரிக் கொள்கைகளை (Concessionary Taxation Policies) பின்பற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. முறையற்ற வரிவிதிப்பு முறைகள் அல்லது அதிகரித்த வரிவிதிப்பு நீண்ட கால பொருளாதார கட்டமைப்பில் பொருளாதாரத்தை முடக்கி விடும். அதிகரித்த வரிச்சுமை வர்த்தகர்களையும் உற்பத்தியாளர்களையும் சோர்வடையச் செய்வதுடன் உற்பத்திச் செலவு அதிகரிப்பதனால் வாடிக்கையாளர்களை தூரமாக்கும். இதனால் வர்த்தகம் அல்லது உற்பத்தி பாதிப்படையும்.

# இதயத்தை ஆட்கொண்ட எங்கள் இறஸூல் நபியே

உலகத்தை உய்வித்த உயர்நபியை உத்தமரை
உதயத்து ஆதவனை ஓயாமல் எண்ணுகின்றேன்
சுவனத்துப் பதிக்குவழி சொன்னவரைப் பூவுலகின்
கவனத்தை ஈர்த்தவரை கணந்தோறும் எண்ணுகின்றேன்.

மக்கத்துப் பாலையிலே மலர்ந்த பூமான் நபியை
திக்கெட்டும் ஒளிதந்த தீபத்தை எண்ணுகின்றேன்
திக்கற்று வாழ்ந்தவர்க்குத் திசைகாட்டி விட்டவரை
மக்கட்குள் மாணிக்கம் எனமதித்து எண்ணுகின்றேன்

அல்லலே தீர்க்கின்ற அல்லாஹ்வின் தூதுவரை
வள்ளலை வரலாற்று நாயகரை எண்ணுகின்றேன்
தொல்லுல குட்பூத்த தோன்றலரின் திருப்பெயரைச்
சொல்லலே இன்பமெனச் சொல்லுதற்கு எண்ணுகின்றேன்.

பூமிக்குப் பெருங்கொடையாய்ப் புவனளித்த பெரும்பொருளை
நானெனக்குச் சொந்தமென நாடோறும் எண்ணுகின்றேன்
வீணர்க்கு வழியுரைக்க மேதினியிற் பிறந்த நபி
நாதர்க்கு உரியவாழ்வை நாடற்கு எண்ணுகின்றேன்.

நாடோறும் மெய்ஞானப் பாலூட்டி வைத்தவரை
நயனங்கள் கண்டதுபோல் நான்மகிழ்ந்து எண்ணுகின்றேன்
பூகோளப் பூந்தோப்பிற் புட்பித்த நபிமலரை
மாமருந்து போல்நினைந்து நானருந்த எண்ணுகின்றேன்.

மாநபியைப் பெரும்புரட்சி மன்னவரை; பாழடைந்து
போம்புவியைச் சிறப்பித்த பொன்மனத்தை எண்ணுகின்றேன்
யா நபியை வரலாற்று யாத்திரையை மேற்கொண்ட
பூநபியை அவர்புகன்ற பொன்மொழியை எண்ணுகின்றேன்.

மண்கெட்டு மதிகெட்ட மக்களினால் நீங்களன்று
புண்பட்ட வேளையின் பொறுமைதனை எண்ணுகின்றேன்
பண்பட்ட போக்காலும் பலர்நயக்குஞ் செயலாலும்
விண்முட்ட புகழ்கண்ட விந்தையை யான் எண்ணுகின்றேன்.

மேதைகளை ஈன்றெடுத்த மேதினியில் உங்களைப்போல்
மேதையினை நான் காணாமல்; வியந்து எண்ணுகின்றேன்
வாதையினை வாழ்வாக்கி வாழ்ந்திட்ட மன்பதைக்கு
நீதியினைத் தந்துசென்ற நெஞ்சுதனை எண்ணுகின்றேன்.

அக்கிரமக் காரர்கள் அண்ணலே! உங்களுக்கு
உக்கிரமாய்ப் புரிந்திட்ட ஊறுகளை எண்ணுகின்றேன்
விக்கிரக விரும்பிகளை வியனுலகு போற்றுகின்ற
மக்களாக ஆக்கிவைத்த மாண்புதனை எண்ணுகின்றேன்.

கண்மூடித் துயிலுகின்ற கருணை நபி 'றவ்ழாஷரீப்'
முன்னாடி வந்துங்கள் முகங்காண எண்ணுகின்றேன்
மண்மூடிக் கண்துயிலும் மாநபியே! ஒளிகாட்டும்
கண்ணாடித் திருவதனங் காண்பதெங்ஙன் கவலுகின்றேன்.

கலாபூஷணம்
கிண்ணியா ஏ.எம்.எம். அலி

முஹம்மத் மஜீஸ்
மீராவோடை - 04

## எனது கேள்விகள்

கூடு தகர்த்து சுதந்திரமிக்க
பறவைகளின் இருப்பு நீக்கிய
உனது வக்கிரம் உனதான
பொழுதுகளில் நிகழ்ந்தாயிற்று.
அது உனது
தேசிய கீதத்தை கொச்சைப்படுத்திய
அதன் அழுகையும்
உனது நிஜங்களோடு முரண்பட்ட
அதன கனவுகளுமே காரணமென்று
அவைகளில் கழுத்துக்களை
நெரித்ததாய்
அடிகுறிப்பெழுதிய உனது
சாமர்த்தியத்தை
போற்றுகிறேன்.
எனது நண்பா
நான் உன்னிடம்
கேட்க வேண்டியிருக்கிறது,
அவைகள் எப்போதாவது
உனது தலையில்
மலங் கழித்தனவா?




## வெறுத்துப் போதல்

வலி மிகைத்து ஆக்ரோஷமாய்
மெல்லிய படர்தலின் இடர்பாட்டில்
தோற்றன கனவுகள்.
மெய்கள் கடந்து
பொய்கள் அதன் ஆழங்களையும்
அகலங்களையும்
உணர்வுகள் படுங்கி
ஜடம் மறைத்து உயிர்த்தது!
சயனம் கற்பித்த இருள்கள்
சூனியத்தை ஜெயித்தன!
சுயம் வன்மைகளை கௌரவிக்க
பழகிக்கொண்டது.
குரல் நெரித்து ஜனநாயகம்
தற்கொலை செய்தது.
தலைகள் வெறுத்து
கிரிடங்கள் கால்களிலே.
பாவம் - நான் தனியாமையாக
நின்கிறேன்
'வாக்கு' நிராகரித்தவர் பட்டியலில்.

## பெருமானார் (ஸல்) அவர்களின் சில விட்டுக் கொடுப்புகளும் விளைவுகளும்

### மாற்றாருக்கு மதிப்பளித்துப் பெற்ற இஸ்லாம்

அறுபது பாதிரிகள் கொண்ட குழு ஒன்று
அருமை நபி வாய்மொழியால் விளக்கமுற எண்ணி
மதீனாவின் பள்ளியிலே கூடியிருந்தார்கள்.
வணக்கத்தின் நேரத்தில் வெளியேறிச் சென்று
துதித்து வர ஆரம்பம் செய்திட்டபோது
'துதிப்பதற்கே பள்ளிகளும் இருக்கின்றதென்று
துதியுங்கள் இங்கேயே' என்று உரைத்தார்கள்
தூயவனின் தூதான தூயநபியவர்கள்.

இறுதி நபி இஸ்லாத்தை எடுத்துரைத்தார்கள்.
இருந்தாலும் மனமாற்றமும் ஏற்படவுமில்லை.
சிறுதுளியும் இதற்காக மனம் வருந்திடாமல்
சீரான பாதுகாப்பு ஒப்பந்தம் செய்தார்.
மறுதடவை பாதிரிகள் கிறிஸ்தவர்களெல்லாம்
மதீனாவில் குவிந்தார்கள். நஜ்ரானிலிருந்து
நெறுநீதி றஸூலுல்லாஹ் கைப்படித்து
நிரந்தரமாய் இஸ்லாத்தில் உட்புகுந்தார்கள்.

### பெருமானாருக்கு தாயிபில் கிடைத்ததும் அதனால் தாயிபுக்குக் கிடைக்க இருந்ததும்

தாயிபின் சிறுவர்கள், காலி, கூலிகள் செய்த
சதிமோசத்தால் குருதி வழியை நனைக்க
போய் விடுவோம் தப்பியென மூன்று கல் தூரம்
புத்தி தடுமாறியே ஓட்டம் பிடித்து
சாய்ந்து விழுந்தார். நபி மூர்ச்சையாகி அங்கே
ஸைத் தோழர் தூக்கியோர் தோட்ட நிழல் சேர்த்தார்.
சாய்ந்த தலை நிமிர்த்தியே மூர்ச்சை தெளிந்து
தனது இரு கைகளையும் மேலே உயர்த்தி

'எல்லோர்க்கும் வல்லவனே! எடுத்து வந்தேன் தூதை
இங்குள்ள மக்கள் செவி சாய்க்கவில்லை. இதற்கு
வல்லவனே! எனது பலவீனம் குறைபாடே
வாகான காரணமாய் சொல்கின்றேன் எனது
அல்லாஹ்வே! என் நெஞ்சில் உரத்தையும் குரலில்
அசைக்காத உறுதியையும் தந்தருளுவாயே'
சொல்லி முறையிடுகையிலே ஜிப்ரீல், மீக்காஈல்
சூழ்ந்து நபி அனுமதியைக் காத்து நின்றார்கள்.

தாயிபினைப் பாழ் வெளியாய் ஆக்குவதை நோக்காய்
வானவர்கள் கொண்டிங்கு வந்துள்ளதாக
தூய நபி எண்ணி 'இவ்வாறாகக் கூடாது
துயர் போக்கும் அருட்கொடையாய் வந்துள்ள நானோ
துயர், இடுக்கண் நேருவதை விரும்பவே மாட்டேன்
தூதினை இன்றிவர்கள் ஏற்காவிட்டாலும்
தொடர்ந்துவரும் சந்ததிகள் ஏற்பார்களென்று'
நேர வந்த துன்பத்தை நீக்கினார் எம் நாதர்.

ஒரு நாளில் அண்ணல் பெருமானாரை நோக்கி
'உஹதை விடப் பயங்கரமாம் செய்தியொன்றைத் தனக்கு
தெரிவிக்கக் கேட்டார்கள்.' ஆயிஷா அன்னை
திடுக்கிட்ட உணர்வோடு 'தாயிபுக்கு அன்று
நேருதற்கு இருந்த பெரும் பயங்கரத்தைப் போல
நிச்சயமாய் எதனையும் நான் கருதவில்லை' என்றார்.
யாருமிதைக் கேட்கின்றபோது எங்கள் நபிகள்
நாதரவர் அருட்குணத்தை உணர்ந்து கொள்ளுவாரோ.

கலாபூஷணம் ஏ.ஸீ. இஸ்மாலெவ்வை,
சம்மாந்துறை.


## உறவுகளை இழந்துவிட்டு...

தொலை தூரத்தில் தொலைந்துவிட்ட
உறவுகளின் நினைவுகள்
நித்தமும் விழிகளைக்
காயப்படுத்திக் கொண்டேயிருக்கிறது.

புண்பட்டுக் கதறும் உள்ளத்தின் வேதனைகள்
இரவுகளில் விடியுமட்டும்
விழிநீர் பொழிகிறது.

சொந்தங்கள் சுகங்களை
இழந்து தவிக்கும் நெஞ்சத்தின் வலிகள்
நீண்ட நெடிய பிரிவை
நினைந்து நினைந்து தேம்புகிறது.

கண்துடைக்கச் சென்ற புறங்கைகள்
விழிநீர் வெள்ளத்தில் அமிழ்ந்து போகிறது.



என்றாலும் மீட்டுவதற்கு
நினைவுகளாவது எஞ்சியிருக்கிறதே,
நம்பிக்கையுடன் தொடர்கிறது பயணம்

ஈ.எல்.எம். இர்ஷாத், மீராவோடை.

## உனக்குச் சொர்க்கம்

மானிடா!
ஓடி ஓடி உழைக்கும்
உன் கரங்களுக்குள்
உலகமே
அடைக்கலம் புகுந்ததாய்
நினைத்து
சீனப் பெருஞ் சுவரைப் போல்
உன் கற்பனைகள்
நீண்டு செல்கின்றன..!

தாஜ்மஹாலும்
வெள்ளை மாளிகையும்
சாய்ந்த கோபுரமும்
உன்னிடம்
யாசகம் கேட்க வேண்டும்.
அதனிலும் -நீயே
தரமுயர்ந்தவனாக
தரணியில்
மதிக்கப்பட வேண்டும்
என்பதே -உன்
இமாலய ஆசைகள்!


ஸஹாராப் பாலைவனமாய்
வரண்டு கிடந்த -உன்
வக்கிர மனதுக்கு
சுனாமியின் சங்கமம்
வரப்பிரசாதமாகிவிட்டது!
வீதிகளுக்கும்
வீடுகளுக்கும்
பென்டேச் போட்டே
வருமானத்தை
அதி(ப)கரித்துக் கொள்கிறாய்!

பாசத்தை
அடகு வைத்தாவது
பாரினில்
பப்ளிசிட்டியாவதற்காய்
பாடுபடுகிறாய்!

என்னதான் -நீ
தனவந்தனாய்
கிண்ணஸ் புத்தகத்தில்
இடம் பிடித்தாலும்
ஆறடி நிலமே
உனக்குயது!

கிண்ணியா,
ஜெனீரா ஹைறுல் அமான்

## எழுத்தாளர்களும்... (13ம் பக்கத் தொடர்)




இங்கு செய்திகளை கள எழுத்துருவில் மாத்திரமல்ல பத்திரிகைகளை முழுமையாக (ஈ-பேப்பர்) மின் பத்திரிகை மூலமாகவும் வாசிக்கக் கூடிய தாக இருக்கும். அச்சு ஊடகங் களை விட இணைய ஊடகங் கள் ஒலி, ஒளி அமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பதினா லும் அவை வேகமாக மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்து வருகின்றன.

இணையங்களில் செய்திகள் மாத்திரமல்ல, இலக்கியக் கட்டுரை கள், ஆய்வுக் கட்டுரைகள், அரசியல் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள் போன்ற இலக்கியப் படைப்புகளையும் பிரசுரித்து வருகின்றன. இதற்கென தனி வலையமைப்புக்களும் உள்ளன. திரட்டிகளின் உதவி கொண்டு தேடல்கள் மூலம் எமக்குத் தேவையானவற்றை அடைந்துகொள்ள முடியும்.

மேலும், குறித்த ஆக்கங்களை எத்தனை ஆண்டுகள் சென்றாலும் கூட, வாசித்தறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். நவீன தொழில் நுட்ப மாற்றத்துடன் இணையங்களும் பல புதிய பரிமாணங்களை பெற்று வருகின்றன. இணையத்தளத்தின் மூலம் மின்னணுக் கல்வி (E-learning) மின்னணுக் கருத்தரங்கம் (E-conference) ஆகியவை கூட இன்று நடைமுறையில் உள்ளன.

பல்லூடகக் கருவியாகவும் (Multi media) கணனி இன்று பரிணமித் துள்ளது. எனவே எழுத்து, பேச்சு, படம் என்று பலவகைப்பட்ட ஊட கங்கள் வழியே ஒருவர் உலகெங்கும் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு பிரமாண்டமான வளர்ச்சி இன்று ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா டெலிகொம்மினது பதிவுகளுக்கமைய உலக வங்கியால் வெளியிடப்பட்ட அறிக்கையில் 2010 முதல் ஒன்பது மாதங்களில் இலங்கையில் இணையத்தள பாவனையாளர்கள் 1,776,200 என அறிய முடிகின்றது. இது மொத்த சனத்தொகையின் 8.3% ஆகும். 2000ஆம் ஆண்டு முதல் இலங்கையின் இணையத்தளப் பாவனை குறித்த அறிக்கை அட்டவணை: 01ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையின் பிரகாரம் 2007ம் ஆண்டின் பிறகு இணை யத்தள பாவனை வேகமாக அதிகரித்துள்ளமைக்கான பிரதான கார ணியாக புரோட் பேண்ட் இணையத்தள இணைப்பு அறிமுகமானதை குறிப்பிடலாம். 2015 ஆம் ஆண்டு ஆகும்போது இணையத்தளப் பாவனை 30%மாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**உலகளாவிய ரீதியில் இன்று இணையத்தளப் பாவனையாளர்கள்** தொகை கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. குறிப்பாக புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் உடனுக்குடன் செய்திகளை அறிந்து கொள்ள இணையங்களின் துணையினையே நாடியுள்ளனர். ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில் இணையப் பாவனை செய்திப் பரிவர்த்தனை இலக்கிய பரிமாற்றம் என்பவற்றை விட கல்வித் துறை அபிவிருத்திற்கும் விசாலமான பங்களிப்பினை வழங்கி வருகின்றது. உலகளாவிய இணையத்தள பாவனை பற்றிய கணிப்பீட்டுப் புள்ளி விபரம் அட்டவணை: 02ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் டிசம்பர் 1990 கணக்குப்படி ஒரே ஒரு இணையதளம் தான் இருந்தது. அதன் முகவரி info.cern.ch அதன் சொந்தக்காரர் wwwவை அதாவது htmlஐ கண்டு பிடித்த Tim Berners-Lee ஆவார். 2010 செப்டம்பர் மாத கணக்குப்படி இணைய உருண்டையின் மொத்தப் பாவனை யாளர்களின் எண்ணிக்கை 1966,514,816 ஆகும். இணையதளங்கள் உருவாக பல காரணங்கள் கூறப்பட்டாலும் கூட ஒரு முக்கிய காரண மாய் அமைவது கூகிளின் அட்சென்ஸ் (Google Adsense) என்றால் மிகையாகாது. ஆனாலும் அன்றைக்கு Tim Berners-Lee ; முதன்முதலாய் நெய்த அந்த வலைப்பக்கத்தை இன்றைக்கும் பத்திரமாய் வைத்தி ருக்கின்றார்கள். அதன் முகவரி வருமாறு: http://www.w3.org/history/19921103-hypertext/hypertext/ www/theproject.html

உலக அளவில் 28.7 வீதமாக இணையத்தளப் பாவனை அதிகரித் துள்ள அதே நேரத்தில் இலங்கையில் 8.3 வீதமாகவே இணையப் பாவனையே காணப்படுகிறது. இந்நிலையில் தமிழ் மொழி மூலம் இணையப் பாவனையாளர்களின் எண்ணிக்கை இதனை விட வெகுவாகக் குறைந்திருக்கலாம். செப்டம்பர் 2010இல் இலங்கையின் வட பகுதிக்கு ஸ்ரீலங்கா டெலிகொம்மினால் புரோட் பேண்ட் இணைய இணைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இப்பகுதிகளிலும் இணையப்பாவனை அதிகரிக்கப்படலாம் எனக் கருத இடமுண்டு.

# வீழ்ச்சியடையும் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதமும் கரு வளமும்



உலக மக்கள் தொகை தினம் என்பது ஆண்டுதோறும் ஜூலை 11ம் திகதி உலகளாவிய ரீதியில் மக்கள் தொகை குறித்த விழிப்பு ணர்வை மக்களுக்கு எடுத்துச் செல்லும் ஒரு முயற்சியாக ஐக் கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தி னால் கொண்டாடப்பட்டு வருகி றது. பொருளாதார நெருக்கடிக்கு ஈடுகொடுத்தல்; பெண்களுக்காக நிதியீடு செய்வது ஏன் மிகச் சிற ந்த தெரிவு என்பது இவ் வாண் டின் தொனிப் பொருளென ஐ.நா. சனத்தொகை நிதியம் (UNFPA) பிர கடனப்படுத்தியுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜூலை 05ம் திகதியின் மதிப்பீட்டின் பிரகாரம் இப்பட்டியலில் இலங்கை 56வது இடத்தில் உள்ளது.

இலங்கை சமூகக் குறிகாட்டி கள் பலவற்றில் மாறுபட்ட போக் கைக்கொண்ட நாடாக விளங்கு கின்றது. இங்கு வருடாந்த இயற்கை அதிகரிப்பு வீதம் 1.1 ஆகவும், பிறப்புவீதம் 1000 பேரு க்கு 17.9 வீதமாகவும், இறப்பு வீதம் 1000 பேருக்கு 6.6 வீதமாக வும் காணப்படுகின்றது.

இலங்கையின் 2001ம் ஆண்டு குடித்தொகை கடிகாரத்தின் பிர காரம் 18,797,257 தொகையாகவும், 2007ம் ஆண்டில் 20,010,000 தொகை யாகவும் இருந்த குடித்தொகை தற்பொழுது 2009ம் ஆண்டு மதிப் பின் படி 21,128,772 தொகையாக உயர்வடைந்துள்ளது. இங்கு ஆண் களின் சராசரி ஆயுட்காலம் 71 வயதாகவும், பெண்களின் சராசரி ஆயுட்காலம் 78 வயதாகவும் காணப்படுகின்றது.

இலங்கையின் சராசரிக் குடித்தொகை வீதத்தினை நோக்கும்போது, 1995 முதல் 2000 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 1.37 வீதமாக இருந்த வளர்ச்சி வீதம் அண்மைய தரவுகளின் படி 1.1 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இது 2050 ஆண்டில் 0.45 வீதமாக மேலும் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் கருவள வீதமானது 1965ம் ஆண்டில் 5.19 வீதமாக வும், 1975 ஆண்டில் 3.6 வீதமாகவும், 1995 முதல் 2000ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் 1.96 வீதமாகவும் காணப்படுகின்றது. இவ்வாறு குறைவடையும் போக்கானது, பெண்கள் கல்வியில் ஈடு பாடு, திருமண வயதில் ஏற்பட்ட மாற்றம், குடும்பக் கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, பெண்களின் தொழில் அந்தஸ்து அதிகரிப்பு போன்ற காரணங்களாக அமைந்ததெனலாம்.

பீ.எம். புன்னியாமீன் -

(உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு தேசம்நெற்றில் எழுதிய கட்டுரையிலிருந்து...)

## நவீன தேவைகளுக்கேற்ற... (5ம் பக்கத் தொடர்)



மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோன், பிரதிய மைச்சர் விநாயகமூர்த்தி முரளித ரன் மற்றும் முன்னாள் மீள்குடி யேற்ற அமைச்சர் ரிஷாட் பதியுத் தீன் போன்றவர்கள் இந்த விடயத் தில் கூடிய கரிசனையோடு செயற் படுகிறார்கள். இந்தக் குழு ஒவ் வொரு மாவட்டமாகச் சென்று தகவல்களைப் பெற்று வருகின் றது. இந்தப் பணி மன்னாரிலே பூரணமடைந்துள்ளது. வவுனியா, முல்லைத்தீவில் தற்போது ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

அடுத்து கிளிநொச்சி, யாழ்ப் பாணம் பகுதிகளில் ஆரம்பிக்கப் பட இருக்கின்றது. இடப்பெயர்வு, மீள்குடியேற்றம், வாழ்வாதாரப் பிரச்சினைகள், வதிவிட காணிப் பிரச்சினைகள், ஏனைய பிரச்சி னைகள் என ஐந்து முக்கிய விட யங்களில் தகவல்களைத் திரட்டி அவர்களுக்குரிய தேவைகளை யும் முன்மொழிவுகளையும் இந் தக்குழு அரசாங்கத்திற்கு வழங்கும்.

★ உங்களது பார்வையில் சமூகத்தில் முதன்மைப்படுத் தப்பட வேண்டிய விடயமாக எதனைக் கருதுகிறீர்கள்?

முகாமைத்துவம், நிர்வாகம் என்பவற்றோடு தொடர்புடைய வன் என்றவகையில் இந்த நாட்டிலே சகல துறைகளிலும் ஆற்றல் பெற்ற இஸ்லாமிய ஆளு மைகளை உருவாக்குவதுதான் எமது முதன்மைத் தேவையாக இருக்கின்றது என நான் நினைக் கிறேன். ஏனெனில் மனித வளம் என்பது இன்றைய உலகில் ஒரு முக்கிய சக்தியாக இருக்கின்றது.

## கோடீஸ்வரர்களின்... (01ம் பக்கத் தொடர்)

கடந்த வருடம் முதற் தடவையாக ஐரோப்பாவைவிட ஆசியா வில் அதிக எண்ணிக்கையான மில்லியனர்கள் இருந்ததாக மேற் படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிய பசுபிக் பிராந்தி யத்தில் கடந்த வருடம் ஒரு மில்லியன் டொலர்களுக்கு மேல் சொத்துக்களைக் கொண்ட (அவர்களின் வீடுகள் நீங்கலாக) மக்களின் எண்ணிக்கை 3.3 மில்லியனாக இருந்தது. இது முந்தைய வருடத்தை விட 10 சதவீதம் அதிகமாகும்.

இதன்படி 3.1 மில்லியன்; மில்லியனர்களைக் கொண்ட ஐரோப் பாவை ஆசியா முந்தியுள்ளது. வட அமெரிக்கா இதில் முதலிடம் வகிக்கிறது. அங்கு செல்வந்தகர்களின் எண்ணிக்கை 8.6 சத வீதத் தால் அதிகரித்து 3.4 மில்லியனாக உயர்ந்துள்ளது. விரைவில் வட அமெரிக்காவை ஆசியா முந்திவிடும் என மெரில் லின்ச் நிறுவனத் தின் நிர்வாகப் பணிப்பாளர்களில் ஒருவரனான வில்சன் ஸோ கூறியுள்ளார். இதேவேளை உலகிலுள்ள ஒருகோடியே 10.9 மில்லி யன் மில்லியனர்களில் அரைவாசிப் பேர் அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி ஆகிய 3 நாடுகளில் வசிக்கின்றனர்.

மீள்பார்வை

**உள்நாட்டு - வெளிநாட்டு சந்தா விபரம்**

மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 30.00
ஆறு மாத சந்தா - ரூபா 450.00
ஒரு வருட சந்தா - ரூபா 900.00

இந்தியா
தனிப் பிரதி - ரூபா 75.00
ஒரு வருடம் - ரூபா 2000.00

மத்திய கிழக்கு நாடுகள், மலேசியா
தனிப் பிரதி - ரூபா 90.00
ஒரு வருடம் - ரூபா 2500.00

ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், தென்கொரியா
தனிப் பிரதி - ரூபா 120.00
ஒரு வருடம் - ரூபா 3000.00

காசுக் கட்டளை அனுப்ப விரும்புபவர்கள், காசுக்கட்டளை பெறுவோர்: Meelparvai Publishers எனவும், தபால் நிலையம்: Grandpass எனவும் குறிப்பிட்டு அனுப்புமாறு வேண்டுகிறோம். முகவரி: MMC, 2A, Hill Castle Place, Bandaranayake Mawatha, Colombo 12.

MMC

மீள்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/101/NEWS/2011 - ISSN 2012-5038

# பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழிமூலக் கல்வியை அறிமுகப்படுத்த நடவடிக்கை

**எஸ்.பி.**



பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலக் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு முதல் முடியுமான சகல பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலம் போதிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில மொழியை அறிமுகப்படுத்துவதில் வடக்கு கிழக்கில் சிக்கல் நிலவிய போதிலும், தெற்கில் அவ்வாறான பிரச்சினைகள் கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் சகல மாணவர்களும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆங்கில மொழி மூலக் கல்வி மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

மின்னேரியாவில் தலைமைத்துவப் பயிற்சி பெற்றுக் கொள்ளும் மாணவ மாணவியரை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறும் மாணவர்கள் ஆங்கிலக் கல்வியையும் பூர்த்தி செய்தவர்களாகத் திகழ வேண்டும் என்பதே தமது நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.




ஜூலை 6ஆம் திகதி முதல்...

கலாநிதி சுக்ரி அவர்களின் உத்தியோகபூர்வ இணையத்தளம்

www.drshukri.net

MMC
Meelparvai Media Centre

மீள்பார்வை

மீள்பார்வை SMSகளை இலவசமாக பெற்றுக்கொள்ள...

Follow இடைவெளி MEELPARVAI
என Type செய்து 40404
என்ற இலக்கத்துக்கு அனுப்புங்கள்

Follow MEELPARVAI on
twitter





# ரிஸானா நபீக்கிற்கு தண்டனை என்ற செய்தியில் உண்மையில்லை: சவூதி அரசாங்கம்



சவூதியில் பணியாற்றிய மூதூரைச் சேர்ந்த பணிப் பெண்ணான ரிஸானா நபீக்கிற்கு தண்டனை வழங்கப்படவுள்ளதாக வெளியான செய்தியை சவூதி அரசாங்கத் தரப்பு மறுத்துள்ளது. இதனை இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

2005ம் ஆண்டில் குழந்தை ஒன்றுக்கு உணவு வழங்கிய வேளையில் அந்தக் குழந்தை இறந்து விட்டது. இதனையடுத்து ரிஸானா நபீக் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்நிலையில் அவரை மன்னித்து விடுதலை செய்யுமாறு பல்வேறு தரப்புகளும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

குறித்த சம்பவம் இடம்பெற்ற வேளையில் ரிஸானா நபீக்கிற்கு 17 வயதாக இருந்தமையால் அவரைத் தண்டிக்கக் கூடாது என்றும் சவூதி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சில இணையத்தளங்கள் ரிசானா நபீக், சிரச்சேதம் செய்யப்படும் ஆபத்து உள்ளதாக தகவலை வெளியிட்டிருந்தன. எனினும், இந்த செய்தியை சவூதி அரசாங்கத் தரப்பு மறுத்துள்ளது.









Published by Meelparvai Media Centre, 2A, Hill Castle Place, Bandaranayaka Mawatha, Colombo 12. Printed at A.J. Prints, Station Road, Dehiwala.